# இரு படுகொலை

(ஓர் அரிய துப்பறியும் நாவல்)

# MYSTERIES
## OF
# DOUBLE MURDER

---

எம். என். கணேசய்யர்

இயற்றியது.

---

சி. சொக்கலிங்க முதலியாரால்

வெளியிடப்பட்டது.

---

All Rights Reserved] 1935 [Price As. 12

மனோரஞ்சனி அச்சுக்கூடம், சௌகார்பேட்டை, சென்னை.

[illegible library stamp]

[illegible] BY:
V. [illegible]
[illegible] CHETTIAR
PAGANERI.

# இருபடுகொலை.

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION
PAGANERI

# விஷய அட்டவணை.

4196


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | வீணைக் கச்சேரி | 3 |
| 2 | தாயும் மகனும் | 7 |
| 3 | அனாதைப் பிரேதம் | 10 |
| 4 | இரு சகோதரிகள் | 13 |
| 5 | சிலம்பச் சண்டை | 20 |
| 6 | கருணாகரம் எங்கே? | 29 |
| 7 | ஜானகீபதியின் ரஹஸியம் | 41 |
| 8 | பங்கஜவல்லியிடம் இருந்த கடிதம் | 45 |
| 9 | தீ விபத்து | 50 |
| 10 | உயிர் தப்பின சீதா | 58 |
| 11 | மெய்க்காதல் | 65 |
| 12 | ராஜசுந்தரமும் தாண்டவராயனும் | 71 |
| 13 | ராஜசுந்தரமும் தாணிப்பாட்டியும் | 74 |
| 14 | நாகமணி யார்? | 79 |
| 15 | ஸந்தேகம் அறல் | 84 |

உ

முருகன் துணை.

# இரு படுகொலை.

(ஓர் அரிய துப்பறியும் நாவல்)

எம். என். கணேசய்யர்

இயற்றியது.

---

சி. சொக்கலிங்க முதலியாரால்

வெளியிடப்பட்டது.

காபிரைட்] 1934 [விலை ரூ. 0—12—0

PRINTED AT THE
MANORANJINI PRESS,
SOWCARPET, MADRAS.

# இரு படுகொலை

## அத்தியாயம் 1

### வீணைக் கச்சேரி

வஸந்தராஜபுரம் என்ற அழகிய நகரில் சந்திர மௌளி நிலயம் என்றது ஒரு மாளிகை. அனேக ஆயிரம் செலவழித்துக் கட்டிமுடித்து அதில் குடிவந்த ஜானகீபதி என்றவர் ஒரு லக்ஷப்பிரபு எனலாம். அனேக ஸாரக்ஷேத்திரமான இருபோகமுப்போகம் சாகுபடி செய்யத் தகுந்த நிலங்களுடன் கூடிய கிராமங்கள் அவருக்குச் சொந்தமாக விருந்தான. தவிரவும் அநேகம் பாங்குகளில் ஏராளமான பணம் போட்டிருந்தார். பூர்ண லக்ஷ்மீகடாக்ஷம் பொருந்தியவர் அவர் என எல்லோரும் கூற வழக்கப்பட்டிருந்தார்கள். இனறிரவு அவர் சில நண்பர்களுக்கும், பந்துக்களுக்கும் விருந்தளித்து வீணைக்கச்சேரி வைத்து ஆனந்தமாயப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரது அந்தரங்கமான காரியஸ்தர் கருணாகரம் அவரை அணுகி ரஹஸியமாக அவரது கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அதி அவசரமானதாக இராவிடில் தன்னை அப்பொழுது கருணாகரன் அணுகி அக்கடிதத்தைக் கொடுத்திருக்கமாட்டான் என்பது ஜானகீபதிக்குத் தெரியும். ஆதலால் அவர் அதை வாங்கினதுமே அதில் வரையப்பட்டிருந்த சுருக்கமான விலாஸத்தைக் கவனித்தார். உடனே அது எழுதியிருந்தது யார் என்று தெரிந்ததென நினைக்குமாறிருந்தது அவரது முகத்தின் தோற்றம். முகம் வெளுத்து அவரது கைகால்கள் நடுங்கின. ஆனால் அவரிடம் ஏற்பட்ட கலவரத்தைக் கருணாகரம் கவனிக்காமலில்லை. ஆனால் வாய்திறந்து யாதுமே கூறவில்லை.

இரண்டொரு நிமிஷம் திக்பிரமை பிடித்தவர் போலிருந்துவிட்டு மெதுவாக எழுந்து தனது அறைக்குட்செல்ல

முயன்ற அவரது மனைவியான பங்கஜவல்லி யவரை யணுகி, "என்ன விசேஷம்?" என்றாள்.

ஜானகிபதி—: ஒன்றுமில்லை. ஒரு அவஸர மான கடிதம்வந்திருக்கிறது. அதை உடனே நான்கவனிக்க வேண்டும். இதோ திரும்பவும் வந்துவிடுகிறேன்.

தான் ஸாதாரணமாகப் படிக்கவும், எழுதவும், இளைப் பாறவும் உபயோகிக்க வழக்கப்பட்டிருந்த அறைக்குள் ஜானகிபதி சென்றார். அவரது காரியஸ்தர் கருணாகரமும் அவரைப் பின்தொடர்ந்தார்.

ஜானகிபதி:—கருணாகரம்! இக்கடிதம் கொண்டுவந்த வன் இருக்கிறானோ போய்விட்டானோ?

கருணாகரம்—அவன் அப்பொழுதே யாதொரு பதிலை யும் எதிர் பாராதவன்போல் சென்றுவிட்டான்.

ஜானகிபதி:—நான் இப்பொழுது இக்கடித விஷயமாய் அரைமணிநேரம் கவனத்தைச் செலுத்தவேண்டியிருக் கிறது. எல்லோரும் ஸங்கீதத்தில் கவனமாகவிருப்பதால் நான் எழுந்து வந்ததைக் கவனித்திருக்க மாட்டார்கள். அப்படியாராகிலும் கவனித்துக் கேட்டால் இதோ வந்து விடுவேன் எனக்கூறு.

கருணாகரம் வெளியே சென்றதும் ஜானகிபதி அறை யின் கதவைச் சாற்றித் தாளிட்டுவிட்டு ஒரு பக்கத்தில் தொங்கவிடப்பட்டிருந்த திரை ஒன்றை ஒதுக்கினார். அதற் குப்பின் ஒரு பெரிய சுவற்றில் அலமாரி ஏற்படுத்தப்பட் டிருந்ததுபோல் காணப்பட்டது. அதன் கதவைத்திறந் ததும் ஒரு ஆள் போகக்கூடியதான அகல நீளம் வாய்ந்த வாயிற்படி ஒன்று காணப்பட்டது. அதன் வழியாகக் கொஞ்சதூரம்சென்றதும், அவ்வீட்டிலிருந்தும் வெளியேற ஒரு கள்ளவழி ஆரம்பமாயிற்று அதன் வழியே சென்று வீதியை அடைந்து அதிவேகமாகப்போனார் ஜான கிபதி.

* * * * * *

வீணைக்கச்சேரியும் முடிந்தது. வந்திருந்தவர்கள் ஜானகிபதியிடமும் பங்கஜவல்லியிடமும் அனுமதிபெற்றுச்

சென்றார்கள். பிறகு ஜானகிபதி தனது மனைவியைப் பார்த்துத் தனக்குக் குடிக்கக்கொஞ்சம் வெந்நீர் போட்டுவைக்கும்படிச் சொல்லிவிட்டுத் தன் அறைக்குட் சென்றார்.

ஜானகிபதியும் பங்கஜவல்லியும் படுத்துறங்கும் அறையில்அநேக சௌகரியமானஏற்பாடுகள் உண்டு ஒரு மேஜையின் மேல் மின்சார சக்தியினால் பால் ஜலம் முதலியன கொதிக்க வைக்கவோ, காய்ச்சவோ, சூடாக்கவோ கூடிய கெட்டில் இருந்தது. பக்கத்திலிருந்த கூஜாவிலிருந்து கொஞ்சம் ஜலத்தை அதில் கொட்டிக் காயவைத்துவிட்டு, அங்கிருந்த சோபாக்கள் ஒன்றில் உட்கார்ந்து சற்று நேரத்திற்கெல்லாம் பங்கஜவல்லியும் அயர்ந்து தூங்கிவிட்டாள்.

இதற்குள் தனதறைக்குட் சென்ற ஜானகிபதி தன்னுடன் வந்த கருணாகரத்தைப் பார்த்துக் 'கருணாகரம்! ரஹஸிய மார்க்கத்தின் கதவுச்சாவி கெட்டுப்போயிற்று. ஆதலால் விடிந்ததும் ஒரு சாவி போடுகிறவனை அழைத்து வந்து ஒருசாவி போடவை" என்றார்.

கருணாகரமும், "ஆஹா; அப்படியே" என்று சொல்லிவிட்டு அங்கிருந்தகன்றான்.

கொஞ்சநேரம் சென்றது. சட்டெனத் திடுக்கிட்ட ஜானகிபதி சுவற்றில் ஏற்பட்டிருந்த ஒருசிறியபுத்தான் போன்ற முனையை அமுக்கினார். அப்படிச் செய்தால் காரியஸ்தன் கருணாகரமிருந்த அறையில் மணி ஓசை ஏற்படும். அப்படி ஏற்பட்டால் தன்னை ஜானகிபதி கூப்பிடுவது அவனுக்குத் தெரியும்.

சப்தம் செய்யாமல் அங்குவந்த கருணாகரத்தைப் பார்த்துக் "கருணாகரம்! இந்த அறையில் யாரோ வேற்று மனுஷாள் வந்ததாக நினைத்தேன், மூலை முடுக்குகளிலெல்லாம் தேடிப்பார்! அந்த திரைக்குப் பின் பக்கத்திலும் பார்" என்றார். கருணாகரம் தேடித்தேடிப் பார்த்தான். யரையுமேகாணோம்.

ஜானகிபதி:—"என்ன ஆச்சரியம்! ஒருவன் நடமாடினது போன்ற சப்தம் தெளிவாக என் காதில் விழுந்ததே! போகட்டும்! கருணாகரம்! எல்லாவற்றிற்கும் எனது கைத்

துப்பாக்கியை எடுத்து இங்கு மேஜையின்மேல் என் அருகில் வைத்துவிட்டுப்போ."

கருணாகரமும் ஏழு தோட்டாக்கள் அடங்கிய அழகிய கைத்துப்பாக்கி ஒன்றைத் தனது யஜமானுக்கருகில் மேஜையின்மேல் வைத்துவிட்டு அங்கிருந்தகன்றான்.

கொஞ்சநேரம் சென்றது. ஜானகிபதி திரும்பவும்திடுக்கிட்டார். யாரோ இருட்டில் நடமாடினதுபோன்ற சப்தம் காதில் விழுந்தது.

தேஹமாத்தியந்தம் நடுங்க அங்கிருந்த மின்சார விளக்குகளில் இன்னும் சிலதை ஏற்ற, ஜானகிபதி தானிருந்த நாற்காலியிலிருந்து எழுந்திருக்குமுன் அங்கு வந்திருந்த ஒருவன் அவரது வாயை உறுதியாகப்பொத்திக் கழுத்தைச் சாய்த்துக்கொண்டு, தன்னிடமிருந்த கட்டாரியால் அதை அறுத்துவிட்டான். ரத்தம் தாரையாய்ப் பொழிந்தது. ஜானகிபதியும் உயிர் துறந்தார் ஆனால் கொலையாளியை அவர் தனது வாய் பொத்தப்படுமுன் அடையாளங் கண்டு பிடித்து நீயா! என்று கூறினார். ஆதலால்கொலையாளிக்கும்கொல்லப்பட்டவருக்கும் முந்தியே பரிச்சியம் வாய்ந்திருந்தது ஏற்பட்டது. ஆனால் இவ்விஷயம் கொலையாளியைத் தவிர்த்து வேறு யாருக்குமே தெரியாதன்றோ!

பொழுதுவிடிந்தது. சந்திரமௌளி நிலயத்தில் ஏற்பட்ட அமளி சொல்லி முடியாது. போலீஸ்காரர்களும், துப்பறி நிபுணர்களும் ஏராளமாக வந்து கூடிவிட்டார்கள்.

அன்று மாலை எல்லா சமாசாரப் பத்திரிகைகளிலும் ஜானகிபதி கொலையுண்டதைப்பற்றிப் பெரிய தலைப்புகளின் கீழ் விவரிக்கப்பட்டிருந்தது. தவிரவும் அதே பத்திரிகைகளில் இன்னொரு பக்கத்தில் ஒரு ஸ்திரீ நாச்சியார் கோவில் தெருவில் கொலை செய்யப்பட்டிருந்ததும கூறப்பட்டிருந்தது. ஒரே இரவில் ஏற்பட்ட இக்கொலைகள் இரண்டிற்கும் ஏதாவது ஸம்பந்தம் உண்டோ என்பது போகப்போக விளங்கும். இப்பொழுது ஏற்பட்டதெல்லாம்கூடி, லக்ஷப்பிரபுவாக விருந்த ஜானகிபதியும் யாரென்

றதே ஏற்படாத ஒரு ஸ்திரீயும் வெவ்வேறு இடங்களில் ஒரே இரவில் கொலை செய்யப்பட்டிருந்தார்கள் என்பதே.

ஜானகீபதியைக்கொன்றது யாராகவிருக்கலாம்? கருணாகரமாகத் தானிருக்கவேண்டும்! ஏனெனில் அவன்போன விடமே தெரியாது ஓடி விட்டிருந்ததனாலும் தவிர ஜானகிபதி. தான்கொல்லப்பட்ட தினத்திற்கு முந்தின தினம் பாங்கிலிருந்து ஆயிரம் ரூபாய் குடும்பச் செலவிற்காக வாங்கி வந்திருந்த விஷயமும் அது வைக்கப்பட்டிருந்த இடமும் அவனைத்தவிர்த்து வேறெவருக்குமே தெரிந்திருக்கக் காரணமில்லை. அந்தப் பணமும் களவு போயிருந்தது.

நாலாபக்கங்களிலும் தேடிப்பார்த்த துப்பறிவோர்களுக்கு, ஒரு விசித்திரமான கட்டாரியும், ரத்தம் தோய்ந்திருந்த ஒரு கைச்சவுக்கமும் அகப்பட்டதாம். கொலை செய்ய உபயோகிக்கப்பட்ட கட்டாரியும், கொலை செய்தவனது சவுக்கமும் கொலையாளியைக் கண்டுபிடிக்கத் துப்புகளாக ஏற்படுமென்று எல்லோரும் நினைத்தார்கள்.

எல்லாவற்றிற்கும், கருணாகரம் கண்டு பிடித்துக்கைதி செய்யப்பட வேண்டியது அவசியமாக ஏற்பட்டதால் போலீஸ்காரர்களும் அவனைத்தேடித் திரிந்து கொண்டிருந்தார்கள்.

---

## அத்தியாயம் 2

### தாயும் மகனும்

வஸந்த ராஜபுரம் எக்ஸ்பிரெஸில் ஒரு முதல் வகுப்பு வண்டியில் எதிரெதிராக இருவர் உட்கார்ந்திருந்தனர். அவர்களுள் ஒருவர் ஒரு தனவந்தரது புதல்வராக விருக்க வேண்டு மென்பது அவரைக் கவனித்துப் பார்த்தாலே ஏற்படும். மற்றவரது நிலைமை போகப்போக விளங்குமாதலால் அதைப்பற்றி இங்கு ஒன்றும் கூறவில்லை. ரயில் வண்டி ஸ்நேகம் எத்தகைய தென்பது எல்லோருக்குமே தெரிந்திருக்கும். அத்தகைய ஸ்நேகம் கொஞ்சதூரம் ஒரேவண்டியில் பிரயாணம் செய்துவந்த இவர்களுள் ஏற்பட்டதெனில் பொருந்தும். வஸந்த ராஜபுரம்ஸ்டேஷனில்

ரயில் வந்து நின்றதும் பிரிந்துபோய் இவர்களது ரயில் வண்டி ஸ்நேகமும் இருந்தவிடம் தெரியாமல் போய் விட்டிருக்குமென்று இதைப் படிப்பவர்கள் நினைக்கலாம். ஆனால் அது அவ்வளவு சீக்கிரத்தில் நேரவில்லை. வண்டியிலிருந்து இறங்கினதுமே, தனவந்தரது குமாரராகிய ராஜசுந்தரம் தன்னைநோக்கி ஓடிவந்த தன் வேலையாளைத் தன் ஸாமான்களை எடுத்துக்கொண்டு வீடுசெல்லும்படி உத்திரவிட்டுத் தன் நண்பனிடம் உத்திரவுபெற்றுக்கொண்டு வெளியே வந்து, கால் நடையாகச் சென்று கொண்டிருந்தான். அவனது நண்பன் நாகமணியும் அதேவீதியில் அவனுக்குப்பின் கொஞ்ச தூரத்தில் வந்துகொண்டிருந்தான்.

'தேசமித்திரன்! பதினாறு பக்கம்! ஒரு அணா! இருபடுகொலை! தனவந்தர் ஜானகிபதி கொலை செய்யப்பட்ட விஷயம்!'' என்று ஒரு சிறுவன் கூறிக்கொண்டு ராஜசுந்தரத்தின் அருகில் கையில் கொஞ்சம் தேசமித்திரன் தினப்பிரதிகளுடன் வந்தான். திடுக்கிட்டு நடுங்கின அவ்வாலிபனும் கொட்டை கொட்டையான எழுத்துக்களுடன் "ஜானகிபதி கொலையுண்டது'' என்ற நோட்டீஸ் தன்முன் காட்டப்பட்டதைப் பார்த்ததும் அடியற்ற மரம்போல் சாய்ந்தான். விழுந்து அவனது மண்டை உடைந்திருக்கும். ஆனாலச் சமயம பின்னால் வந்து கொண்டிருந்த அவனது ரயில் வண்டி நண்பன்நாகமணி அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

* * * *

மூர்ச்சைபோன ராஜசுந்தரத்திற்குப் பிரக்ஞை வந்ததும் சுற்றிப்பார்த்தான். தான் முன்பின்பார்த்திராத அறையில் ஒரு கட்டிலில் விரித்திருந்த படுக்கையில், படுத்திருக்கக் கண்டான். அவனுக்கு வந்த ஆச்சரியத்திற்கோ அளவில்லை! தான் கனவு காண்பதாக நினைத்துக் கண்களைப் பிசைந்து கொண்டான். திடீரென்று விஷயங்கள் அவனுக்கு ஞாபகத்திற்குவா அனது தேகம் நடுங்கிற்று. இதற்குள் அவ்வறையில் அழகே உருவெடுத்து வந்ததோ என்று அவன் நினைக்குமாறிருந்த காத்திரத்துடன் ஒரு யுவதிவரக் கண்டான். அவள் நாகமணியினது புதல்வி பங்கஜாக்ஷி.

ராஜசுந்தரம்:—இது யார் வீடு? நான் இங்கு எப்படி வந்தேன்? என்று கூறிக் கொண்டிருக்கையில், நாகமணியும் அங்கு வந்து சேர்ந்தான்.

பங்கஜாக்ஷி.—நீங்கள் ஸமாசாரப் பத்திரிகை விற்ற சிறுவன் ஜானகிபதி என்றவர் கொலை செய்யப்பட்டிருந்த விஷயத்தைக் கூறக்கேட்டதும் மூர்ச்சை போனதால் எனது தந்தை உங்களை இங்கு கொண்டு வந்தார். இது எங்களது கிருஹம், பேசிக் களைப்படைய வேண்டாம்.

ஸமாசாரப் பத்திரிகையில் ஏற்பட்டிருந்த தலைவரியை இப்பொழுதும் தனது மனக் கண்ணால் கண்ட ராஜசுந்தரம் நடுங்கினான். பிறகு பங்கஜவல்லியை நோக்கி, "அம்மணி! கொலையுண்டவர் எனது தந்தை" என்றான்.

பங்கஜாக்ஷி:—ஐயோ பாவம்! நீங்கள் ஸங்கதியைக் கேட்டதும் திடுக்கிட்டு மூர்ச்சித்து விழுந்ததும் இயல்பே!

நாகமணி:—இப்பொழுது உடம்பு எப்படியிருக்கிறது?

ராஜசுந்தரம்:—கொஞ்சம் அசதியாக இருக்கிறது. நீங்கள் எனக்கிப்பொழுது பேருதவி புரிந்திருக்கிறீர்கள். இதை நான் எப்பொழுதும் மறவேன். வாடகைக்கு ஒரு குதிரைவண்டி பேசிக்கொண்டுவர ஏற்பாடு செய்தால் நான்வீடுசென்று என் தாய்க்கு ஆறுதல் சொல்லுவேன்.

உடனே குதிரை வண்டி கொண்டுவரப்பட்டது. ராஜசுந்தரமும் தனது மாளிகை வந்து சேர்ந்தான். சேர்ந்த கொஞ்ச நேரத்திற் கெல்லாம் தன் தாயாரையும் கண்டான். வெகுநேரம் வரைக்கும் இருவரும் விசித்தழுது துக்கப்பட்டார்கள்.

ராஜசுந்தரம்:—என் தந்தையைக் கொன்ற பாதகனைக் கண்டுபிடித்துத் தூக்கிலிட்டாலொழிய என் மனக்கொதிப்பு ஆறாது!

பங்கஜவல்லி:—அப்பாவேண்டாம்! பழிவாங்கவேண்டுமென்ற எண்ணத்தை விட்டுவிடு; சுவாமி இருக்கிறார் எதற்கும்!

தனது தாயார் கூறியதைக் கேட்ட ரரஜசுந்தரம் மிகவும் ஆச்சரிய மடைந்தான். தனது தகப்பனார் கொலை செய்

யப்பட்டதைப்பற்றிய விஷயங்கள் தெரிந்திருந்தும், அவள் அவைகளை வெளிப்படுத்தாது மறைக்கப்பார்க்கிறாள் என்ற ஸந்தேஹம் அவன் மனத்தில் உதித்தது. ஆதலால் அவன் அவளைப் பார்த்து அம்மா! இக்கொலையைப்பற்றி உனக்குத் தெரிந்திருப்பதை யெல்லாம் என்னிடம் சொல். இருவருமாகச் சேர்ந்து கொலையாளியைக் கண்டுபிடித்துத் தண்டனைக்குள்ளாக்குவது தெய்வஸம்மதமே யாகும்.

பங்கஜவல்லி:—எனக்கு ஒன்றுமே தெரியாது! தெரிந்திருந்தாலும் நான் விஷயங்களைக் கூறேன் நிச்சயம்! அப்பா ராஜசுந்தரம்! நான் சொல்லுவதைக்கேள், போனது போகட்டும். கொலை செய்தவனைக் கண்டு பிடித்துத் தூக்கிலிட்டால் கொல்லையுண்டவர் உயிர் பெற்று வந்துவிடப் போகிறாரா? யோஜனை செய்துபார். விஷயங்களைக் கிளறாதே. அப்படிக்கின்றி உண்மை வெளிப்படுத்தப் பட்டதேயாகில் நீ பின்னர் பச்சாதாபப்பட்டு உன்னையே நொந்து கொள்ளும்படி நேரிடும்!

ராஜசுந்தரம்:—அம்மா! கொலைசெய்தவனை நிம்மதியாகத் திரியும்படி விடுவது ஸரியா? என் தந்தையைக் கொன்ற பாதகனைக் கண்டுபிடித்துப் பழிவாங்கினாலொழிய என் மனக்கொதிப்பு ஆறாது. யார் என்ன சொன்னாலும் ஸரி. நான் அவனைத்தேடிக் கண்டுபிடித்து அதிகாரிகளிடம் ஒப்புவித்தே தீருவேன்!

பங்கஜவல்லி:—ஸரி! உன் இஷ்டம்போல் செய்து வந்ததை அநுபவி! நானும் அனுபவிக்கிறேன்!

---

## அத்தியாயம் 3

## அனாதைப் பிரேதம்.

ஜானகிபதி கொல்லப்பட்ட ராத்திரியிலேயே நாச்சியார் கோவில் தெருவில் கொலை செய்யப்பட்டிருந்த ஸ்திரீயைப் பற்றிப் போலீசார்களும் துப்பறிவோர்களும் விசாரித்து விசாரித்துப் பார்த்தார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவளை அடையாளம் கண்டுபிடித்துச் சொல்லவந்தும் முடிவில் அவள் யாரென்பதே ஏற்படவில்லை பிரேதத்தை

புகைப்படம் பிடித்துக்கொண்டு அதிகாரிகள் அதை ஒரு கொலை செய்யப்பட்டிருந்த அனாதைப் பிரேதமென்று புதைத்துவிட ஏற்பாடு செய்தார்கள். ஆனால் பிரேதம் புதைக்கக் கொண்டுபோகப் படுவதற்குள் ஒருவன் அங்கு வந்து அப்பிரேதத்தைப் பார்த்தான். தான் எங்கேயோ அவளைப் பார்த்திருந்ததாகக் கூறித் தெளிவாக ஞாபக மிராவிடினும் அதிகாரிகள் அனுமதி கொடுத்தால் தான் அப்பிரேதத்தைத் தன் செலவில் ஒழுங்காக அடக்கம் செய்துவிடுவதாகக் கூறினான். தவிரவும "அனாதப் பிரேத ஸம்ஸ்காரே கோடியக்ஞபலம் லபேத்." அனாதையாக மாண்டுபோனவர்களது பிரேத ஸம்ஸ்காரத்தினால ஒரு வன் ஒரு கோடியாகம் செய்தபலனை அடையக் கூடுமென்று தர்ம சாஸ்திரம் ஏற்பட்டிருப்பதால தன்னை அவ்வாறு செய்து புண்ணியத்தைக் கைக்கொள்ள உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்.

வேண்டிக்கொண்டவனிடம் பிரேதம் ஒப்புவிக்கப்பட்டது. அவனும் ஒரு பணக்காரனாக விருக்க வேண்டுமென்றது ஏற்பட்டது. விசேஷ பணச் செலவு செய்து அப்பிரேதத்தை மிகச் சிறப்புடன் ருத்திர பூமிக்குக் கொண்டு போய்க் கூடவேயிருந்து அடக்கம் செய்து உத்தர கிரியைகளைச் செய்துவைத்தான். அவனுடன் கூடவே இருந்து வேண்டிய உதவிகளை ஒரு அழகிய யுவதி செய்து வந்தாள் அவர்கள் யாராகவிருக்கலாம்? ஒரு அனாதப்பிரேதத்தை அவ்வளவு சிரத்தையுடன் ஏராளமான பணச் செலவிட்டு அவர்கள் அடக்கம் செய்வானேன்? என்ற வதந்தி ஏற்பட்டது. உலை வாயை மூடலாம்! ஊர் வாயை மூடக்கூடுமோ! ஜனங்கள் பலபல பேசிக்கொண்டார்கள்.

போலீஸ்காரர்களும் துப்பறிவோர்களும், பிரேதஸம்ஸ்காரம்செய்து திரும்பிவந்த அவ்விருவர்களையும் கவனிப்பதென்ற தீர்மானத்திற்கு வந்தார்கள். ஸ்மசானத்தில் அவர்கள் பிரேத ஸம்ஸ்காரத்தில் ஊக்கங் கொண்டிருக்கையில் அவர்களைக் கவனித்தவர்களுள் ஒருவன் ராஜசுந்தரம். அவனும் தனது நண்பன் ஒருவனுடன் தேசமித்திரன் ஸமா

சாரப் பத்திரிகையில், "ஜானகிபதியைக் கொன்றவனைக் கண்டு பிடிப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி அளிக்கப்படும்" என்ற விவரம் பிரசுரம்செய்ய ஏற்பாடுசெய்துவிட்டு வந்துகொண்டிருந்தான். மிக்க ஆடம்பரத்துடன் ஒரு ஸ்திரீயினது பிரேதம் மயானத்துக்குக் கொண்டு போகப்படுவதைப் பார்த்துக் கூட்டம் கிட்ட நெருங்கினதும் அவன் திகைத்தான், ஏனெனில் அதன்கூடவே பந்துக்கள்போல் மிக்க விசனத்துடன் போய்க்கொண்டிருந்தது, தான் மூர்ச்சித்த பொழுது பேருதவி செய்திருந்த நாகமணியும், அவனது புதல்வி பங்கஜாக்ஷியுமேயானதால்தான்.

ஸ்மசானத்திற்குக் கொண்டுபோகப்பட்ட அப்பிரேதம் எவரது என்று அங்கிருந்தவர்களில் ஒருவனைக் கூப்பிட்டுக் கேட்டான். ஸமாசாரப் பத்திரிகையில் தனது தந்தை கொல்லப்பட்ட இரவிலேயே கொல்லப்பட்ட ஸ்திரீயின் பிரதமே அஃதெனவறிந்தான் நம் ராஜசுந்தரமும்.

ஒரே இரவில் தனது தகப்பன் கொலையுண்டதைப் போலவே கொலலப் பட்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ள இவள் யாராகவிருக்கலாம்? இவளுக்கும் எனது தந்தைக்கும் ஏதாவது ஸம்பந்தமிருக்கலாமோ? என்ற பற்பல விதமான எண்ணங்களும், ஸந்தேகங்களும் அவன் மனதில் உதித்தன. ஸஞ்சாரப் பிரேதம்போல் என்னென்னவோ எண்ணமிட்டுக் கொண்டே வீடுவந்து சேர்ந்தான்.

இவன்வந்ததும் இவனது தாயார் நீஉனது பிதாவைக் கொன்றவனைக் கண்டு பிடிப்பவனுக்கும், கண்டு பிடிக்க அநுகூலமான துப்புக்கொடுப்பவனுக்கும், வெகுமதியளிப்பதாகப் பிரசுரம்செய்ய ஏற்பாடுசெய்தது வாஸ்தவமா?

மகன்:—ஆமாம வாஸ்தவமே.

தாயார்:—அப்படியானால் உடனே சென்று அப்பிரசுரம் இனி நின்றுபோக ஏற்பாடு செய்.

மகன்:—மாட்டவே மாட்டேன்.

தாயார்:—பிடிவாதம் வேண்டாம். நீ விஷயங்களைத் தெரியாமல் செய்கிறாய்! பின்னர் பச்சாத்தாபப் படுவாய்!

மகன்:—அம்மா! நீ ஏன் விஷயங்களை ஒளிக்கிறாய்? நான் உனது குமாரனே யன்றோ! வாய்விட்டு விஷயங்களை என்னிடம் சொல். இருவருமாகச் சேர்ந்து யோஜனை செய்து யுக்தம்போல் செய்யலாம்.

தாயார்:—சரி!நீயே இப்பொழுது என்னை நிர்ப்பந்திக்கிறாய். என் பதிலைக்கேட்டதும் வருத்தப்படுவாய்.

மகன்:—அம்மா! எப்படிப்பட்ட ஸமாசாரமும் இன்னதென்று ஏற்படாத ஸந்தேககத்தைவிட அதிகமான பாதையும் மனக்கவலையையும் எனக்கு உண்டாக்காது.

பங்கஜவல்லியும் எழுந்து துக்கத்துடன் தேஹ மாத்தியந்தம் நடுங்கக் காதோடு காதாய் அவனிடம் இரண்டொரு விஷயங்களைச் சொன்னாள். அவைகளைக்கேட்டதும் ராஜசுந்தரம் திக்பிரமை பிடித்தவன்போல் கொஞ்சநேரம் நின்று பிறகு அடியற்ற மரம்போல் கீழே சாய்ந்தான்.

மறுநாள் தேசமித்திரன் பத்திரிகையில் ஜானகிபதியைக் கொலை செய்தவனைக் கண்டுபிடிப்பவர்களுக்கு வெகுமதியளிப்பதாக யாதொரு பிரசுரத்தையும் காணோம். நாட்கள் சென்றன போலீஸ்காரர்கள், துப்பறிவோர்கள் இவர்களது முயற்சி பயன் பெற்றதாகக் காணோம்.

---

## அத்தியாயம் 4

## இருசகோதரிகள்

தேவீபுரம் என்ற ஊரில் கிட்டண்ணா என்ற ஒருவன் இருந்தான். அவன் சீட்டாட்டத்தில் தேர்ந்தவன். தனது பிதுரார்ஜிதமான பத்தாயிரம் ரூபாய் சொத்துக்களையும் இழந்த பின் தான் அவனுக்குச் சீட்டாட்டத்தில் பாண்டித்தியம் ஏற்பட்டது. அனது வீட்டுக் கூடத்தில் ஸதா ஒரு பிரப்பம்பாய் விரிக்கப்பட்டே யிருக்கும். பிரதிதினமும் இரவு பன்னிரண்டு மணி வரைக்கும் சீட்டாட்டமும் நடந்துகொண்டிருக்கும்.

கிட்டண்ணாவுக்கு அழகிற் சிறந்த இருகுமாரிகளிருந்தார்கள். அவர்களது தாயார் அவர்களை இரட்டைக் குழ

தைகளாகப் பெற்றுக் கொஞ்சநாள் வளர்த்துப் பிறகு காலம் சென்ருள். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பதற்கிணங்க இக்குழந்தைகளை ரக்ஷிக்க ஒரு துணை ஏற்பட்டது. அப்புக்குட்டி என்ற ஒருவன் அவ்வூரிலிருந்தான். அவன்காலம் சென்றதும் அவனது மனைவி யாதொருகதியுமற்றிருந்தாள். பரமஏழையாகவிருந்த அவள் அக்குழந்தைகளைத் தன் குழந்தைகளைப் போல் பாவித்து வளர்த்து அழகுவாய்ந்த யுவதிகளாகச் செய்து விட்டுக் காலம் சென்ருள். இப்பொழுது அச் சிறுமிகளிருவரும் தங்களது தந்தையை அன்புடன் ஆதரித்து வந்தார்கள்.

தேவீபுரத்தில் காத்திருமா சத்திரம் என்ற ஒரு சத்திரமுண்டு. அதில் வழிப்போக்கர்கள் சௌகரியமாகத் தங்கியிருக்கலாம். இரண்டொரு மாதம் தங்கியிருக்க வேண்டிய ஸௌகரியங்களும் உண்டு. ஒரு நாள் ஒருபணக்கார வாலிபன் ஒரு வண்டியில் அங்கு வந்திறங்கினன். சத்திரத்து மானேஜர் ஓடோடியும் வந்து அவரை அழைத்துச் சென்று உபசரித்தார். அவரது ஸாமான்கள் ஒரு அறையில் கொண்டுபோய் வைக்கப்பட்டன. சற்று நேரத்திற்கெல்லாம் அவரும் ஸ்நானம் சாப்பாடு முதலியன செய்துவிட்டுத் திண்ணையில் படுக்கையை விரித்து படுத்துறங்கிச் சிரம பரிகாரம் செய்து கொண்டார். பிறகு எழுந்து கைகால் முகங்களைக் கழுவிக் கொண்டு சிற்றுண்டி உண்டு காப்பி குடித்தார். பிறகு பொழுதுபோக்க கொஞ்சநேரம் நாவல் வாசித்தார். பட்டினத்து மாப்பிள்ளையின் பட்டிகாட்டு அனுபவத்தைப் பற்றிப் படித்து வயிறு வலிக்கச் சிரித்து விட்டு எழுந்து எதிரே இருந்த நந்தவனத்திற்குட் சென்ருர். அப்பொழுது சூரியாஸ்தமனமாகும்தருணம். இளங்காற்றும் இன்பமாக வீசிற்று. ஒரு மரத்தடியில் போடப்பட்டிருந்த ஆஸனங்கள் ஒன்றில் அமர்ந்தார். சற்றுநேரம் காற்று வாங்கிக்கொண்டிருக்கையில், நமது கிட்டண்ணுவும் அங்குவந்து சேர்ந்தான். சிட்டுக்கச்சேரி அப்பொழுதுதான் கலைந்தது. திரும்பவும்இராப் போஜனமான பிறகுதான் அது

கூடும். தனது குழந்தைகள் சமையல் செய்து முடிக்குமுன் கொஞ்சம் காற்று வாங்கலாமென்று அங்குவந்தான். ஊருக்குப் புதிதான மன்மதன் போன்ற அழகு வாய்ந்திருந்த ஒரு வாலிபன் அங்கு உட்கார்ந்திருந்ததைக் கண்டு, கிட்ட நெருங்கி, அவனுடன் பேசப்புகுந்தான்.

கிட்டண்ணு:—நீங்கள் யார்? இந்த ஊருக்குப் புதிது போல் காண்கிறதே!

வாலிபன்:—ஆமாம் எனது தந்தை வஸந்த ராஜபுரதில் ஒரு ஜமீன். நான் அவரது ஒரே குமாரன். என் பெயர் ஜானகிபதி யாத்திரைசெய்து பலபலவிடங்களைப் பார்த்து வருகையில் இவ்வூரில் தங்க நேர்ந்தது.

ஸரி! இங்கொரு உலக அனுபவ மிராத வாலிபன் கிட்டண்ணுவிடம் அகப்பட்டுக் கொண்டான். தலைமொட்டையாவது நிச்சயம்!

கிட்டண்ணு:—அப்படியா! ரொம்ப ஸந்தோஷம். வாருங்கோளேன். எங்காத்துக்குப் போகலாம். அங்கும் நல்லகாற்று உண்டு.

பேசி ஆளை மயக்குவதில் கிட்டண்ணு மிகவும் கெட்டிக்காரன். ஆதலால் உலகத்தில் சற்றுமே அடிபடாத ஜானகிபதியும், அவன் வைத்த கண்ணியில் அகப்பட்டான் என்பதை நாம் கூறவேண்டியதில்லை.

தேவீபுரத்தில் இரண்டொரு நாள் தங்கி விட்டுப் போவதாக வந்த ஜானகீபதி, இரண்டு மாதமாகியும் அங்கிருந்தகலாது, சுகமாகச் சாப்பிடுவதும், கிட்டண்ணு அண்ட்கோவுடன் சீட்டாடித் தோற்பதுமாகக் காலத்தைக் கழித்து வந்தான். உண்மையை எடுத்துக்கூறுமிடத்து, அவனைக் காந்தம் இரும்பை இழுப்பது போல் இழுத்தது ஊர் தேவீபுரமல்ல; கிட்டண்ணு முதலானோர்களது ஸ்நேகமும் அவர்களுடன் சீட்டாடித் தோற்பதால் ஏற்பட்ட உற்சாகமும் அல்ல; கிட்டண்ணுவின் அழகிய குமாரிகளே அவன் அவ்வூரை விட்டகலாததற்குக் காரணமெனலாம். அவர்களுள், முதல்வள் பெயர் சந்திரவதனு. மற்றவள் பெயர் குமுதவல்லி. அவ்விரு கன்னிகைகளிடமும், ஆரம்

பத்தில் ஜானகீபதியின் கவனம் சென்றது. ஆனால் நாள டைவில், அவனுக்குச் சந்திரவதனை விடமிருந்து பற்று முற்றிலும் நீங்கிக் குமுதவல்லியினிடம் காதல் அதிகரித் தது. நமது கதா பாத்திரங்கள் ஏற்பட்டிருந்த காலத்திய நாகரீகம், தற்கால நாகரீகம்போன்றதன்று. சிறுவர் சிறுமி கள் யாதொரு ஸங்கோசமின்றி ஒருவருடன் ஒருவர் பேசிப் பழகலாம். ஸ்திரீ புருஷர்களுள் காந்தர்வ விவாஹமும் அதிக ஸஹஜம். ஒரு வாலிபனும் ஒரு யுவதியும், ஒரு வருக்குமே சொல்லாமல், அதி ரஹஸியமாகக் கலியாணம் செய்துக்கொள்ளலாம். ஆனால் அப்படிச் செய்து கொண்ட கலியாணம், ஒரு புரோஹிதரால் நடத்தி வைக்கப் பட வேண்டும், பின்னர் கஷ்டம் ஏற்படாதிருக்க அப்புரோஹி தரும, தம்பதிகள் ஒவ்வொருவருக்கும் இருவரும் கையெ ழுத்துச் செய்துள்ள கடிதங்கள் தயார்செய்து கொடுத்து விடுவார். தவிரவும், புருஷன் ஜீவித்திருக்கையில் ஒரு மனைவியும், மனைவி ஜீவித்திருக்கையில் ஒரு புருஷனும், மறு விவாஹம் செய்து கொள்ளக்கூடாது. அப்படிச் செய்து கொண்டார்களேயாகில் கடுந்தண்டனைக்காளாவார் கள்.

தேவீபுரம் ஒரு சிறிய ஊர் ஆதலால், ஜானகீபதி போன்ற அதிக அழகு வாய்ந்து, லக்ஷ்மீ கடாக்ஷம் பொருந் தியுள்ள வாலிபர்களை அங்கு காண்பது கஷ்டம். தவிர, அனேக நாட்கள் நெருங்கிப் பழக்கப்பட்ட காரணத்தால் கிட்டண்ணாவின் குமாரிகளிருவருமே அவன் மீது காதல் கொண்டனர். ஆனால் அவர்கள் தங்களது காதலைப்பற்றி ஒருவரிடமும் வெளியிடவில்லை.

ஒரு நாள் இரவில் இளந்தென்றல் இன்பமாய் வீசிற்று. சந்திரனும் அழகாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். கிட்டண்ணாவின் வீட்டிற் கெதிரில் ஒரு நந்தவன மிருந்த விஷயம் நம்மால் முன்னரே கூறப்பட்டது. தூக்கம் வராத காரணம் பற்றி நம் ஜானகீபதியும், அங்கு வந்து சற்றுநேரம் உலாவித்திரிந்து காற்றுவாங்கினான். பிறகு உட்காரலா மென்று ஒரு பெரிய ஆலமரத்தடியில் போடப்பட்டிருந்த

ள் ஒன்றின் அருகில் வந்து சேர்ந்தான். அதில் டருவெடுத்து வந்ததோ என நினைக்குமாறிருந்த ஒரு தி நித்திரை செய்து கொண்டிருக்கக் கண்டான், முதல் திடுக்கிட்ட போதிலும், மறைந்திருந்து அவளைக் கவனித்து ஆனந்திக்கத் தீர்மானித்தான். அப்படிச் செய்தல் அயோக்கியத்தனமென்று அவனது மனச்சாக்ஷி அவனுக்கு எடுத்துக் கூறிற்றெனலாம். ஆயினும் அவன் அதை லக்ஷியம் செய்யவில்லை. பருவமோ வாலிபப் பருவம்; காலமோ வஸந்தகாலம்; வீசியதோ தென்றல்;எங்கும்பரவியிருந்ததோ நிலா;இருந்த இடமோ ஏகாந்தமான உத்தியானவனம். ஒரு ஜிதேந்திரியனும் நமது ஜானகீபதியின் ஸ்தானத்திலிருந்திருந்தால் மயங்கிப் போயிருப்பான். ஆதலால் அவன் மயங்கிக் காமவசமானதும் ஆச்சரியமோ!

“ஆ! அனங்க! ரதிமதன! மன்மத! ஏன் என்னை வாட்டுகின்றனை!” என்றாள் அங்கு தூங்கிக் கனவுகண்டு கொண்டிருந்த குமுதவல்லி.

ஜானகிபதி:—அடடா! இங்கே உறங்குவது குமுதவல்லியே! என் உள்ளத்தைக் கவர்ந்துகொண்ட அவள் கனவில் மதன பாதையை அநுபவிப்பது அவளது பேச்சிலிருந்து ஏற்படுகிறது! ஜாக்ர அவஸ்தையில் ஏற்படும் எண்ணமே பெரும்பாலும் கனவில் ஜனங்களால் உளறி விடப்படுவது இயல்பு. இப்பெண்மணியின் காதலுக்குக் காரண பூதமானவன் யாரென்று இவள் கூறுவதிலிருந்து ஏற்படினும் ஏற்படலாம். ஆதலால் கவனிப்பேன்.

மறுபடியும் குமுதவல்லி “உமது ஹிருதயத்தை நான் அறியேன். ஆனால் இரவும் பகலுமாக மன்மதன், தன் மலர்ப்பாணங்களால் என்னை வாட்டுகிறான். ஓ ஜானகீபதி! என்மீது கருணையில்லையோ உமக்கு” என்றாள்.

ஜானகீபதி:—“தன்யன் ஆனேன்! என் கண்மணி என்னைக் காதலிக்கிறாள்! அவள் விழித்துக்கொண்டதும் அவளிடம் எனக்கு அவள்மீதுள்ள காதலைப்பற்றிக் கூறுவேன்,” என்று தனக்குட் சொல்லிக்கொண்டான்.

ஒரு ஆந்தை ஒன்பதுதரம் கத்திற்று. ஒருதரம்

புரோஹிதர் ஒருவர், ஆந்தை கரைதலைப் ப[illegible] பத்துமாகில் உத்தமம் மிகவும் நன்று" என்[illegible]ந்தது இப்பொழுது ஜானகீபதிக்கு நினைவு[illegible]வுள் கிருபை! என் மனோரதம் நிறைவேறும்! நான் [illegible]பெண் மணியை, இக்கண்மணியை, இக்காதற்கிளி[illegible] மணந்து கொள்வது நிச்சயம்" என்று கூறிக்கொண்டான்.

ஆந்தை கத்தினதால் விழித்துக்கொண்ட குமுதவல்லியும் கண்களைப் பிசைந்துகொண்டு எழுந்து உட்கார்ந்து நாலு பக்கங்களிலும் சுற்றிப்பார்த்தாள். சற்று மறைவாக நின்றுகொண்டிருந்த ஜானகீபதியும், தான் அங்கிருந்ததைக் காட்ட மெதுவாக இருமினான்.

திடுக்கிட்ட குமுதவல்லியும் "யாரது? யார் அங்கே?" என்றதும், "கண்மணி! நான் தான் ஜானகீபதி" என்றான். வெட்கித் தலைகுனிந்த குமுதவல்லி, "நீங்கள் இங்கு எப்பொழுது, எப்படி வந்தீர்கள்?" என்று கேட்க, ஜானகீபதி:—என் காதற்கிளியே! தூக்கம் வராததால் இங்குவந்து காற்றில் வெப்பத்தைத் தணித்துக்கொள்ள நினைத்தேன். துயில் கொண்டிருந்த உன்னைப் பார்த்தது வேறு நினைவின்றி நின்றுவிட்டேன்.

தன்னை ஒரு புருஷன் கண்மணியே என்றும், காதற்கிளியே என்று கூப்பிட்டதைக்கேட்ட குமுதவல்லியின் அழகிய செந்தாமரைபோன்ற முகம் வெட்கத்தால் சிவந்தது. குனிந்த தலையை நிமிர்த்தாமல் "நீங்கள் இவ்வாறு என்னிடம் நடந்துகொள்வது உசிதமோ" என்றாள்.

ஜானகீபதி:—"நான் அப்படி ஒழுங்குதப்பி நடந்துகொள்ளவில்லையே! ஸ்திரீ புருஷர்கள், ஒருவரை ஒருவர் நேசிப்பதும் மணந்து கொள்வதும் இயற்கை தானே! நான் உன்னைக் காதலிப்பதில் தவறு என்ன? வேண்டுமானால் நாளைக்கே உன் தகப்பனாரிடம் எனக்கு உன்மீதுள்ள காதலைப்பற்றிக்கூறி, அவர் அனுமதிபெற்று உன்னை மணந்துகொள்வேன். எனது குலம் கோத்திரம் முதலியன உத்கிருஷ்டமானவைகளே."

குமுதவல்லி, புன்சிரிப்பை அடக்கிக் கொண்டு, "நீங்

கள் கூறுவது வெகு அழகாக இருக்கிறதே! ஏதோ எனக் கிஷ்டம், ஆதலால் பாதிக்கலியாணம் முடிவு என்பார்களே, அதுபோல அல்லவோ இருக்கிறது!"

ஜானகிபதி—அப்படி ஒன்றுமில்லை. இருவருக்கும் இஷ்டம். ஆதலால் முழுக் கலியாணமும் முடிவே!

குமுதவல்லி:—நீங்கள் சொல்வதின் தாற்பரியம் எனக்கு ஏற்படவில்லை.

ஜானகிபதி:—கண்மணீ! ஏன் ஒளித்துப் பேசுகிறாய்? நான் உன்மீது காதலுற்றிருப்பது போலவே நீயும் என் மீது காதலுற்றிருக்கிறாய்! இஃதுண்டோ இல்லையோ?

குமுதவல்லிக்கு ஏற்பட்ட ஆச்சரியத்திற்கோ அள வில்லை. ஜானகிபதியைப் பார்த்து, "என் மனதில் இருப் பது உமக்கெப்படித் தெரிந்தது?" என்று கேட்டாள்.

ஜானகிபதி:—பேஷ்! அப்பா ருதிருக்குள் இல்லை! அல்லவா?

தன் பேச்சினாலேயே தனக்கு ஜானகிபதியினிடம் ஏற்பட்டிருந்த காதலை ஒத்துக்கொண்டதை அப்பொழுது தான் உணர்ந்த குமுதவல்லிக்கு, யாது கூறுவதென்று தெரியவில்லை. ஏதோ சொல்லவேண்டும் என்று நினைத்து, "என் கேழ்விக்குப் பதிலில்லையே நீங்கள் கூறியது".

ஜானகிபதி:—காதலி! என்மீது கோபம் கொள்ளாதே. காதல் பொல்லாது. இந்த ஏகாந்தமான விடத்தில், பூரண சந்திர ஒளியில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த உன்னைப் பார்த்ததும் அறிவு கலங்கி ஸ்தம்பித்து நின்றுவிட் டேன். தாமரை மலரில் வீற்றிருப்பதாகக் கூறப்படும் ஸ்ரீ தேவியைப்பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றவன் எப் படி ஆனந்த மடைவானோ, அவ்வித ஆனந்த மடைந்து நின்று விட்டேன்.

குமுதவல்லி:—போதும் ஸ்தௌத்யமான பேச்சு. அதெல்லாம் எனக்கெதற்கு! என் மனதிலிருப்பது உங்க ளுக்குத் தெரிந்ததெப்படி?

ஜானகிபதி:—அதைத்தானே சொல்லப்போகிறேன்.

குமுதவல்லி:—விளைத்து விளைத்துப் பேசிக் கொண்டு அதைச் சொல்லிவர எவ்வளவு காலம் பிடிக்கும்?

ஜானகீபதி:—கண்மணி! நான்கூறிவிடுகிறேன். ஆனால் உனக்கு என்மீது காதல் ஏற்பட்டிருப்பது உண்மைதானே என்பதை மட்டும் முந்திக்கூறி விடு.

குமுதவல்லி:—(புன்சிரிப்புடன்) அதுதான் ஏற்பட்டு விட்டதே! அப்பா குதிருக்குள் இல்லை என்றுதான் கூறி விட்டேனே!

ஜானகீபதிக்கு ஏற்பட்ட சந்தோஷத்தால் அவன் ஆநந்தக் கூத்தாட ஆரம்பித்து விட்டான். வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு, குமுதவல்லியும், அவனை ஸாகஸமாகப் பேச்சுக்கொடுத்துக் கனவில் தான் உளற அவன் கேட்ட விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொண்டாள்.

பரஸ்பரமான காதல் ஏற்பட்ட ஒரு வாலிபனும் யுவதியும், ஏகாந்தமான உத்தியான வனத்தில் சந்தித்திருக்க நேரிடின், ஏற்படுவது காந்தர்வ விவாஹமேயன்றோ! துஷ்யந்தன் சகுந்தலையைக் காந்தர்வ விவாஹம் செய்து கொண்டதுபோல், ஜானகீபதியும் குமுதவல்லியைக் காந்தர்வ விவாஹம் செய்துகொண்டு விட்டான். அவர்கள் அவ்வாறு கலியாணம் செய்து கொண்டதை நிரூபிக்க, ஒரு புரோகிதரிடமிருந்து, அக்காலத்திய நாகரீகப்படித் தம்பதிகளுக்கு திருமணச் சீட்டுத் தயார் செய்தளிக்கப்பட்டது.

தன் குமாரி குமுதவல்லி, ஜானகீபதியைக் காந்தர்வ விவாஹம் செய்து கொண்டது, கிட்டண்ணாவுக்குத் தெரியாது. அவனது இன்னொரு குமாரி சந்திரவதனாவுக்கும் தெரியாது. தக்க இடங்களில் தனது குமாரிகளைக் கலியாணம் செய்வித்து, ஏராளமான திரவியத்தைப் பெற்று தன் வறுமையைப் போக்கிக் கொள்ளக் கருதியிருந்தான் நமது கிட்டண்ணா!

## அத்தியாயம் 5.

## சிலப்பசச்சண்டை.

கிட்டண்ணா வீட்டுக் கூடத்தில். ரங்கு பரிலாச் சீட்டாட்டம் வெகு விமரிசையாக ஆடப்பட்டு வந்தது. இன்

றைய தினம் உலக அனுபவமே யிராத ஒரு வாலிபன் கிட்டண்ணாவின் வலையில் சிக்கிக்கொண்டு சீட்டாடி, ஏராளமான பணத்தைத் தோத்திருந்தான். பம்பாபதிபுரத்தில் பௌண்டரீகன் என்ற ஒரு கனவான் இருந்தார். அவர் ஒரு பெரிய தனவந்தர். அவரது குமாரன் வாசுதேவன் தன் தந்தை இறந்ததும் அவரது சொத்துக்கள் தன் கைக்கு வந்ததுமே அவைகளைச் சின்னாபின்னமாக்கித் தாறுமாறாக விற்று வந்த பணத்தை மனம்போன வழியெல்லாம் செலவிட்டுத் திரிந்துகொண்டு, தெய்வச் செயலாய் தேவீபுரம் வந்து சேர்ந்தான். கழுகுக்கு மூக்கில் வேர்க்கும் என்பார்களே அதற்கிணங்க, எப்படியோ அவன் வந்தது கிட்டண்ணாவுக்குத்தெரிந்துவிட்டது· சாமர்த்தியமாய், ஏதோ தற்செயலாக அவனைச் சந்தித்ததாக நினைக்கக்கூடிய மாதிரிச் சந்தித்து ஸ்நேகம் செய்துகொண்டு, அவனது யோக க்ஷேமங்களைத் தெரிந்து கொண்டதும், பின்வருமாறு யோஜனை செய்யலானான்:—

"இச்சிறுவன் ஒரு வெள்ளைச்சோளம். உலக அனுபவமே சற்றும் வாய்ந்திராதவன். இவனை ஏமாற்றிப்பணம் பறிப்பது கஷ்டமே இல்லை. இந்த ஜானகிபதி இதுவரைக்கும் நமது சூழ்ச்சியை அறியாது ஏமாந்து, சீட்டாட்டத்தில் தோர்த்து வந்தது வாஸ்தவமே. சில ஜனங்களை ஒருவன் எப்பொழுதுமே மோசம் செய்துகொண்டு வரக்கூடும். எல்லோரையுமே ஒருவன் சிலகாலம் மோசம் செய்து வரலாம். ஆனால் எல்லோரையுமே எப்பொழுதும் ஒருவன் மோசம் செய்துகொண்டே வருவதென்பது முடியாத விஷயம். ஆதலால், இந்த ஜானகிபதி விழித்துக்கொண்டு விட்டாலோ, அவனிடமிருந்து லாபம் வருவது நின்று போவது நிச்சயம். தவிர வெகு நாளாக அவனது இறகுகள் பிடுங்கியாகிவிட்டது. ஆதலால் புதிய பறவை ஒன்று கைக்குள் இருக்கவேண்டியது அவசியம்."

மேலே கூறப்பட்டவாறு யோஜனை செய்த பிறகு, வாசுதேவனை மிகவும் தந்திரமாகத் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து விருந்து செய்வித்தான்.

கொஞ்சம் கொஞ்சமாகச் சீட்டாட்டத்தில் இழுத்தான். "கெண்டையைப் போட்டு விராலை இழு" என்பதற் கிணங்க, ஆரம்பத்தில் அவனை ஆட்டத்தில் கெலிக்கு மாறு விட்டுப் பின்னர், படிப்படியாகவும், மிக்க ஸாமர்த்தி யத்துடனும், அவனிட மிருந்து ஏராளமான பணத்தைப் பரித்துக்கொண்டான். இன்று வாசுதேவன் தோர்த்த ஆயி ரம் ரூபாயைக் கொடுக்க வழியில்லாமல் அவன் திண்டாடி ஞன். ஆனல் கிட்டண்ணு அவனைப் பின் வருமாறு ஆசுவா ஸப்படுத்தினன்.

"அப்பா வாசுதேவா! கவலைவேண்டாம். நீ தோர்த் திருக்கும் ஆயிரம் ரூபாய்க்கும் ஒரு ஐ. ஓ. யூ. அதாவது பிராயஸரிநோட்டு எழுதிக் கொடுத்தால் போதும். ஊருக்கு எழுதிப் பணம் வந்ததும் கொடுத்துவிட்டு அதை வாபஸ் வாங்கிக்கொண்டு விடலாம்" என்ருன்.

நமது கிட்டண்ணுவிடம் எவ்வளவோ ஐ, ஓ. யூ.க்கள் ஜானகிபதியும் வாசுதேவனும எழுதிக்கொடுத்தவை இருந் தன வென்பது நாம் கூருமலே விளங்கும்.

ஜானகிபதி, உலக அனுபவ மிராவிடினும் மிகவும்யோக் கியன், முன் ஜாக்கிரதையுள்ளவன், மிகவும் பணக்கா ரன். தன்னல் எவ்வளவு கஷ்டமின்றித் தோற்க முடியுமோ அவ்வளவு தோற்கும் வரைக்கும் தான் சீட்டு ஆடுவான். இப்பொழுதும், தான் எழுதிக் கொடுத்திருந்த பிராமஸரி நோட்டுகளின் தொகைகளை அவன் அனுயாஸமாகக் கொடுத்துவிட முடியும். ஆனல் வாசுதேவனே அத்தகைய நிலைமையில் இல்லை. அனேகமாய்த்தன் ஆஸ்திகளை யெல் லாம் துன்மார்க்கத்திலும், குதிரைப் பந்தயத்திலும் வைத் துத் தோர்த்துவிட்டிருந்தான். ஆதலால் அவன் கிட்டண் ணுவுக்குக் கடன்பட்ட தொகையைக்கொடுப்பது முடியாத விஷயம்!

நிற்க, தலையெடுக்க முடியாதபடிச் சீட்டாட்டத்தில் தோர்த்திருந்த வர்சுதேவனது முகத்தில் ஏற்பட்டிருந்த கவலைக்குறியைப் பார்த்த ஜானகிபதியின் மனம் இளகி விட்டது. சென்ற சில நாட்களாகவே அவன், கிட்ட ண்ணு

ஒரு பெரிய அயோக்கியன் என்ற விஷயத்தை அறிந்திருந்தான். மோசக்காரச் சூதாடிகள், சிற்சில இடங்களில் குடைந்து பாதரஸம் ஊற்றிக் கனம் ஏற்படுத்தியிருக்கும் பகடைக்காய்களை உபயோகித்துக் கெலிப்பது வழக்கம். அப்பியாசத்தினால், எப்படித் திரும்ப விரும்பினார்களோ அப்படி அப்பகடைக்காய்கள் திரும்பிவிழும்படி அவைகளைப்பற்பல இடங்களில் அமுக்கிப் பிடித்துக் குலுக்குவது போல் நடித்துப்போட்டுக் காரிய சாதனம் செய்துகொள்வார்கள். அதுபோலவே, சீட்டுக்கட்டுகளிலும் கண்களுக்குத் தெரியாதபடி ஊசியினால் குத்தி அடையாளங்கள் உண்டு பண்ணிக்கொண்டு ஆடுவார்கள். சீட்டுகள் போடும்பொழுது கையினால் தடவிப்பார்த்துப் போடுவதால், இன்னகையில் இந்தச் சீட்டுகள் போகின்றனவென்பது, மோச எண்ணத்துடன் ஆடுகிறவர்களுக்கு ஏற்பட்டுவிடும். ஆதலால் அவர்கள் சுளுவில் தோற்காமல் கெலிக்கமுடியும்.

கிட்டண்ணா, ஊசிக்குத்து அடையாளங்களுடன் கூடிய சீட்டுக் கட்டுகளை உபயோகித்து மோசஞ்செய்து கெலித்து வரும் விஷயம் ஜானகீபதிக்குத் தெரிந்திருந்தது. ஆயினும், தனது மாமனார் என்ற காரணம் பற்றித்தான் அதைக்கவனியாதவன் போலவே இது வரைக்கும் நடந்துகொண்டு வந்தான். தான் மாத்திரம் மோசம் போவதென்றால் அவன் லக்ஷியமே செய்திருக்கமாட்டான். ஆனால் வாசுதேவன் போன்றவர்கள் ஏமாற்றப்பட்டுநாசமடைவதை, வாய்திறவாமல் பார்த்துக் கொண்டிருக்க அவன் மனச்சாக்ஷி இடம் கொடுக்கவில்லை. ஆதலால் திக்பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டிருந்த அச்சிறுவனை யணுகி, "அப்பா! வாசுதேவா! நீ தைரியத்தைக் கைவிடாதே! நான் உன்னைக்காப்பாற்றுகிறேன்" என்றான்.

கிட்டண்ணா திடுக்கிட்டான். குற்றமுள்ளநெஞ்சம்குருகுரு என்னும் என்பார்களே யன்றோ! பிறகு தைரியத்தைக் கைவிடாமல் ஜானகீபதியைப்பார்த்து "இயற்கை தானே நண்பர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டியதே. நீங்கள் கொடுப்பதாக ஒத்துக்கொண்டால், வாசுதேவன்

ஏன் இன்னம் நாலைந்து ஆட்டம் ஆடிப் பார்க்கக்கூடாது. சீட்டாட்டத்தில் அதிர்ஷ்டம் சட்டெனத் திரும்புவதும் ஸஹஜம். செலித்துக்கொண்டே வந்த பக்கம் செலித்துக் கொண்டே வருவது மியல்பு'' என்றான்.

எழுந்து வந்த கோபத்தை அடக்கிக்கொண்ட ஜானகீபதி கிட்டண்ணாவைப்பார்த்து "கிட்டண்ணா! சீட்டாட்டத்தில் உங்கள் வீட்டில் நீங்கள் வைத்திருக்கும் சீட்டுக்கட்டுக்களை உபயோகித்து ஆடி வேற்று மனிதர்கள் ஜெயிப்பதென்பது முடியாத விஷயம். நான் உங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கும் ஐ ஓ யூ.க்களுக்குப் பணம்கொடுத்துவிடத் தயார். ஆனால் இப்பேதைச் சிறுவன் எழுதிக்கொடுத்திருக்கும் பிராமஸரி நோட்டுக்களை இந்தக்ஷணமே கிழித்து,ரத்து செய்து கொடுத்து விடவேண்டும்'' என்றான்.

கிட்டண்ணாவின் முகத்தில் கோபாக்நி ஜ்வலித்தது. எள்ளுப்போட்டால் வெடிக்கும். கண்கள் கோவைப்பழம் போல் சிவந்தன;உதடுகளும் மீசையும்துடித்தன.ஜானகீபதியைப் பார்த்து, "நீ கூறுவதின் தாற்பரியம் எனக்கு ஏற்படவில்லை. வாசுதேவனுக்கும் எனக்கும் மத்தியில் குறுக்காக வந்து பேச நீயார்? உனது கடையைக் கட்டு'' என்றான்.

ஜானகீபதி.—வாசுதேவனது விஷயத்தில் தலையிட்டுக் கொள்வதும் தலையிட்டுக் கொள்ளாததும் என் இஷ்டம். நான் தலையிட்டுக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். அவனது புரோ நோட்டுக்களைத் திருப்பிக் கொடுக்கப் போகிறீரா இல்லையா?

கிட்டண்ணா.—கொடுக்கப் போவதில்லை.

ஜானகீபதி.—வேண்டாம். பேசாமல் கொடுத்துவிடும். வீணாக மானத்தைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம்.

கிட்டண்ணா.—உனது மிரட்டலுக்கு நான் பயப்பட்டவன் அல்ல. பனங்காட்டு நரியா சல சலப்புக்கு அஞ்சும்! கிட்டண்ணா ஒரு பனங்காட்டு நரி ஞாபக மிருக்கட்டும்!

ஜானகீபதி.—ஆமாம்! கபடத்தில் நீர் ஒரு பனங்காட்டு நரியல்ல. ஆயிரம்நரிக்குச்சமான மானவர்! அது கிடக்கட்டும். இது வரைக்கும் வாசுதேவனது பிராமஸரி நோட்டுக்களை

மா த்திரமே ரத்து செய்து கொடுக்கும்படிக்கேட்டேன். நீர் எனது மாமனுரே என்ற காரணம் பற்றி, எனது பிராமஸரி நோட்டுக்களையும் ரத்து செய்து கொடுக்கும்படிக் கேழ்க்க வில்லை உமது. நடத்தையால், என்னை நிர்த்தாக்ஷணியமாய் நடந்து கொள்ளச் செய்துவிடப் போகிறீர்! அவ்வளவே!

திகைத்துப் போன கிட்டண்ணு, என்ன சொன்னுய்? நான் உனது மாமனுரா? மரியாதை கெட்டுப் போவாய்! ஜாக்கிரதை! பேச்சை அடக்கியும் நிறுத்தியும் பேசு.

ஜானகிபதி.—சள சள வென்று ஏன் ஓய் பேசுகிறீர்? நீர் எனது மாமனுரே! நான் உமது மாப்பிள்ளையே! உமக்குத் தெரியாமல் நான் உமது குமாரி குமுதவல்லியைச் சிலநாட்களுக்கு முந்திக் காந்தர்வ விவாஹம் செய்துகொண்டேன்.

சந்திரவதனு என்ற கிட்டண்ணுவின் மூத்த குமாரியும் ஜானகிபதியைக் காதலித்தாள் என்ற விஷயம் முன்னரே நம்மால் கூறப்பட்டுள்ளது. மேற்கூறியுள்ள சச்சரவுகளையெல்லாம் மிகவும் ஊக்கத்துடன் கவனித்து வந்த அவள், குமுதவல்லியை ஜானகிபதி மணந்து கொண்டதாகக் கூறக்கேட்டதும் பொறுமை கொண்டு ஓடிவந்து, கிட்டண்ணுவைப் பார்த்து, "அப்பா! இப்பாவி சொல்வது பொய்! சுத்தப் பொய்! இவன் பேச்சை நம்பவேண்டாம்" என்றுள்.

ஜானகிபதி:—யார் என்ன சொன்னுல் தான் என்ன! உண்மை உண்மையே! அதுபோகட்டும். நீர் இப்பொழுது என்ன செய்யப்போகிறீர் சொல்லும்?

கிட்டண்ணு:—ஸரி தான் நான் எதற்காக என்னிடமுள்ள பிராமஸரி நோட்டுக்களை ரத்து செய்துகொடுத்து நான் கெலித்துள்ள தொகையை இழக்கவேண்டும்?

ஜானகிபதி:—நீர் கிரமமாகக் கெலித்திருந்தால் நான் உம்மை அப்பணத்தை இழக்கும்படிச் செய்யமாட்டேன். மோசம் செய்து கெலித்த பணம் அது.

கிட்டண்ணு:—நானு மோசம்செய்து கெலித்தேன்.

ஜானகிபதி.—ஸரி! இனி உமது யோக்கியதை வெளிப்படுத்தப் படவேண்டுமாகும்!

கிட்டண்ணு—ஏன் ஓய் அகடவிகடம் செய்கிறீர் ? நீர் சொல்வதை நிரூபியும் பார்க்கலாம்.

ஜானகீபதி—"அப்படியா! நிரூபிக்கவா வேண்டும்" என்று கூறிக்கொண்டு அங்கு சிதரிக் கிடந்த சீட்டுக்களைச் சேர்த்தெடுத்து, அவைகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஊசிக் குத்துக் குறிகளை அவருக்கும் இன்னும் அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் காட்டினார்.

தப்பவழியில்லை என்றறிந்த கிட்டண்ணுவும், "இந்தச் சீட்டுக்கட்டுகள் குறிகளுடன் கூடியிருந்த விஷயம் எனக்குத் தெரியவே தெரியாது. யாரோ என்னைக் கெடுக்கச் செய்துள்ள சூழ்ச்சியே தவிர வேறில்லை. நீர் எனது குமாரியை மணந்து கொண்டதாகக் கூறி இவ்வாறு நடந்து கொண்டிருப்பதால், மோசக்காரத்துரோகி நீரே! எனக்குத் தெரியாமல் என் குழந்தையை ஏமாற்றிக் கலியாணம் செய்து கொண்ட குற்றத்தின் தண்டனையை அடையாமல் தப்பித்துக்கொள்ள, இந்தச் சூழ்ச்சி செய்து அபாண்டமாய் என் மீது பொய்க்குற்றம் சாட்டப்பார்க்கிறீர்! ஆனால் நான் உம்மைத் தண்டிக்காமல் விடப்போவதல்லை" என்றார்.

நமது கதாநாயகர் காலத்தில், விரோதம் ஏற்பட்ட இருவர்கள், துவந்த யுத்தம் செய்தோ, சிலம்பச்சண்டை போட்டோ, கத்தி, கைத்துப்பாக்கி முதலியவைகளை உபயோகித்தோ, ஒருவரை ஒருவர் காயப்படுத்த முயல்வது வழக்கம். சிற்சில சமயங்களில் அவர்கள் கொல்லப்பட்டு விடுவதும் உண்டு. இப்பொழுது கிட்டண்ணு, சிலம்பச் சண்டையில் ஜானகீபதியை இழுத்துக்கொன்று விடுவதென்று தீர்மானித்தான்.

* * * * * * * *

மண்டை உடைந்தான் பாழ், அடப்பங்காடு, பனங்காடு, மேட்டுத்தடல் முதலிய சிற்சிலஇடங்கள் ஜனப்பழக்கமின்றித் துவந்த யுத்தம், சிலம்பச்சண்டை முதலியவைகளுக்கு எடுத்தவைகள். மேலே கூறிய சச்சரவு நடந்த இரண்டு தினங்களுக்குப் பிறகு, ஜானகீபதியும், கிட்டண்ணுவும், ஒரு ரணவைத்தியருடனும் இரண்டொரு

அந்தரங்க நண்பர்களுடனும், மேட்டுத் தடலுக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கொரு பெரிய ஆலமரத்தடியில், ஒரு மணற்பாங்கான விடத்தில் சிலம்பச் சண்டைசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜானகிபதி சிலம்பச் சண்டையில் மிகவும் கைதேர்ந்தவன். கிட்டண்ணாவுக்கு அவ்விஷயம் தெரியாது. ஆதலால் எளிதில் தான் அவனை அடித்து வீழ்த்தி விடலாமென்று எண்ணியிருந்தான். ஆனால் சண்டை ஆரம்பமானதும் எதிராளியின் சாமர்த்தியத்தையும் அவனது அற்புதமான கைலாகவத்தையும் கண்டு அவன் ஆச்சரியமடைந்தான். சீக்கிரத்தில் சண்டை முடிந்திருக்கும். ஆனால் ஜானகிபதி கிட்டண்ணாவினது அடிகளைத்தடுத்துக்கொண்டு மாத்திரம் வந்தானே ஒழிய தான் அவனைத் தாக்க முயற்சி செய்யவே இல்லை. கடைசியாக அவன் கிட்டண்ணாவினது ஒரு பலத்த அடி, தன்மீது தாக்காது தடுக்கத் தனது சிலம்பக் கழியைப் பலமாகச் சுழற்றி வீச நேர்ந்தது. போராத காலத்தால் அது கிட்டண்ணாவின் தலையில் பலமாகப்பட்டதும் அடியற்ற மரம்போல் சாய்ந்து உயிர்துறந்தான்.

* * * *

குமுதவல்லிக்குத் தன் தகப்பனிடம் அத்தியந்த வாஞ்சை ஏற்பட்டிருந்தது. தனது கணவன் கடின ஹிருதயத்துடன் தனக்கு உயிருக்குயிரான பிதாவை அடித்துக் கொன்ற ஸங்கதி கேட்ட அவள் அவனது முகத்திலேயே விழிப்பதில்லை எனத் தீர்மானித்தாள். ஜானகிபதி எவ்வளவோ தரம் அவளை சந்தித்துப் பேசித் தான் நிரபராதியென்றும், கிட்டண்ணா கொல்லப்பட்டது போராத காலத்தினாலேயே யென்றும், நிரூபிக்க முயற்சி செய்தான். அது பயன்படவில்லை. ஒரே பிடிவாதமாய்க் குமுதவல்லி, தன் பிதாவின் மரணத்திற்குக் காரணமாயிருந்தவனுக்கும் தனக்கும் யாதொரு ஸம்பந்தமும் இருக்கக் காரணமில்லை யெனக்கூறி, அவனைப்பார்க்க மறுத்து விட்டாள்.

ஜானகிபதியும் தேள் கொட்டின திருடன் போல் தன்

வர் வந்துசேர்ந்தான். தன் கதி கலியாணமாகியும் பிரம்ஹ சாரி என்றதுபோல் ஆயிற்றே என்று நினைத்து நினைத்து வருந்திக் கசிந்தழுதான். நாட்டு நாகரீகம், ஒரு மனைவி யிருக்க இன்னொருத்தியை மணந்து கொள்ள இடங்கொடுக் காதே யன்றோ! ஒரு மனைவியிருக்கத் தெரியாமல் அவள் இறந்து போனதாக நினைத்து மறுவிவாஹம் செய்துகொண் டவனது குழந்தைகள், பிறகு உண்மை வெளிப்படின் விப சாரி பெற்ற குழந்தைகளாகவே கருதி அவமதித்து நிந் தித்து நடத்தப்படுவது வழக்கம். அப்படியிருக்கத்தான் காந்தர்வவிவாஹம்செய்துகொண்ட மனைவி உயிருடனிருக் கையில் ஜானகீபதி புனர்விவாஹம் செய்து கொள்வதும் முடியாத விஷயமே யன்றோ !

நாட்கள் கழிந்தன. கலியாணம் செய்து கொள்ளாத ஸ்திரீகள்,விதவைகள், முதலானோர்களை வைத்து ஆதரிக்கக் கன்னிகா மடங்கள் என்ற இடங்கள் உண்டு. அதில் போய்ச் சேருகிறவர்கள் சாகும் வரைக்கும் ஆதரிக்கப் படுவார்கள். அங்கவர்கள் கல்வி முதலியன கற்கலாம். ராமாயணம் முத லிய புஸ்தகங்களைப் படித்து பக்திபண்ணிக் கொண்டிருக்க லாம், இன்னும் வேறு அனேக விதமாய்க்காலம் கழிக்கக் கூடிய ஏற்படுகளும் அவைகளில் உண்டு. அவைகள் ஒன் றில்போய்ச் சேர்ந்திருந்தாள் குமுதவல்லியும்.

சந்திரவதனுவோவெனில், அவள் ஒரு தனிகனை மணந்துகொண்டு, ஒரு பெண்மகவைப் பெற்றெடுத்திருந்த போதிலும், ஜானகீபதியையும் அவனிடம் அவளுக்கிருந்த காதலையும் மறக்கவே இல்லை.

* * * *

ஒரு நாள் ஜானகீபதிக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

கௌதமி கன்யா மடம்,
பிரபவ ஹூ வைகாசிமீ 15ம் தேதி.

மகா-ா-ா-ஸ்ரீ, ஜானகீபதி அவர்களுக்குத் தெரிவிப்பது.

சென்ற செவ்வாய்க் கிழமைதினம் மாலை நாலு மணிக்கு உமது மனைவி குமுதவல்லி சிவலோகப் பிராப்தியானாள்.

கன்யாமட விதிப்படி அவள் அடக்கம் செய்யப்பட்டாள். மேற்கொண்டு செய்யவேண்டிய உத்தரகிரியைகளைச் செய்ய வேண்டியது உங்கள் கடமை.

இப்படிக்கு,
விசாலாக்ஷி அம்மாள்,
மானேஜர்.

மேற்படி கடிதத்தைப் படித்தபிறகு ஜானகீபதி வெகு நேரம்வரைக்கும் விசித்து அழுதான். பின்னர் சில நாட்கள் கழிந்து துக்கம் ஆறினது கயைக்குச்சென்று குமுதவல்லிக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளையெல்லாம் செய்துவிட்டுத் திரும்பி ஊர் வந்து சேர்ந்தான்.

வெகுநாள் வரைக்கும் மறு கலியாணம் செய்துகொள்ளும் எண்ணமே அவனிடம் ஏற்படவில்லை யெனினும், இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவனவன்றோ? அதே போல் சிலநாட் கழித்து பங்கஜவல்லி யென்னும் பெண்மணியை மணந்து ஒரு குழந்தையும் பிறந்தது. அக்குழந்தையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வரப்பட்டு வாலிபதிசையை அடைந்ததும் தேச சஞ்சாரம் செய்து மனவிரிவை அடையப் பிதாவின் அனுமதி பெற்றுச் சென்றான். அவன் தான் முன்னரே ஆரம்பத்தில் கூறியுள்ள ராஜசுந்தரம்.

---

## அத்தியாயம் 6
## கருணாகரம் எங்கே ?

ஜானகீபதியின் அந்தரங்க காரியஸ்தன் கருணாகரம். சிறு பிராய முதல் அவரிடம் வேலை பார்த்து வந்தவன். தவிர அவனது பெற்றோர்களும் மூதாதைகளும் பரம்பரையாக ஜானகீபதியின் குடும்பத்தில் வேலை பார்த்திருந்தவர்கள். அவ் வமிசத்திலேயே எஜமானத்துரோக சிந்தனை லவலேசமும் ஏற்படக் காரணமில்லை. ராஜசுந்தரத்திற்கு அந்த விஷயம் நன்கு தெரியும். தனது தந்தையைக் கொன்றது அவன் அல்லவென்று அவன் நிச்சயப்படுத்திக்கொண்டான். ஆனால் தன் தந்தை கொலையுண்ட விஷயத்தில்

தன் தாயாருக்கும், இந்தக் கருணாகரத்திற்கும் அனேக ஸங்கதிகள் தெரிந்திருக்கவேண்டுமென்று அவன் எண்ணினான். தாயார் சொல்லாவிடினும் கருணாகரத்தைக் கண்டு பிடித்துவிட்டால் விஷயங்கள் விளங்கலாம், அல்லது சரியான துப்புக்கள் கிடைக்கலாமென்பது அவன் கருத்து.

ஜானகிபதி கொலையுண்ட விஷயத்தில் போலீஸார் முதலானோர் ஸந்தேஹித்த பெயர்வழி கருணாகரம். அவனை எல்லோரும் தேடிக்கொண்டிருந்தார்கள். தனது தாயார் கேட்டுக்கொண்டதன்மேல், ராஜசுந்தரம் துப்பறிவோர்களது உதவியை நாட முயற்சி செய்யவில்லை. ஆனால் தன் தந்தையைக் கொன்றவனைக் கண்டு பிடித்துத் தண்டித்துப் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் அவனை விட்டகலவில்லை. ஆதலால் தானே ஒரு துப்பறிபவனாக ஏற்பட்டுக் கொலை செய்தவனைக் கண்டு பிடிப்பதெனத் தீர்மானித்தான். தவிரவும் தனது மனக் கலவரத்தை ஒருவாறு ஆற்றிக்கொள்ளத் தனது பிதா பற்பல விடங்களில் ஏற்படுத்தியிருந்த விடுதிகளைப் பார்த்துக்கொண்டே துப்பறியும் வேலையையும் கவனித்துவந்தான்.

ஹேமாத்ரி பங்தி என்ற ஓர் மலைத்தொடரை ஜானகிபதியின் பாட்டனார் ஸர்க்காருக்கு ஏராளமான பணங் கொடுத்துத் தன் வசப்படுத்திக் கொண்டிருந்தார். அதன் அடிவாரத்தில் விசாலமான பூமி வெகு காலமாகக் கரம்பாகக் கிடந்தது. அது ஜலவஸதி இராததால்மிகச் செழிப்பாகவிருந்தும் சாகுபடி செய்ய முடியாமலிருந்தது அந்நிலங்களை யெல்லாம் ஜானகிபதியின் தகப்பனார் ஸர்க்காரிடமிருந்து தர்க்காஸாகப்பெற்று ஹேமாத்ரி பங்தியில் உற்பத்தியாகி ஓடின ஸுவர்ணமுகி என்ற ஒரு காட்டாறை ஏராளமான பணச்செலவு செய்து அணைக்கட்டித் திருப்பிக் கொண்டுவந்து ஜலவளம் உண்டாக்கிப் பயிர்செய்து ஏராளமான லாபத்தை அடைந்தார். நமது ராஜசுந்தரமும் எங்கெல்லாமோ சுற்றிக்கொண்டு அந்தப் பக்கம் வந்து சேர்ந்தான். தனது பூஸ்திதிகளைச் சுற்றிப்பார்க்கப் போகுமுன்

அவைகளுக் கருகிலிருந்த கோமளாபுரத்தின் சத்திரத்தில் ஒரு விடுதி ஏற்படுத்திக்கொண்டு அதில் தங்கினான்.

இக்கதையில் கூறப்பட்டுள்ள ஸம்பவங்கள் நேர்ந்த காலத்தில் அனேகமாக ஒவ்வொரு கிராமத்திலும் ஊரிலும் வழிப்போக்கர்களும் மற்ற ஊருக்குப் புதிதாக வந்தவர்களும் தங்கியிருக்கத் தர்மசத்திரங்கள் ஏற்பட்டிருந்தது அச் சத்திரங்கள் ஒவ்வொன்றிலும் ஒருமானேஜர் இருப்பான். தங்கினவர்களுக்குச் சமயல் செய்து போட்டு, அவர்களது ஸௌகரியங்களைக் கவனிப்பதற்கு. அவர்கள் அவனுக்குப் பணம் கொடுத்து உதவி புரிவார்கள்.

கோமளா புரத்துச் சத்திரத்தின் மானேஜர் கோவிந்தசாமியும் அவனது மனைவி சிவகௌரீ என்றவளும், அச் சத்திரத்திலேயே இருந்துகொண்டு. வந்தவர்களுக்குச் சமயல் செய்து போட்டு அதனால் வரும் பணத்தைக்கொண்டு காலக்ஷேபம் செய்து வந்தார்கள். தவிரவும் ஜானகீபதியின் முன்னோர்கள் அச்சத்திரத்தின் பாதுகாப்பிற்காகக்கொஞ்சம் நிலம் மானியமாகவும்விட்டிருந்தார்கள் அதில் விளையும் மகசூலும் கோவிந்தசாமி அனுபவித்து வந்தான். ஆதலால் சத்திரம் மானேஜர்கள் ஜானகீபதியாவது அல்லது அவரது குடும்பத்தவர்கள் யாராவது வந்தால் கைகட்டிக்கொண்டு ஊழியம் செய்வது வழக்கம்.

சிவகௌரீயின் தமக்கை ஹேமாத்ரி பந்தியின் சரிவில் கட்டப்பட்டிருந்த பங்களாவை பெருக்கிப் பெருக்கிப்பாழடையாமல் பாதுகாக்க நியமிக்கப்பட்டிருந்தாள். அவள் பெயர் ஸம்பூரணம். அவளது காலக்ஷேபத்திற்கும் ஜானகீபதியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ராஜசுந்தரத்தைக் கோவிந்தசாமி சிறுவயதில்தான் பார்த்திருந்தான். ஆதலால் இப்பொழுது அவன், அவனை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. யாரோஒரு வழிப்போக்கன் என்று நினைத்திருந்தானே தவிர வேறில்லை. ஆனால் அவனது மனைவி சிவகௌரீக்கோ, ராஜசுந்தரத்தின் முகம் வேற்று முகமாகத் தோணவில்லை. முந்தித்தான்

பார்த்திருந்த முகமாகவே காணப்பட்டது. யாராகவிருக்க லாமென்று யோஜித்துப் பார்த்தாள்.

சரியாய் அஸ்தமித்து ஜாமப் பொழுதானதும் எல்லோருக்கும் சத்திரத்தின் கூடத்தில் இலை போடப்பட்டது. போஜனாநந்தரம் எல்லோரும் சத்திரத்தின் மெத்தையின் மேல் ஏறிஅங்கு திறந்த வெளியில் விரித்திருந்த பெரப்பம் பாயில் உட்கார்ந்து, தாம்பூலம் தரித்துக் காற்று வாங்கிக் கொண்டே பேசிப் பொழுது போக்க ஆரம்பித்தார்கள்.

நவமங்கலம் நாராயணசாமி, சாத்தனூர் சாரங்கபாணி, கீரனூர் கிட்டாச்சி, முதலியவர்கள் வம்புபேசிக் கொண் டிருந்தவர்களுள் முக்கியமானவர்கள்.

ஹேமாத்ரி பங்தியின் சிகரத்தில் ஒரு வெளிச்சம் தென்பட்டது. அதை முதல் முதல் பார்த்த நாராயண சாமி "அதோ தெரிகிறது பாருங்கள் பைசாச விளக்கு" என்றதும், எங்கே? எங்கே! என்று கூறிக்கொண்டு எல்லோரும் நாராயணசாமி கூறிய திசையை நோக்கி உற்றுப் பார்த்தார்கள். யாதொரு சந்தேஹமுமே இல்லை. ஒரு பாறையின்மேல் அமைக்கப்பட்டிருந்த அறை ஒன்றின் விளக்கு வெளிச்சம் தெளிவாகக் காணப்பட்டது.

சாரங்கபாணி முதலானோர் தாங்கள் பார்த்த விளக் கின் வெளிச்சத்தை, நாராயணசாமி பைசாச விளக்கின் வெளிச்சம் என்றதற்குக் காரணம் கேட்டார்கள். அதற் கவன் வெகு காலத்திற்கு முந்தி அவ்விளக்குக் காணப் பட்ட அறையில் ஒருவன் தூக்கிட்டுக் கொண்டிறந்ததாக வும், அவனது ஆவேசம், இராக்காலங்களில் அவன் முந்தி செய்ய வழக்கப்பட்டிருந்தபடி அவ்வறையில் விளக்கேற்றி வைத்துக்கொண்டு அலைந்து திரிவதாகவும் கூறினன்.

அவ்வூரில் வெகுநாளாக வசித்துவந்த ஒருவன் "அந்த வெளிச்சம் காணப்படுவது சென்ற சில தினங்களிலிருந்தே யென்று நான் நிச்சயமாய்க் கூறுவேன்" என்றான்.

இதுவரைக்கும் வாய்திறவாது உட்கார்ந்திருந்த மற்றவர் கள் கூறியதைக் கவனித்துவந்த ராஜசுந்தரம், 'அவ்விளக்கு ஸாதாரண விளக்கோ அல்லது பைசாச விளக்கோ என்

பது நாளையதினம் எனக்கு ஏற்படும். ஏனெனில் நான் நாளையதினம் அங்கு போகப் போகிறேன்" என்றான்.

அப்பொழுது தற்செயலாய் அங்குவந்த சிவகௌரி யின் காதில், ராஜசுந்தரம் கூறியது விழுந்ததும் அவள் திடுக் கிட்டாள். இவன் யாரென்றது இப்பொழுது அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. எல்லோரும்கீழே இறங்கிவந்து நித்திரை யின் வசப்பட்டதும், அவள் கொஞ்சமும் சத்தம் செய் யாமல் வெளிக்கிளம்பிச் சென்று தன் தமக்கை ஸம்பூர ணத்தின் விடுதியடைந்து மெதுவாகக்கதவைத் தட்டினாள்.

ஸம்பூரணம்.—யார் கதவைத் தட்டுவது இந்நடுநிசியில்?

சிவகௌரி.—அக்கா! நான்தான் சிவகௌரி.

தனது தங்கை அகாலத்தில் தன்னைத்தேடி வந் தது ஸம்பூரணத்திற்கு அதிக ஆச்சரியத்தை விளைவித்தது. கதவைத்திறந்து அவளை உள்ளே அழைத்துச் சென்று உட் காரச்செய்த பிறகு, அந்நடுநிசியில் அவள் அங்கு வந்ததற் குக் காரணத்தைக் கேட்டாள்.

சிவகௌரி.—அக்கா ஜாக்கிரதை! ஜானகிபதியின் குமா ரன் சத்திரத்தில் வந்து தங்கியிருக்கிறான். நாளை விடிந்ததும் இங்குவரப் போகிறான். முன்னமேயே எச்சரிக்கை செய்ய எல்லோரும் தூங்கினதும் ஓடிவந்தேன்!

ஸம்பூரணம் தனது தங்கையின் வார்த்தைகளைக் கேட்ட தும் திகைத்து நடுங்கினாள். கைகளைப் பிசைந்தாள். பிறகு ஒருவாறு தைரியத்தைக் கைப்பற்றினவளாய்த் தங்கையை இராத்திரித்தங்கி விடிந்ததும் போகுமாறு கூறினாள். ஆனால் அவள் ஸம்மதியாமல் அங்கிருந்து அப்பொழுதே அகன்றாள்.

* * * * * *

பொழுதுவிடிந்தது. ராஜசுந்தரமும்பல்தேய்த்து அற் பாகாரம் செய்துகொண்டு, ஸம்பூரணத்தின் பாதுகாப்பிலி ருந்த தனது பங்களாவுக்குப் போகப் புறப்பட்டுச் சென் றான். தன் தங்கை சிவகௌரியால் முன்னமே எச்சரி தப்பட்டிருந்த ஸம்பூரணமும் அவன் வரவை எதிர்பார்த் துக் கொண்டிருந்தாள். ஆனால் தான் அப்படி எதிர்பார்த் துக்கொண்டிருந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

யாரோ கதவைத்தட்டின சப்தம் கேட்டது. முந்தியே ஜன்னலின் வழியாக வந்தது யாரென்று பார்த்துத் தெரிந்து கொண்டிருந்த ஸம்பூர்ணமும், ஒன்றுமே தெரியாதவள் போல் "யார் அது?" என்றாள்.

ராஜசுந்திரம்.—ஸம்பூரணம்! நான்தான் ராஜசுந்தரம். கதவைத்திற.

கதவும் உடனே திறக்கப்பட்டது. ஸம்பூர்ணமும் அவனது வரவால் அதிக ஆச்சரியத்தையும் ஸந்தோஷத்தையும் அடைந்ததாகக் காட்டிக்கொண்டு நடித்தாள். தன் வேலைகளில் ஊக்கமுள்ளவள்போல் நடித்தபோதிலும், அவள் மனது நிம்மதியாக இருக்கவில்லை. எங்கு ராஜசுந்தரம் இரவில் அங்கு தங்கத் தீர்மானித்து விடுவானோ என நடுங்கினாள். ஜானகீபதியின் கோரமான அகால மிருத்தியுவில் ஆரம்பித்துப் பற்பல விஷயங்களில் பேச்சைத் திருப்பி மெதுவாக அவனது நோக்கத்தை அறிய முயற்சி செய்தாள். அது பயன்பெறவில்லை.

ராஜசுந்தரம்.—ஸம்பூரணம்! நீ எவ்வளவு காலமாய் எங்கள் குடும்பத்தில் வேலைபார்த்து வருகிறாய்?

ஸம்பூரணம்.—எனக்கு விவரம் தெரிந்தது முதல்.

ராஜசுந்தரம்.—கருணாகரம் எவ்வளவு காலமாக எங்கள் குடும்பத்தில் வேலை பார்த்து வருகிறான்?

ஸம்பூரணம்.—தொட்டிலில் குழந்தையாக விருந்தது தொடங்கி உங்கள் தாய் தந்தையர் அவனைப் பாதுகார்த்து வந்தார்களே யன்றோ! எனக்கூறி நடுங்கிக் கண்ணீர் சொரிந்தாள்.

ராஜசுந்தரம்.—அப்படிக்கிருக்க அவன் நன்றி கெட்டு எனது தகப்பனாரைக் கொலை செய்திருப்பானா?

ஸம்பூரணம்.—அடக்க முடியாத வியாகூலத்தை யுடையவள்போல அபிநயித்து, "அவன் ஒரு தங்கக்கம்பி. உமது தாய்தந்தையர்களுக்காகத் தனது உயிரையும் கொடுக்கத் தயாராக விருந்தவன். அவனா எஜமான் ஜானகீபதியைக் கொல்லுவான்! என்ன அபாண்டமான பேச்சு!"

ராஜசுந்தரம்.—ஒரு வகாலத்து வாங்கின வக்கீலை விட அதிகமாக நீ அவன் பக்கம் பேசுவதைப் பார்த்தால்.........

ஸம்பூரணம்.—அப்பா ராஜசுந்தரம்! நான் அவன் பக்கம் பேசாமல் வேறு யார் பேசுவார்கள்! பேசக்கூடியவர் ஜானகிபதி. அவரோ இப்பொழுது உயிருடனில்லை. அவரது மனைவி பங்கஜவல்லி அம்மாள் அப்படிச் செய்யலாம். அதனால் யாது நன்மை ஏற்படப்போகிறது?

ராஜசுந்தரம்.—ஸரி. இவ்விஷயமான பேச்சு உனக்கு மனவருத்தத்தை யுண்டாக்குவதாகத் தெரிகிறது. நிற்க கிளிக்கூடு எத்தகை நிலைமையிலிருக்கிறது?

நாராயணசாமி முதலானோர் பைசாசவிளக்கின் வெளிச்சம் பார்த்த அறைக்குத்தான் கிளிக்கூடு என்ற பெயர். ராஜசுந்தரத்தின் கேழ்வியினால் ஸம்பூரணம் பிரமித்துப் போனாள். பேசமுயன்றாள். நாவெழவில்லை. தேகமாத்தியந்தம் நடுங்கிற்று. அவளது கலவரம் ராஜசுந்தரத்திற்கு வியப்பை உண்டாக்கிற்று. கொஞ்சநேரத்திற்கெல்லாம் தன்னைத்தானே தைரியப்படுத்திக்கொண்ட ஸம்பூரணமும் அதிக ஹீனஸ்வரத்துடன், "அப்பா ராஜசுந்தரம்! அக்கிளிக்கூட்டு அறையைப் பெருக்கி மெழுகி வெகு நாளாயிற்று. எங்கும் ஒரே குப்பையாக விருக்கும். ஒட்டடையும் எட்டுக்கால் பூச்சியும் காப்பும் நிரம்பி யிருக்கும். அதில் விளக்கு வெளிச்சம் ஏற்பட்டு வெகு நாளாயிற்று. நீ வருவதாக முன்னமே தெரிந்திருந்தால் நான் அதை சுத்தப்படுத்தி வைத்திருப்பேன்" என்றாள்.

ஸம்பூரணத்தின் செய்கையும், நடத்தையும், கலவரமும் ராஜசுந்தரத்திற்கு வியப்பைக் கொடுத்தன. தான் நேரில் கிளிக்கூட்டறையில் விளக்கு வெளிச்சத்தைப் பார்த்திருக்கையில் அங்கு விளக்கேற்றி வெகு நாளாயிற்றென்று அவள் கூறியது சுத்தப் பொய் என்று அவனுக்கு ஏற்பட்டது. பிசாசு ஸம்பந்தமான வெளிச்சம் அல்லவென்றதை அவன் சிறிதும் நம்பவில்லை. ஆதலால் அவன் திரும்பவும் "ஸம்பூரணம்! ஏன் பொய் பேசுகிறாய்? நேற்றிரவு

சத்திரத்தின் மெத்தையிலிருந்து பார்க்கையில், அக்கிளிக் கூண்டறையில் விளக்கு வெளிச்சம் காணப்பட்டதே!"

ஸம்பூரணம்.—இருக்கலாம்! இருக்கலாம். எனக்கிப் பொழுது ஞாபகம் வருகிறது. நான் நேற்று அவ்வறையின் அருகில் ஒரு விளக்கேற்றி வைத்திருந்தேன். ஆனால் அவ் வறைக்குள் கால் எடுத்து வைத்து வெகு நாட்கள் ஆயின,

ராஜசுந்தரத்தின் மனதில் ஏற்பட்ட ஸந்தேஹம் ஊர்ஜிதப்பட்டுவிட்டது. ஸம்பூரணம், தன்னை அவ்விடம் இராத்திரித் தங்காமல் போய்விடும்படிச்செய்ய முயல்கிறாள் என்பது அவனுக்கு நன்கு தெரிந்துவிட்டது. ஆதலால் அவன் தனக்குள்,"ஹூம் இவள் தடுக்கின் கீழ் நுழைந்தால் நான் கோலத்தின்கீழ் நுழைவேன்! இவளை ஏமாற்றி இந்தக் கிளிக்கூட்டறையில் நடப்பதை இன்றிரவு தெரிந்துகொள் வேன!" என்று தன்னுட் சொல்லிக்கொண்டே, அவளைப் பார்த்து "ஸம்பூர்ணம்! பாதகமில்லை! நான இன்றிரவு சத்திரத்தில் தங்கிக் கிழக்கு வெளுத்ததும் ஊருக்குப் புறப்பட்டுப் போகவேண்டும். அவஸரமான வேலைகள் இருக்கின்றன· ஆதலால் என்னைப்பற்றியும் எனது ஸௌ கரியத்தைப் பற்றியும் உனக்குக் கவலைவேண்டாம்" என்றான்.

ஸம்பூரணத்தின்பயமும்,பெருத்தகவலையும் நீங்கிற்று 'மலைபோல வந்தவினை பனிபோல் நீங்கிற்று' என்பது. போல், 'என்கவலைநீங்கிற்று' என்று அடிக்கடித் தனக்குள் சொல்லிக் கொண்டாள். பிறகு வீட்டுக் காரியங்களைக் கவனித்து, ராஜ சுந்திரத்திற்கும் ஸ்நானபானுதிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாள். போஜனனந்தரம் ராஜசுந்தரமும்,அஸ்தமிக்கும்வரைக்கும் தனது நிலங்களைச் சுற்றிப்பார்த்து வீட்டுத்திரும்பி வந்து, ஸம்பூரணத்தினி டம் சொல்லிக்கொண்டு புறப்பட்டுச் சென்றான்.

இரவு மணி பத்து அடித்தது. பதினொரு மணியும் அடித்தது. கிளிக்கூட்டறையில் யாதொரு விளக்கு வெளிச் சமும் ஏற்படவில்லை. எல்லோரும் அயர்ந்து தூங்கும் நடுசி

வரைக்கும் அங்கு விளக்கு வெளிச்சம் ஏற்படாது பின்னர் ஏற்பட்டது!

.—ராஜசுந்தரம். "ஸரி! இப்பொழுது பரிசோதனை செய்துகிளிக்கூட்டறையின் இரகஸியத்தைவெளிப்படுத்தி விடுவேன்" என்று தனக்குட்சொல்லிக்கொண்டு,சத்திரத்தி லிருந்து புறப்பட்டுத் திரும்பவும் ஸம்பூர்ணம் இருந்த விடு திக்கு வந்து,கதவைத் தட்டினான். யாதுசெய்வாள் அவள்? தன்னால் செய்யக்கூடியது செய்தாகிவிட்டது! இனி நடந்த படி நடக்கட்டும்! தெய்வம் விட்டவழி விடட்டும்! என்று நினைத்துக் கதவைத் திறந்தாள்.

ராஜசுந்தரம்.—ஸம்பூரணம்! நான் முந்தி ஆலோசனை செய்து உன்னிடம் கூறிய தீர்மானத்தை மாற்றவேண்டி வந்தது. ஏனெனில் நான் எதற்காக வந்தேனோ அதை மறந்தே போனேன். கிளிக்கூட்டறையில், என் பிதாவின் மேஜையின் அறையிலிருக்கும் சில கடிதங்களும் தஸ்தாவே ஜுகளும் வேண்டியிருக்கிறது. சுக்கிரோதயமானதும் புறப்பட்டுப் போகப்போகிறேன். ஆதலால், இப்பொழுதே சென்று அவைகளை எடுத்துக்கொள்கிறேன்.

வேறுவழியிராததால் ஸம்பூரணம் ஒரு கைவிளக்கை எடுத்துக்கொண்டு, ராஜசுந்தரத்தை கிளிக்கூட்டறைக்கு அழைத்துச் சென்றாள். ஆனால் போகும்பொழுது அவள் அடிக்கடி உரக்க இருமியதும், சப்தம் செய்ததும், கதவின் பூட்டைத்திறக்க ஆவசியமாய்க் காலஹரணம் செய்ததும் ராஜசுந்தரத்தால் கவனிக்கப் படாமலிருக்கவில்லை.

"ஹூம்! உள்ளே இருக்கும் ஆஸாமியை எச்சரிக்கச் செய்யும் சூழ்ச்சியே இவைகள்! அந்த ஆசாமி யாராக இருக்கலாம்? யாராக இருந்தால் என்ன! எல்லாம் தெரிந்து விடுகிறது இரண்டொரு நாழிகைக்குள்" என்று ராஜசுந்தரம் தனக்குட் சொல்லிக்கொண்டான்.

ஸம்பூர்ணம் என்னதான் காலஹரணம் செய்த போதிலும், கடைசியாகக் கிளிக்கூட்டறையின் கதவுதிறக்கப்பட்டது. ராஜசுந்தரமும் உள்ளே சென்று, கைவிளக்கின் உதவிகொண்டு நாலாபக்கங்களிலும் சுற்றிப்பார்த்தான்.

யாரையுமே அங்கு காணோம். தன் தகப்பனார் மேஜையைத் திறந்து அதிலிருந்து சில கடிதங்களையும் தஸ்தாவேஜு களையும் எடுத்துக்கொண்டு போவதாகப் பாசாங்கு செய்து அங்கிருந்தகன்றுவிட எண்ணினான். ஆனால் அதே சமயத்தில் காலால் எதையோ மிதித்தான். என்னவென்று பார்க்கக் குனிந்து அதைக்கையில் எடுத்தான். அது ஒரு ஸாம்பாரின் சுத்திரிக் காய்தான்! பிறகு அங்கு மிங்கும் தேடினான். சாதம், பருப்பு, கறி,கூட்டு முதலியன சிந்திக் கிடந்ததைக் கண்டான். பிறகு ஒரு மூலையில் சாப்பிட்ட எச்சில் இலையும் சுருட்டிவைக் கப்பட்டிருந்தது.

ஸரி! சற்றுமுன் தான் ஒருவன் இங்கு போஜனம் செய்திருந்தது இந்த அடையாளங்களிலிருந்து ஏற்படுகிறது! அவன் யாராக விருக்கலாம்? ஏன் அவன் இங்கு வந்து ஒளிந்திருக்கவேண்டும்? அவனுக்கும் இந்த ஸம்பூரணத்திற்கும் என்ன ஸம்பந்தம்? இப்பொழுது அவன் எங்கே? மாயமாக வல்லவோ மறைந்து போயிருக்கிறான்!

ராஜசுந்தரம் முகத்தைச் சுளித்துக்கொண்டு, கோபக் குறியுடன் ஸம்பூரணத்தை ஏறயிறங்கப் பார்த்தான்.

“சின்ன எஜமானே! ராஜசுந்தரம்! கோபம்கொள்ள வேண்டாம்! பத்துமாதம் சுமந்து பெற்றதாய் அல்லவோ நான்! அவன் நிரபராதி! அவனைக்காட்டிக் கொடாதே! வேண்டாம்! வேண்டாம்!” என்று கூவிக்கொண்டு ஸம்பூரணம். ராஜசுந்திரத்தின் காலடியில் தொப்பென்று விழுந்து பிரக்ஞையற்றுக் கட்டைபோல் கிடந்தாள்.

இரண்டொரு நிமிஷம் பிரமித்து ஸ்தம்பித்து நின்ற ராஜசுந்தரமும், இழந்த தைரியத்தைத் திரும்பவும் கைக்கொண்டவனாய், ஸம்பூரணத்தைக் கவனித்தான். யாதொரு அபாயமுமில்லை. இரண்டொரு நிமிஷத்தில் அவளுக்குப் பிரக்ஞை வரும் என்றறிந்ததும் அவன், அவள் விஷயத்தில் தான் செய்யக்கூடிய உதவியாதுமில்லையென்றதை உணர்ந்து,அவ்வறையைப் பரிசோதனைசெய்யப்புகுந்தான்.

இளிக்கூட்டறையின் அமைப்பைப்பற்றி ராஜசுந்தரத்திற்கு ஒன்றுமே தெரியாது. அவன் தகப்பனார் அதை

உபயோகித்துவந்தது மாத்திரமே அவனுக்குத் தெரியும். அதில் வந்திருந்து அதை கவனிக்க அவனுக்கு இதுகாறும் ஸந்தர்ப்பமும் அவகாசமும் ஏற்பட்டிருந்ததில்லை.

அந்த அறையின் ஒரு மூலையில் ஒரு சிறிய கறளாக் கட்டைபோன்ற அமைப்பு ஏற்பட்டிருந்தது. சுரங்க அறைகள் முதலியவைகளின் கதவுகளைத்திறக்கவும் மூடவும் அத்தகைய ஏற்பாடுகள் உண்டென்று அவன் கேழ்விப்பட்டிருந்தான். ஆதலால் அதைக் கையால் பலமாக அழுத்தினான். 'கடக்' என்ற சப்தம் ஏற்பட்டது. அது ஏற்பட்டதும் ஒரு சுழலும் சக்கிரத்தின் பிடி நழுவச் செய்யப்பட்டதாலேயே! அவ்வறையின் ஒரு பாகத்தில் பெரிய பட்டணங்களின் வீதிகளில் சாக்கடை வண்டலை வார ஏற்பட்டிருக்கும் "மான்ஹோல்" என்ற துவாரம்போன்ற ஒருதுவாரமிருந்தது. அதன் வட்டமான உட்கூடு நாலடி இருக்கும். பாறையைக் குடைந்து உண்டாக்கப் பட்டிருந்தது. அவ்வழியாக இறங்கிப்போகப் படிகள் ஏற்பட்டிருந்ததுடன் அக்கள்ளவழியை இருபக்கங்களிலுமிருந்து மூடவும் திறக்கவும் வேண்டிய ஏற்பாடுகளுமிருந்தன.

"ஸரி! இந்த அறையிலிருந்தவன் இந்த வழியாகத்தான் தப்பி ஓடியிருக்கவேண்டும். நான் அவனைத் துரத்திக்கொண்டு சென்று கண்டுபிடித்து விஷயங்களை அறிவேன்" எனத் தன்னுட் சொல்லிக்கொண்டு அப்படிகளின் வழியே இறங்கிச் சென்றான் ராஜசுந்தரம்.

சுமார் இருபது படிகளிருக்கும் அவன் இறங்கிச்சென்றது. இருட்டோ கும்பிருட்டு; குருடன்போல் கையால் தடவிக்கொண்டு அடி எடுத்து வைத்து அவைகளைக் கடந்து சென்றதும் ஒரு சச்சவுக்கமான இடைவெளி காணப்பட்டது. அதில் ஒரு பக்கத்தில் ஒரு குகையின் முகத்துவாரம் ஏற்பட்டிருந்தது. படிகளை இறங்கி வருகையில் இருந்தது போல் இங்கு அவ்வளவு இருட்டாக இல்லை. கொஞ்சம் வெளிச்சத்துடனே கூடியிருந்தது. தான் தேடிவந்தவன் அங்கு எங்கேயாவது ஒளித்துக்கொண்டிருக்கிறானோவென்று தேடிப்பார்த்தான். யாரையுமே காணோம். தென்பட்ட

குகைக்குள்ளும் சென்று அவனைத் தேடிப்பிடிப்ப தென்ற தீர்மானத்திற்கு வந்தான்.

ராஜசுந்தரம் சென்ற குகைவழி சுமார் கால் மைல் தூர மிருக்கலாம். அது ஒரு அழகிய அல்லி, தாமரை, செங்கழு நீர், நீலோத்பலம் முதலிய புஷ்பங்கள் பூத்து அழகாகத் துலங்கின ஒரு ஸரஸின் கரையில் கொண்டு வந்துவிட்டது. படகின் உதவியின்றி ஒருவன் அங்கிருந்து தப்பி ஓடி யிருக்க முடியாது. தான் துரத்திக்கொண்டு வந்தவன் ஒரு படகில் ஏறித் தப்பித்துக் கொண்டிருந்தாலோ பட்ட சிரமமெல்லாம் வீணை ஆகுமல்லவா! கரை ஓரமெல்லாம் பரிசோதனைசெய்து பார்த்தான். படகிருந்து உபயோகிக் கப்பட்டதைக் குறிக்கக்கூடிய யாதொரு அடையாளமும் காணும். கரை யோரமாகக் கொஞ்சதூரத்தில் ஒரு வீடு தென்பட்டது. ஊக்கத்துடன் கவனிக்கையில் அதற்குள் போக ஒரு ஒத்தையடிப் பாதையும் தென்பட்டது.

ஸரி! தப்பி ஓடினவன் அவ் வீட்டில்தானிருக்கவேண் டும். ஒத்தையடிப் பாதையும் சில நாட்களாக உபயோ கிக்கப்பட்டிருந்ததும் ஏற்பட்டது. ராஜசுந்தரமும் அவ் வழியாகச் சென்று லதா கிருஹத்தில் நுழைந்தான். அப் படி நுழைந்ததும் அங்கிருந்த மேடையிலிருந்தவனைப் பார்த்துத் திடுக்கிட்டு ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவ னும் தொப்பென்று ராஜசுந்தரத்தின் பாதத்தில் விழுந்து அவைகளைப் பற்றிக்கொண்டு, "சுவாமி! நான் நிரபராதி! வீணுக என்னைப் பிடித்துச்சென்று துன்பத்திற்குள்ளாக்க வேண்டாம்! என் எஜமானரது குடும்பத்தின் பெயர் கெடா மலிருக்க நான் என் உயிரைக் கொடுக்கத் தயார். ஆனல் உமது தாயார் எனது உயிரைக்காக்க உண்மையை உரைத்து எல்லாவற்றையும் வெளிப்படுத்தி விடக்கூடியவள். பழைய ஸங்கதிகளைக் கிளறினல் நன்மை ஏற்படாது. ஆத லால் நீங்கள் பேசாமல் திரும்பிச்சென்று விடுங்கள். நான் இந்த இடத்திலேயே ஒளிந்திருந்து என் தாயார் ஸம்ரக்ஷ ணையில் காலத்தைக் கழிப்பேன்!" என்றான்.

அப்படிக் கூறியவன் கருணுகரம்! ஸம்பூரணத்தின்

குமாரன்! ராஜசுந்தரம் எவனைத்தேடிக் கண்டுபிடிக்க இங்கு மங்கும் அலைந்து திரிந்து அங்கு வந்தானோ அவனே அந்த லதா கிருஹத்திலிருந்தது.

ஜானகீபதியைக் கொலை செய்தவனென்று நினைத்து எங்கெங்கும் தேடித்திரியும் போலீஸ்காரர்களுக்கும் துப்பறிவோர்களுக்கும் கருணாகரம் ஒளிந்திருந்த இவ்விடம் எப்படித் தெரியக்கூடும்! தெய்வச்செயலாய் ராஜசுந்தரம் அவ்விடத்தைக் கண்டுபிடித்திராவிடில் அனேக வருஷங்கள் வரைக்கும் கருணாகரம் தான் இருந்தவிடம் ஒருவருக்கும் தெரியாமல் காலங்கழித்திருப்பான் என்பது நிச்சயம்.

---

## அத்தியாயம் 7.

## ஜானகீபதியின் ரஹஸியம்.

தன் தந்தையின் அந்தரங்க காரியஸ்தன் கருணாகரத்தைப்பற்றி ராஜசுந்தரத்திற்கு நன்குதெரியும். தன் தந்தையைக் கொன்றது அவன் அல்லவென்று பற்பல தடவைகளில் அவன் போலீஸ்காரர் முதலானோர்களிடம் வற்புறுத்திக் கூறியிருந்தான். தன் தகப்பனாரின் ரஹஸியங்கள் ஒன்றுமே பாக்கியின்றி அவனுக்குத் தெரியுமென்ற நிச்சயமான நம்பிக்கையால் அவனைக் கண்டுபிடித்துத் தன் பிதாவின் விரோதிகள் யார் என்றும், யார் தான் அவரைக் கொன்றிருக்கலாமென்றும், தெரிந்துகொள்ள விரும்பினான். கருணாகரத்தைப் போலீஸாரிடம் ஒப்புவிக்கும் எண்ணம் ராஜசுந்திரத்திற்கு இல்லவே இல்லை.

கிளிக்கூட்டறை இப்பொழுது சுத்தம் செய்யப்பட்டு அதில் கருணாகரமும் ராஜசுந்தரமும் உட்கார்ந்திருந்தனர்.

ராஜசுந்தரம்:—அப்படியானால் நீ இப்பொழுது கூறிய என் பிதாவின் முதல் விவாஹம், அவர் சிலம்பச் சண்டையில் மாமனாரைக் கொன்றது, பிறகு மூத்தமனைவி இறந்ததைக்கேட்டுத் துக்கப்பட்டுச் சிலகாலம் சென்ற பிறகு என் தாயாரை இரண்டாம் விவாஹம்செய்து கொண்டது, இவைகளைத் தவிர்த்து வேறு ஒன்றுமே தெரியாதா?

கருணாகரம்.—ஒன்றுமே தெரியாது.

ராஜசுந்தரம்.—என் தகப்பனார் தேவிபுரத்திற்குப் போய்த் தனியாகத்தானே இருந்தார். அவர் கிட்டண்ணா வினால் சீட்டாட்டத்தில் மோசம் செய்யப்பட்டது, கிட்டண்ணாவின் குமாரி குமுதவல்லியை மணந்துகொண்டது, பிறகு சிலம்பச்சண்டை செய்து மாமனாரைக்கொன்றது முதலியன உனக்கெப்படித் தெரியும்?

கருணாகரம்.—அவரது ரஹஸியங்களில் எனக்குத் தெரியாதது ஒன்றுமே இராது. என்னை அவர் ஒரு காரியஸ்தனாக நடத்திவரவில்லை. ஒரு ஆப்த ஸ்நேகிதனாகவே நடத்திவந்தார். சில ஸங்கதிகளில் என்னை ஆலோசனை செய்யாமல் தானாக ஒன்றுமே செய்யமாட்டார். சில விஷயங்கள் நடந்த பின் என்னிடம் தெரிவிப்பார். சில விஷயங்களை அவர் சொல்லாமலே யூஹித்தறிந்து கொள்வேன்.

ராஜசுந்தரம்.—தேவிபுரத்து சம்பவங்கள் உனக்குத் தெரிந்த விதமோ?

கருணாகரம்.—அவர் அந்த ஊரில் இருக்கையில் நான் பல தடவைகளில் அவரைச் சந்தித்திருந்தேன். முக்கியமாய்ப் பணம் வேண்டியிருந்தால் என் விலாஸத்திற்குச் செக் அனுப்புவார். நான் அதை மாற்றிப் பணத்தைக் கொண்டுபோய் அவரிடம் கொடுத்து விட்டு வருவது வழக்கம். ஆதலால் அங்கு நடந்த விஷயங்கள் ஒவ்வொன்றும் எனக்கு நன்கு தெரிந்திருந்தது.

ராஜசுந்தரம்.—சிலம்பச் சண்டை நடந்தபோது நீ அங்கிருக்கும்படி நேர்ந்ததெப்படி?

கருணாகரம்.—தான் கிட்டண்ணாவின் புதல்வி குமுதவல்லியைக் காந்தர்வ விவாக விதிப்படி மணந்து கொண்டதாகவும், அவளை ஊருக்கு அழைத்துக் கொண்டு வருவதற்கும் இன்னும் மற்றச் செலவிற்கும் பணம் வேண்டும் என்றும் கடிதம் எழுதி, ஆயிரம் ரூபாய்க்குச் செக்கும் அத்துடன் வைத்து அனுப்பியிருந்தார். பணத்தை எடுத்துக்கொண்டு போன தினத்திற்கு முந்திய தினம் தான் சண்டையில் அவர் மாமனார் கொலையுண்டதாக அறிந்தேன்.

ராஜசுந்தரம்.—சண்டையில் மாமனார் கொல்லப்பட்டதும் எனது தந்தை என்ன செய்தார்?

கருணாகரம்.—எப்படியாவது தன் மனைவி குமுதவல்லியை ஆசுவாஸப்படுத்தித் தன்னுடன் கூட்டிக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று வெகு பாடுபட்டார். ஆனால் அந்த அம்மணி ஒரே பிடிவாதமாய் அவரைப் பார்க்க மறுத்துக் கன்னிகாமாடம் புகுந்தாள்.

ராஜசுந்தரம்.—என் தந்தைக்கு விரோதிகள் யாராவதிருந்தது உனக்குத் தெரியுமோ ?

கருணாகரம்.—ஜானகீபதிக்கா விரோதிகள்! யாருமே அவரிடம் விரோதம் பாராட்ட மாட்டார்களே! அவர் அவ்வளவு நல்லவராயிற்றே !

ராஜசுந்தரம்:—அப்படியானால் அவரைக் கொன்றது யாராக விருக்கலாம்?

கருணாகரம் கண்ணீர் சொரிந்துகொண்டு, "ஐயோ அதுதானே தெரியாது. என் உயிரைக் கொடுத்து அவரைக் காப்பாற்றி யிருப்பேனே!"

இவனுக்குத் தன் தந்தையிடம் ஏர்பட்டிருந்த வாஞ்சையை யறிந்த ராஜசுந்தரம் அவனைப் பார்த்து "கருணாகரம்! உனக்கு என் தந்தையின் மீதிருந்த அன்பு அபாரம். நானும் அவரது குமாரன். நாமிருவரும் சேர்ந்து அவரைக் கொன்றவனைக் கண்டு பிடித்துச் சிக்ஷிக்க முயற்சிப்போம். கொலை செய்த பாதகன் தூக்கிலிடப் பட்டாலொழிய என் மனக் கொதிப்பு ஆறாது."

கருணாகரம்.—சுவாமி! போனது போயிற்று. கொலை செய்த பெயர் வழியைக் கண்டு பிடித்துச் சிக்ஷைக்குக் கொண்டு வருதல் அருகில் நின்றுகொண்டு சாக்கடையில் கல் எறிவதை ஒக்கும், ஒன்றையும் கிளறாதிருப்பதே நலம்.

ராஜசுந்தரம்:—நீ கூறுவது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது! என் தாயாரும் நீ கூறியவாறே கூறினள். நீங்கள் இருவரும் என் தந்தை கொல்லப்பட்ட விஷயத்தை எனக்குக் கூறாமல் மறைக்கிறீர்கள்.

கருணாகரம்:—எங்களுக்கு ஸந்தேகம் ஏற்பட்டிருக்

பிறதே ஒழிய நிச்சயமாய்க் கூற இடமில்லை. அப்படி இடமிருக்கினும் அந்த ஆஸாமியைக் காட்டிக் கொடோம்.

ராஜசுந்தரம்:—ஏன்?

கருணாகரம்:—அவ்விஷயம் எங்களதே தவிர மற்றவர்களது அல்ல.

ராஜசுந்தரம் எவ்வளவோ நயத்திலும், பயத்திலும் கேட்டுப் பார்த்தும், கருணாகரம் கூறுவதாகக் காணோம்.

ராஜசுந்தரம்:—ஸரி! அதுபோகட்டும். அன்று வீணைக் கச்சேரி நடந்துகொண்டிருக்கையில், நீ என் பிதாவிடம் ஓர் கடிதம் கொண்டு வந்து கொடுத்தாயாமே?

கருணாகரம்:—ஆமாம், கொடுத்தேன்.

ராஜசுந்தரம்:—யாரிடமிருந்து வந்த கடிதம் அது?

கருணாகரம்:—உமது தந்தைக்குப் பரிச்சயமான ஒரு ஸ்திரீயினிடமிருந்து.

ராஜசுந்தரம்:—அந்த ஸ்திரீ யார்?

கருணாகரம்:—என்னைக் கேழ்க்காதீர்கள்.

ராஜசுந்தரம்:—அந்த ஸ்திரீ என் தந்தைக்குப் பரிச்சயமானவள் என்பது உனக்கெப்படித் தெரிந்தது?

கருணாகரம்:—அக் கையெழுத்திலிருந்து நான் அவள் எழுதிய கடிதங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறேன்.

ராஜசுந்தரம்:—அவள் என் தந்தையிடம் நட்புக் கொண்டவளா, விரோதியா?

கருணாகரம்:—நான் நிச்சயமாக சொல்ல முடியாது.

ராஜசுந்தரம்:—அவள் கொன்றிருக்கலாமோ?

கருணாகரம்:—அது எனக்கெப்படித் தெரியும்?

ராஜசுந்தரம்:—ஸரி! அந்தஸ்திரீ யாரென்று என்தாயாருக்குத் தெரியுமோ?

கருணாகரம்:—தெரியும்.

ராஜசுந்தரம்.—எப்படி?

கருணாகரம்.—அவள் உம் தந்தைக்கு எழுதி அனுப்பிய கடிதம் உங்கள் தயாரிடமே யிருக்கிறது.

ராஜசுந்தரத்துக்கு யாது செய்வதென்று தெரியவில்லை. எதையோ தன் தாயாரும் மறைக்கிறாள், இந்தக்

கருணாகரனும் மறைக்கிறான், எப்படியாவது அவர்கள் மறைப்பதைத் தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நிச்சயித்து அங்கிருந்து அகன்றான்.

---

## அத்தியாயம் 8.

### பங்கஜவல்லியிடம் இருந்த கடிதம்.

வசந்த ராஜபுரம் எக்ஸ்பிரெஸில் முதல் வகுப்பு வண்டியில் நமது ராஜசுந்தரம் உட்கார்ந்து கீழ்கண்ட வாறு சிந்திக்கலானான்.

"என்ன உலகம்! என்ன ராஜாங்கம்! என்ன ஜனங்கள்! என் பிதா! ஸகல நற்குண நற் செய்கைகளும் பொருந்தி யிருந்தவர்! இரவில் சில நண்பர்களுக்கும் பந்துக்களுக்கும் விருந்தளித்துக்கொண்டிருந்தவர்! மறுநாட்காலையில் தன தறையில் யாரோ ஒரு பாதகனால் கொலை செய்யப்பட்டுப் பிரேதமாகக் கிடந்தார்! அப்பாதகன் யதேச்சையாய்த் திரிந்துகொண்டிருக்கிறான்! கொல்லப்பட்டவரது இஷ்ட மித்திர பந்துக்கள், தங்களுக்கிழைக்கப்பட்ட தீங்கை,வாய் திறவாது ஸஹித்துக்கொண்டிருக்க வேண்டி யிருக்கிறது! என்ன அக்கிரமம்! என் மனம் கொதிக்கிறது! நான் சும்மா இரேன் நிச்சயம்! எனது தயாரிடமிருக்கும் கடிதத்தை எப்படியாகிலும் அடைந்து, அதை எழுதிய ஸ்திரீயாரென் றும், அவளுக்கும் எனது தந்தைக்கும் ஏற்பட்டிருந்த ஸம் பந்தா ஸம்பந்தம் இன்னதென்றும் தெரிந்து கொள்வேன்! பிறகு கொலை செய்தவனைப் பற்றிய துப்பு ஏற்படுவதும் நிச்சயம். அவன் எங்கிருந்தாலும் ஸரி! எவ்வளவு பணம் செலவழிந்தாலும் ஸரி! கண்டு பிடித்துத் தூக்கிலிட்டே தீருவேன்!" என்று அவன் அடிக்கடித் தனக்குட்சொல்லிக் கொண்டான்.

எக்ஸ்பிரெஸ் வஸந்த ராஜபுரம் ஸ்டேஷனில் வந்து நின்றது. ராஜசுந்தரம் ஆழ்ந்த ஆலோசனையிலிருந்ததால் அதை கவனிக்கவில்லை. ஒரு போர்டர் வந்து "ஸ்வாமி! கூலி" என்றதும் திடுக்கிட்டெழுந்தான். போர்டரை ஸா

மான்களைக் கொண்டு வரச்செய்து ஒரு வண்டியிலேறி வீடு வந்து சேர்ந்தான்.

இரண்டொரு நாட்கள்கழிந்தன. தன் தாயாரிட மிருந்த கடிதத்தை ஒரு திருடன் போல் அபகரிக்க அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. அவளையே நேரில கேட்டு வாங்கிப் பார்ப்பதே நலமென நினைத்தான். ஆனால் அவள் கொடுக்கமறுத்து விட்டால் யாது செய்வதென்ற பயம் ஏற் பட்டது. அவளைக் கேழ்க்காமலே அதை அபகரித்துப் பார்த்து அவளைக்கேட்டு அவள் தர மறுத்த பிறகு அப கரித்துப்பார்ப்பதே அனேக விதங்களில் நல்லதென்று அவன் புத்தியில் பட்டது. அப்படியும் போக முடியாமல் இப்படியும் போக முடியாமல் தவித்தான். கடைசியாகத் தன் தாயாரையே கேழ்ப்பதென்ற தீர்மானத்திற்கு வந்து அவளை அணுகி "அம்மா! என் தந்தையைக் கொன்றவ னைக் கண்டு பிடித்துச் சிக்ஷைக்குக் கொண்டு வரத்தான் உதவி புரிய மறுத்து விட்டாய்! அது போகட்டும். அன்று வீணைக் கச்சேரி நடந்தபொழுது கருணாகரம் என் தந்தை யிடம் கொடுத்த கடிதம் உன்னிட மிருக்கிறதல்லவா; அதைக் கொடு" என்றான்.

பங்கஜவல்லி.—அக்கடிதம் என்னிடமிருப்பதாக உனக் குச் சொன்னது யார்?

ராஜசுந்தரம்.—கருணாகரன்.

பங்கஜவல்லி.—நீ அவனிருக்குமிடத்தைக்கண்டு பிடித் தாயோ?

ராஜசுந்தரம்.—கண்டு பிடித்தது மாத்திரமா? அவ னுடன் நெடுநேரம் பேசி, என் பிதாவைப் பற்றிய பல விஷயங்களையும் தெரிந்துகொண்டேன்.

பங்கஜவல்லி.—என்னிடமிருப்பதாக அவன் கூறின கடிதத்தில் எழுதி யிருந்ததைப் பற்றி அவன் ஏதாகிலும் உன்னிடம் சொன்னானோ?

ராஜசுந்தரம்.—சொல்ல மறுத்து விட்டான்.

பங்கஜவல்லி.—யஜமானிடம் ஒப்பற்ற வாஞ்சையு

டையவன். நமக்காக அவன் செய்திருப்பது உனக்குத் தெரியாது.

ராஜசுந்தரம்.—அவன் போல் உத்கிருஷ்ட மானவன் கிடைப்பதரிதென்பதை ஒத்துக் கொள்கிறேன். நான் அக் கடிதத்தைக் கேட்டேனே அதற்கென்ன பதில்?

பங்கஜவல்லி.—கருணாகரம் வெளியிட மறுத்த ஸங்கதியை நான் வெளியிட்டு உனக்குத் தீங்கிழைக்கமாட்டேன்.

ராஜசுந்தரம்.—அவ்விஷயத்தில் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்கள் என்னைச் சேர்ந்தன.

பங்கஜவல்லி.—இருக்கலாம்; ஆனால் என் உயிருள்ளளவும் அக்கடிதத்தை உன்னிடம் கொடேன், என் பேச்சைக்கேள். அக்கடிதத்தைப் பார்க்க முயற்சி செய்யாதே. அப்படி அக்கடிதம் உன் கையில் கிடைத்தாலும் அதைப் படிக்காமல் கொளுத்தி விடுவது நல்லது.

சிலநாட்கள் கழிந்தன. தன் தாயார் சொன்னபடி பழைய குப்பையைக் கிளராமலிருப்பதே நலமென நினைத்தான். ஆயினும் தகப்பனாரது மரணத்தைப் பற்றி நினைத்து நினைத்துப் புண்ணாகிக் கொண்டிருந்த அவன் மனம் அவனை அப்படிச் செய்யவிடவில்லை. தன் தகப்பனாரது ஆவேசம் அவனைக் கொன்ற பாதகனைக் கண்டு பிடித்துத் தூக்கிலிட்டால் ஒழிய நிம்மதி யடையாதென அவனுக்கு அடிக்கடி எடுத்துக் கூறித் தூண்டிற்று. தன் ஸ்தானத்தில் தன் தந்தை யிருந்தால் என்ன செய்வார் என ஆலோசித்துப் பார்த்தான். அவர் பழிக்குப் பழி வாங்குவார் என்ற தீர்மானத்திற்கு வந்து, தாயாரிடமிருந்த கடிதத்தைக் கவர்ந்து படித்துப் பார்த்து விஷயங்களைத் தெரிந்து கொள்வதே ஸரி யெனத் தீர்மானம் செய்து கொண்டான்.

ஒரு நாள் இராத்திரி நடு நிசியில் எழுந்து, தன் தாயார் ஸமான்கள் வைத்துப் பூட்டியிருந்த பெட்டியை மறு சாவியால் திறந்து அதிலிருந்து கடிதக் கட்டு ஒன்றை எடுத்து ஒவ்வொன்றாய்ப் பிரித்து வாசித்தான். கடைசியாகத்தான் தேடிய கடிதம் கிடைத்ததென நினைத்து அதை எடுத்துக் கொண்டு சென்று அங்கிருந்த நாற்காலிகளில் ஒன்றில் உட்கார்ந்து பிரித்துப் படிக்கலாமா வேண்டாமா வென்று வெகு நேரம் ஆலோசனை செய்தான். கடைசியாகப் படித்து தீருவதென் றெண்ணி பக்கத்து மேஜையின் மீதிருந்த மின்சார விளக்கை ஏற்றி கடிதத்தை உறையிலெடுத்து வாசித்ததும் அவன் தேகமாத்திரந்தம் நடுக்கமெடுத்தது. அம்மா! கருணாகரம்! இப்பொழுதல்லவோ உங்களது விசித்திரமான நடத்தைக்குக் காரணம் புரிகிறது! உங்கள் பேச்சைக் கேளாமல் ஏன் இக்காரியத்தைச் செய்யப் புகுந்தேன்! ஐயோ! ஐயோ! என்று கூவிக் கீழே சாய்ந்து ஸ்மரணை தப்பிப் போனான். பிறகு பிரக்ஞை வந்ததும், தான் தனது படுக்கையில் இருக்கக் கண்டு நான்கு பக்கமு சுற்றிப் பார்க்க இன்னொரு படுக்கையில் ஒரு நோயாளி படுத்திருப்பதாக நினைத்தான். அந்த நோயாளி அவன் தாயாரே.

இதற்குள் ஒரு வேலைக்காரன் அங்கு வர அவனை அருகில் கூப்பிட்டுத் தன் படுக்கையைத் தன் தாயாரின் படுக்கைக் கருகில் இழுத்துக் கொண்டுபோய் நிறுத்தும்படிக் கட்டளையிட்டான். அதில் படுத்திருந்த தன் தாயாரைப்பார்த்து ராஜசுந்தரம் "அம்மா! பாவியாகிய என்னை மன்னிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறினான்.

பங்கஜவல்லி.—நடப்பது நடந்தேதீரும். நீ தான் என்ன செய்வாய்! விதியையாரால் வெல்ல முடியும்? எனக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையை விட்டிறங்கி வெளியில் வந்தேன், என் அறையில் யாரோ நடமாடின மாதிரி சப்தம் கேட்டது. அங்கு சென்றேன். மின்சார விளக்குகளெல்லாம் எரிந்து கொண்டிருந்தன.

நான் படிக்கவேண்டாம் என்று சொன்ன கடிதமும் கையுமாக நீ மூர்ச்சைபோய்க் கிடந்தாய். நான்போட்ட கூச்சலைக்கேட்டு வேலைக்காரர்கள் ஓடோடியும் வந்து உன்னைத் தூக்கிக்கொண்டுபோய் உன்னை படுக்கையில் கிடத்தினர்.

ராஜசுந்தரம்.—நீ எனக்கருகில் பாயும் படுக்கையுமாக விருக்கும்படி எப்படி நேர்ந்தது?

பங்கஜவல்லி.—உன்னைப்பார்க்க வந்த நானும் மூர்ச்சை போக நேர்ந்ததும், என்னையும் படுக்கவைத்து, வைத்தியருக்கு "போன்" செய்தார்கள். அவர் வந்து சிகிச்சை செய்து போனார். எனக்கு முந்திப் பிரக்ஞை வந்தது. உனக்குச் சற்று நேரத்திற்கெல்லாம் பிரக்ஞை வந்தது. அவ்வளவே.

ராஜசுந்தரத்தைப் பிரக்ஞை போகும்படிச்செய்ய அவன் படித்த கடிதத்தில் என்ன வரையப்பட்டிருந்ததென்று தெரிந்துகொள்ள இதைப் படிப்பவர்கள் ஆத்திரத்துடன் கூடியிருக்கலாமாதலால் அதைப்பற்றி இங்கு கூறுவோம். வீணைக்கச்சேரி நடந்த தினத்தில்ஜானகிபதியினிடம் கருணாகரம் கொண்டுவந்து கொடுத்த கடிதம் தான் இப்பொழுது ராஜசுநதரத்தைப் படித்துப்பார்த்ததும் மூர்ச்சைபோகும்படிச் செய்ததென்று இதைப் படிப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

பம்பாபதி மந்திரம்.
27 நாச்சியார் கோவில் தெரு,
கும்பமீ 29௳

நான் மேல்கண்ட விலாஸமுள்ள விடுதியில் சாகுந் தருவாயில் இருக்கிறேன். உங்களைப்பார்த்துவிட்டுச் சாகப் பிரியப்படுகிறேன். என் குற்றங்களை மன்னித்து என் இஷ்டத்தை நிறைவேற்றுவீர் என்று நினைக்கிறேன். உடனே வந்தால் தான் என்னை உயிருடன் காணலாம்.

குமுதவல்லி.

குமுதவல்லி ஜானகிபதியின் மூத்தமனைவி பெண்பதை

ராஜசுந்தரமும் அவன் தாயாரும் யூஹித்தறிந்து கொண்டார்கள்.

ஒருவிஷயம் பிரகடனமாயிற்று. ஆனால் ஜானகிபதியைக்கொலை செய்தது யாரென்று ஏற்படவில்லை. குமுதவல்லி கொன்றிருக்கலாமென்ற ஸந்தேஹம் ஏற்படுகிறதே ஒழிய நிச்சயமாக ஒன்றும் தெரியவில்லை. இப்பொழுது அக்குமுதவல்லி எங்கேயிருக்கிறாள்? ஜானகிபதி கொலையுண்ட தினத்திலேயே இன்னொரு இடத்தில் கொலை செய்யப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டிருந்தவள் அக்குமுதவல்லி தானே! ஜானகிபதியை அவள் கொன்றிருந்தால் அவளைக் கொன்றது யார்?

சிக்கல் விடுபடுவதாகக் காணோம். இராஜசுந்தரத்தின் கவலை நாளுக்குநாள் அதிகரித்தது. ஒருநாள் அவன் தன தறையில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். ஒரு வேலைக்காரி ஓடோடியும் வந்து "சுவாமி சீக்கிரம் வாருங்கள்! அம்மாவுக்கு உடம்பு நோய் அதிகமாகவிருக்கிறது. மிரள மிரள விழிக்கிறார்கள்" என்றாள்.

கையுடன்வைத்தியரை அழைத்துவரும்படி ஆளனுப்பிவிட்டு ராஜசுந்தரம் தன் தாயார் இருந்த அறைக்கு ஓடி அவளை அணுகினான். அப்பொழுது அவளுக்கு இவ்வுலகப் பிரக்ஞையே இல்லை பங்கஜவல்லி உயிர் போய்ப் பிரேதமாய்க் கிடந்தாள்.

பங்கஜவல்லி இறந்து நாட்களும் கடந்தன. ராஜசுந்தரம் தன் தாய் தந்தையர்கள் இருவருக்கும் யமனாக ஏற்பட்ட பாதகனைக் கண்டுபிடித்துச் சிக்ஷைக்குக் கொண்டு வந்தே தீருவேனென்று சபதமும் செய்துகொண்டான்.

## அத்தியாயம் 9.

## தீவிபத்து

மேலே கூறிய சம்பவங்கள் நடந்த சின்னாட்களுக்குப் பின் ராஜசுந்தரம் கீழ்க்கண்டவாறு சிந்திக்கலானான். தான் தனது தகப்பனது முதல் மனைவி உயிருடனிருக்கையில்

பிறந்திருந்தது வாஸ்தவமேயாகில் அவரது சொத்துக்களில் தனக்கு யாதொரு பாத்தியதையுமே இல்லையென்றது நாட்டின் சட்டமென்று அவனுக்குத் தெரியும். தவிரவும் எல்லோரும் அவனைச் சுட்டிக்காட்டி "அதோ போகிறது யார் தெரியுமா? ஜமீன்தார் ஜானகீபதியின் வைப்பாட்டி மகன்" என்று ஏளனமாய்ப் பேசிக்கொள்ளவும் கூடும். ஆதலால் முதல் முதல் குமுதவல்லி சேர்ந்திருந்ததாகக் கேழ்விப்பட்ட கௌதமிகன்யாமடத்தில்போய் விசாரித்து அவளைப்பற்றிய உண்மையை அறிவதென்று தீர்மானத்திற்கு வந்தான்.

சிவசங்கரம் என்றவர் ஜானகீபதியின் குடும்பத்திய பிரஸித்திபெற்ற வக்கீல். அவர் தேறியிராத சட்டப்பரீக்ஷைகளே கிடையாது. அவருக்கு ஜானகீபதியிடம் பற்று அதிகம். ஜானகீபதிக்கும் அவரிடம் அத்தியந்தப் பிரேமையுண்டு. அவர் கொலையுண்டதைக் கேட்டதும் சிவசங்கரம் மிகவும விசனப்பட்டார் ராஜசுந்தரத்தையும் அவரது தாயாரையும் பல தடவைகளிற் சந்தித்து ஆறுதல் சொல்லியிருந்தார். பங்கஜவல்லி இறந்துபோன ஸமாசாரத்தைக் கேட்டதும் அதிக துக்கத்துடன் கூடினவராய் ராஜசுந்தரத்தைக் கண்டுபேசி அவரை ஆசுவாசப் படுத்தினர். பிறகு அவர் ராஜசுந்தரத்தைப் பார்க்க நேரிடவே இல்லை.

ராஜசுந்தரத்திற்கும் வக்கீல் சிவசங்கரத்தினிடம் அதிகப் பிரேமையும் நமபிக்கையும உண்டு. தான் தனது தகப்பனரது மூத்தமனைவியைப் பற்றிய விஷயங்களை அறிவதற்காகப் புறப்பட்டுப் போகுமுன் அவரைநேரில் கண்டுபேசி ஆலோசனை கேழ்க்கத் தீர்மானித்து காலை ஆகாரம் உண்டபின், தான் வழக்கமாக உட்கார்ந்து எழுதிப் படித்து காலங்கழிக்கும் அறைக்குட்சென்று மேஜையின்மேல் அன்றைய தபாலில் வந்த கடிதங்களைக் கையிலெடுத்து ஒவ்வொன்றுப்பிரித்து வாசித்துவருகையில் ஐந்தாறு கடிதங்களுக்குப்பின் வக்கீல் சிவசங்கரத்தினிடமிருந்து வந்தகடிதமிருந்தது. அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

மனமோஹன விலாஸ்,
சித்திரைமீ 19-உ

மகா-௱௱ ஸ்ரீ. ஜமீன்தார்ராஜசுந்தரத்திற்கு அட்டர்ணி சிவசிங்காரம் எழுதிக் கொண்டது. தங்கள் ஜமீன்தாரி விஷயமாகவும், இன்னும் தங்களது சொத்துக்களின் பகுதி, குத்தகைக்குவிடல், முதலிய சில்லரை விஷயங்களைப்பற்றி யும் நான் தங்களைக் கலந்து பேசிச் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. ஆதலால் இன்று மாலை 4 மணிக்கு நான் ஆபீசிலேயே தங்கள் வரவை எதிர்பார்த்திருப்பேன்.

இப்படிக்கு
தங்கள் விதேயன்
சிவசங்கரம்.

குறிப்பு:—துப்பறி நிபுணன் தலையாரித் தாண்டவ ராயனையும் இன்று 4-மணி சுமாருக்கு வரச்சொல்லி யிருக் கிறேன். அன்று சொன்ன விஷயத்தில் அவரது உதவி யைத்தேடவும் தாங்கள் தவறாது வந்தால் தான் நலம்.

மேற்படி கடிதத்தை வாசித்ததும் ராஜசுந்தரம் "ஸரி! ப்ழம் நழுவிப்பாலில் விழுந்ததுபோலவும், தேடப்போன மருந்து காலில் அகப்பட்டதுபோலவும் ஏற்பட்டுள்ளது இக் கடிதத்தின் வரவு! நானே வக்கீல் சிவசங்கரத்தைப் போய்ப் பார்க்க விரும்பி எப்பொழுது வரலாமென்று எழு திக்கேழ்க்க இருந்தேன், அவரே கால நிர்ணயம் செய்து எழுதியிருக்கிறார். இதுவே நான் எடுத்துள்ள காரியம் சரி வர நிறைவேறுமென்பதற்கோர் அறிகுறியுமாகும். தவிர வும் இந்தத் துப்பறிநிபுணன் தலையாரித் தாண்டவராயனை யும் நான் ஊரைவிட்டுப் போகுமுன் கண்டு பேசிப் போகக் கருதினேன். அதற்கும் இப்பொழுது அவகாசம் ஏற்பட் டிருக்கிறது" என்று தனக்குட் சொல்லிக்கொண்டான். பிறகு ஸ்நானஞ் செய்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு போஜனம் செய்தபிறகு சற்றுநேரம் படுத்து இளைப்பாறி னன். மூன்று மணி சுமாருக்கு இரண்டாந்தரம் கொஞ்சம் சிற்றுண்டியும் டீயும் உட்கொண்டு தனது பெட்டி வண்டியை எருதுகள் பூட்டித்தயார் செய்து கொண்டு வர உத்திர

விட்டான். எருதுகளின் கழுத்தில் கட்டியிருந்த மணிகளின் ஓசையினாலேயே வண்டிகட்டித் தயாராக விருப்பதை யறிந்து வண்டியேறி குறித்த 4-மணிக்கு ராஜசுந்தரம் வக்கீல் சிவசங்கரத்தின் கச்சேரிக்கு வந்து சேர்ந்தான். தலையாரித் தாண்டவராயனும் அங்கு வந்திருந்தான். ஜமீன்தாரி நிலங்களின் சம்பந்தமான விஷயங்கள் பேசி ஆலோசனை செய்து முடிவுசெய்யப்பட்டன. பிறகு ராஜசுந்தரம் தான் குமுதவல்லியைத் தேடிக்கொண்டு போகப் போவதாகக் கூறினான்.

சிவசங்கரம்.—குமுதவல்லியைத் தேடிக்கொண்டு போகப்போகிறாயா? எந்தக் குமுதவல்லி?

ராஜசுந்தரம்.—என் தகப்பனாரது முதல் மனைவி குமுதவல்லியைத் தவிர வேறு யாரை நான் தேடிச் செல்வேன் என்று நினைத்தீர்கள்?

சிவசங்கரம்.—உனது தகப்பனாரது முதல் மனைவி குமுதவல்லியா? அவள் இறந்து போய் எவ்வளவு காலமாயிற்று. அவள் உயிருடனிருந்தால் உன் தகப்பனார் வேறு விவாஹம் செய்துகொண்டு இருக்கமாட்டாரா? நீரும் பிறந்திருக்க மாட்டீரே? ராஜசுந்தரம் மனோ வியாகூலத்தினால் கண்டபடியெல்லாம் பேசவேண்டாம் இப்பொழுது உமது ஸபத்னீமாதா குமுதவல்லி உயிருடன் இருப்பதாக ஏற்பட்டால் உமது நிலைமை எத்தகையதாக இருக்குமென்று சற்று யோஜித்துப் பாரும்! தெய்வாதீனம்! அவள் இறந்துபோனதென்னமோ நிச்சயம்!

ராஜசுந்தரம்—நண்ப சிவசங்கரம்! உமக்கு என்மீதுள்ள வாஞ்சை எனக்குத் தெரியும். ஆதலால் தான் உம்மிடம் இவ்விஷயத்தைப் பற்றிக் கூறினேன்! நீர் சங்கதிகளை வெளியிடமாட்டீர் என்பதும் எனக்குநிச்சயம். இதோ இருக்கும் துப்பறி நிபுணர் தலையாரித் தாண்டவராயரது உதவியை நாடப்போவதால் அவருக்கும் இவ்விஷயம் தெரிந்திருக்கவேண்டியதே, நீங்கள் எல்லோரும் நினைத்திருப்பது போல் குமுதவல்லி இறக்கவில்லை.

சிவசங்கரம் அத்தியாச்சரியத்துடன் "நீங்கள் எதைக்

கொண்டு குமுதவல்லி உயிருடனிருக்கிறாள் என்று கூறு கிறீர்கள்'' எனத் தன்னிடமிருந்த கடிதத்தை ராஜசுந்தரம் அவரிடம் கொடுக்க அவரும் அதைப்படித்துவிட்டு, மிக்கக் கலவரத்துடன், ராஜசுந்தரத்தினிடம்கொடுக்கஅவன் அதை வாங்கி தலையாரித் தாண்டவராயனிடம் கொடுக்க, அவனும் அங்க லக்கத்துடன் வாசித்தான்.

மேலே கூறியுள்ள கடிதம் வீணைக்கச்சேரி நடந்த தினத்தில் கருணாகரம் ஜானகிபதியினிடம் கொண்டுவந்து கொடுத்த கடிதமே என்றது நாம் கூறாமலே ஏற்படக்கூடும்

ராஜசுந்தரமும். சிவசங்கரமும் தலையாரித் தாண்டவ ராயனும் இன்னது சொல்வது என்று தெரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு வெகுநேரம உட் கார்ந் திருந்தார்கள். கடைசியாகத் தலையாரித் தாண்டவ ராயன் "இனி நாம் செய்யவேண்டியதோ!'' என்று கேட் டான்.

சிவசங்கரம் ராஜசுந்தரத்தை நோக்கிக் "குமுதவல்லி இருக்குமிடத்தைத் தேடிக் கண்டுபிடிக்க நீங்கள் செய்யப் போகும் சூழ்ச்சி என்ன?;' என்றார்,

ராஜசுந்தரம்.—அவளிருந்ததாகக்கூறப்பட்டுள்ள கன் யாமடம் கௌதமிகன்யாமடம். அதன் மானேஜர் விசா லாக்ஷி அம்மாள். அவளைக் கண்டுபேசக் குமுதவல்லி அங் கிருக்கிறாளா இல்லையாவென்பதையும், அவளைப்பற்றி இன் னும் அறியக்கூடிய விஷயங்களையும் அறிந்துகொண்டு வரு வேன்.

சிவசங்கரம்:—தாண்டவராயனுக்கு இடப்போகும் வேலையோ?

ராஜசுந்தரம்:—எனது தகப்பனாரைக் கொன்றது யார் என்றறியும் வேலை.

சிவசங்கரம்.—அவரைக் கொன்றதுகுமுதவல்லியாகத் தானிருக்க வேண்டியதென்று ஏற்படுகிறதே.

ராஜசுந்தரம்—அவள் என் தகப்பனாரைக் கொன்றி ருக்கும் பக்ஷத்தில் அவளுக்கு அவரிடம் அத்தகைய துவே

ஷம் ஏன் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று அறிய விரும்பு கிறேன் அதை அவர் கண்டறியட்டும்.

தாண்டவராயன்—சிவசங்கரம்) ராஜசுந்தரம் கூறுவ தும் ஸரியே ஜானகீபதி கொலே செய்யப்பட்ட விஷயத்தில் நான் முன்னமே கொஞ்சம் கவனத்தைச் செலுத்தி யிருக்கி றேன். அதே தினத்தில் கொல்லப்பட்ட ஸ்திரீயினது கொலேக்கும் ஜானகீபதியினதுகொலேக்கும் ஸம்பந்தமிருக்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம். ஜானகீபதிபோய்ப் பார்த்துத் திரும்பியதாக ஏற்பட்ட ஸ்திரீ கொலேயுண் டிருந்த ஸ்திரீயாக ஏன் இருககப்படாது? தவிர அவளே அடக்கம் செய்யப் பிரயாசை எடுத்துக்கொண்டது நாக மணி என்ற ஒருவனும் அவனது மகள் பங்கஜாக்ஷியும் என்று ஏற்படுகிறது கொலேயுண்ட குமுதவல்லியாக இருக் கும் பக்ஷத்தில், இந்த நாகமணியும் அவனது மகள் பங்க ஜாக்ஷியும நமக்கு வேண்டிய துப்புக்கள் கொடுக்கலாம் அப்படி அவர்கள் உதவிபுரிய மறுத்தால், சதுர்வித உபா யத்தையும் உபயோகித்துப் பார்த்துவிடுவோம்!

ராஜசுந்தரம்—நண்ப தாண்டவராயா! இந்த வேலேயை ஒத்துக்கொண்டதற்கு மிக வந்தனம் செலவைக் கவனிக்க வேண்டாம் வீடு சென்றதும் ஆயிரஞ் ரூபாய்க்குச் செக் அனுப்புகிறேன். ஒரு விஷயம். கொலேயுண்ட ஸ்திரீ என் தகப்பனர் போய்ப்பார்த்த ஸ்திரீயென்றல் அவள் குமுத வல்லியாக விருக்கவேண்டும். அப்பொழுது அவளேக் கொன்றது என் தந்தையாக விருக்கலாமென்று சந்தேஹிக்க இடமுண்டு. அப்படியவளே அவர் கொன்றிருந்தால் அவரை அவள் எப்படிக் கொன்றிருக்கமுடியும்? புதிர் விடுபடுவ தாகக் காணேம். எல்லாவற்றிற்கும் முயற்சி செய்து பார்க் கலாம்.

* * * * *

ஒருநாட் காலேயில் ராஜசுந்தரம் கௌதமி கன்னிகா மடத்திற்குச்சென்று அதன் மானேஜர் விசாலாக்ஷி அம்மா ளேப் பார்த்துப் பேசவேண்டும் என்றுர். வாசல் காவல்காரி அவரை வெளியிலேயே இருக்கச்சொல்லி உள்ளேபோனுள்

பத்து நிமிஷங்களிற் கெல்லாம் விசாலாக்ஷி அம்மாள் வெளியே வந்தாள் ராஜசுந்தரத்தைப் பார்த்தது 'யார்? என்னவேண்டும்"? என்றாள்.

ராஜசுந்தரம்:—அம்மணி! சில காலத்திற்கு முன் குமுதவல்லி என்ற ஒரு ஸ்திரீ இம்மடத்தில் வந்து சேர்ந் தாளாம் அவளைப்பற்றிய விவரம் வேண்டும்.

விசாலாக்ஷி.—எனக்குத் தெரிந்த வரைக்கும் குமுத வல்லி யென்ற ஸ்திரீ ஒருத்தியும் இந்த மடத்திற்கு வந்த தில்லை. சந்தேஹமேன். இதோ பார்த்து நிச்சயமாய்ச் சொல்லிவிடுகிறேன்.

விசாலாக்ஷியம்மாள் உள்ளேபோய் அம்மடத்தில் வந்து சேர்ந்தவர்களது பட்டி ஒன்றைக் கொண்டுவந்து அதில் தேடிப்பார்த்தாள் குமுதவல்லி யென்ற பெய ரையே அதில் காணேம். என்ன செய்வான் ராஜசுந்தரம்! ஒன்று குமுதவல்லி அந்த மடத்திலேயே சேராதிராம லிருக்கலாம, அல்லது தன் பெயரை மாற்றிச்சொல்லிப் பதியவைத்துச் சேர்ந்திருக்கலாம். எப்படியிருந்தால் தான் என்ன! அவன் காரியம் நிறைவேறுவதாகக் காணேம்!

* * * *

கௌதமி கன்னிகா மடத்திற்கு அரைமணி தூரத்தில் சந்திரமௌளிபவனம் என்ற ஒரு சத்திரம் உண்டு. அதில் பிரயாணிகள் சில காலம் ஸௌகரியமாகத் தங்கியிருக்க லாம். ஸ்நானபான போஜனுதிகளுக்கு வேண்டிய ஸகல ஸௌகரியங்களும் அதில் உண்டு. அதில் தான் இறங்கி யிருந்தான் நமது ராஜசுந்தரமும்.

இராப்போஜனமானதும், திண்ணையில் உட்கார்ந்து தாம்பூலம் தரித்துக்கொண்டிருந்தான். எதிரில் பந்தல் போட்டு ஜலமதெளிக்கப்பட்டு ஜிலு ஜிலென்று இளந்தென் றல் இன்பமாய் வீச, தேஹ ஆரோக்கியத்தை அனுபவித் துக்கொண்டிருக்கையில் ஓர் வித இரைச்சலும், டப், டங் டப், என்ற சபதமும் காதில் விழுந்தது.

திண்ணையிலிருந்திறங்கி நாலுதிசைகளையும் கவனிக்க, கௌதமி கன்னிகா மடத்தில் ஏராளமான புகையும், சோக்

கப்பலை கொளுத்தினால் ஏற்படுவதுபோன்ற ஜ்வாலையும் காணப்பட்டது.

கௌதமி கன்னிகா மடத்தின் எதிரே ஒரு பெருத்த கும்பல் கூடிவிட்டது. கட்டிடத்தின் அருகே போக ஒருவரும் துணியவில்லை. மூங்கில்கள் வெடித்ததால் ஓட்டுத் துண்டுகள் பீரங்கியிலிருந்தடிக்கப்பட்ட குண்டுகள் போல் அதிவேகத்துடன் நாற்புறமும் சிதறின.

"ஐயோ! சிதாவைக்காணோமே! மூன்றாவது மெத்தையில் வடகோடி அறையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாளே!" என்ற கூச்சல் கேட்டதும் ஒரு வாலிபன் கூச்சலிட்டவளை யணுகி "எந்த அறைகாட்டு" என, அவளும் சுட்டிக் காட்சித்தறும் ஓடுகளையும், வெடிக்கும் மூங்கில்களையும், எரியும் உத்திரம் முதலியவைகளையும் கவனியமால், தன் உயிரை ஒரு துரும்பாக நினைத்து அக்கட்டிடத்தை அணுகினான். நாலாபக்கங்களிலும் சுற்றிப்பார்த்தான். சுண்ணாம்பு பூசுவதற்காக இரண்டு மூன்று ஏணிகள் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது அங்கு கிடக்கக்கண்டு, அதை எடுத்துச்சார்த்திக்கொண்டு ஏறி ஜன்னலின் வழியாக மூன்றாவது மெத்தையிலிருந்த வடகோடி அறைக்குள் புகுந்து விட்டான்.

ஸபாஷ் ஸபாஷ்! என்றார்கள் சிலர். என்ன தைரியம்! என்ன தைரியம்! என்றார்கள் பலர். "எங்கும் புகை சூழ்ந்து ஓரே ஜ்வாலையாக எரியும் அவ்வீட்டிலிருந்து அவன் உயிருடன் திரும்புவதென்பது முடியாத விஷயம்" என்றார்கள் அங்கிருந்தவர்களில் இரண்டொருவர்.

இதற்குமுன் ஏற்பட்டிருந்த சப்தமும், கூச்சலும் சட்டென நின்று விட்டது. எல்லோரது கண்களும் கவனமும் கௌதமி கன்னிகா மடத்தின் மூன்றாவது மெத்தையில் வடகோடி அறையின் ஜன்னலின் சென்றிருந்தது.

தெய்வாதீனம் ஜன்னலுக்குக் கம்பிகளில்லை. வாலிபன் புகையினாலும் பீதியினாலும் மூர்ச்சைபோயிருந்த ஒரு ஸ்திரீயை அனுபாஸமாய்த் தூக்கிக்கொண்டு ஜன்னலின்

வழியாக வெளிப்பட்டு ஏணியின் மேல்படியில் கால்வைத்து விட்டான். தப்ப அந்த ஒரு வழியின்றி வேறு வழியில்லை.

மேலே கூறிய வாலிபனது தீரச்செயலினால் தைரியம் கொண்ட பலர் ஏணிக்கருகில் வந்து கூடினர். வாலிபனும் படிப்படியாக இறங்கி ஜனங்களிடம் காப்பாற்றிக்கொண்டு வந்த ஸ்திரீயை ஒப்புவித்துத் தானும் மூர்ச்சைபோயினன்.

அடடே! ஜாக்கிரதை! ஜாக்கிரதை! என்ற கூச்சல் கிளம்பிற்று. வாலிபனும் ஸ்திரீயும் அருகிலிருந்த மரத் தடிக்குக்கொண்டு போகப்பட்டார்களோ இல்லையோ கௌதமி கன்னிகா மடத்தின் மூன்றாவது மெத்தையிலிருந்த வடகோடி அறை ஒரு ஆட்டம் ஆடி இடிபோன்ற சப்தத் துடன் இடிந்து விழுந்தது.

தன் உயிரைத் திரணமாக எண்ணி ஒருஸ்திரீயின் உயிரை மேற்கூறியவாறு காப்பாற்றிய வாலிபன் யார்? நமது ஜானகிபதியின் குமாரன் ராஜசுந்தரமே. அவ்விருவரும் சிகிச்சைக்கு வைத்தியசாலைக்குக்கொண்டு போகப்பட்டார் கள்.

## அத்தியாயம் 10

---

### உயிர்தப்பின சீதா

சென்ற அத்தியாயத்தில் கூறப்பட்ட ஸம்பவங்கள் நேர்ந்த ஒரு வாரத்திற்குப் பிறகு தன்வந்திரிவைத்திய சாலையைச் சேர்ந்த உத்தியான வனத்தில் ஒரு ஆலமரத்தடியில் போடப்பட்டிருந்த நாற்காலிகள் ஒன்றில் சீதா உட்கார்ந்திருந்தாள். தலைமயிர் நரைத்து அதிகம் இளைத்துப் போயிருந்தபோதிலும் முகத்தின் அழகு கொஞ்சமும் குறைந்திருக்கவில்லை. பாலியத்திலும் யௌவனத்திலும் அதிசயமான அழகு வாய்ந்தவளாக இவள் இருந்திருப்பாள் என்பதில் ஸந்தேகமே யில்லை. அவளுக்கு எதிரில் இன்னொரு நாற்காலியில் ராஜசுந்தரம் உட்கார்ந்திருந்தான்.

உயிரைக் காத்தவனும், உயிர் காக்கப்பட்டவளும்

அப்பொழுதுதான் முதல் முதல் ஸந்திதுப்பேச நேர்ந்தது.

சீதா:—ஹூம்! நீரா உமது உயிரை அலக்ஷியம்செய்து ஏன் உயிரைக்காத்தது ?

ராஜசுந்தரம்:—அம்மணி! என் செய்கையை எல்லோரும் அதிகம் புகழ்ந்து பேசுகிறார்கள். கண்ணின்முன் ஒரு ஸஹோதரன் அல்லது ஸஹோதரி அபாயத்திலிருக்கக் கண்டால் யார் தான் நான் செய்தமாதிரி செய்திருக்கமாட்டார் !

சீதா:—தீரத்திற்குத் தக்க அடக்கமும் உம்மிடம் இருக்கிறது. அஃதிருக்கட்டும். நாமிங்கு ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசச் சந்திக்கவில்லை. என் உயிரைக் காப்பாற்றினதற்காக நான் உமக்கு நன்றியறிவுள்ளவளாக இருக்க வேண்டுமென்பது உமது அபிப்பிராயமல்லவா ?

ராஜசுந்தரம்:—அவ்விஷயம் உங்களைப்பற்றியதே.

சீதா:—நீர் என் உயிரைக் காப்பாற்றியதற்கு உம்மைப் பூசிப்பதற்குப் பதிலாக நான் உம்மை துவேஷிக்கிறேன்.

ராஜசுந்தரம்:—எதனால் ?

சீதா:—நீர் என் உயிரைக் காப்பாற்றி எனக்கு அளவற்ற தீங்கை இழைத்திருக்கிறீர்.

ராஜசுந்தரம்:—அம்மணி! உமது ரஹஸியத்தை அறிய வேண்டுமென்பது என் கருத்தல்ல. உமக்கு இவ்வுலகை வெறுக்கும்படி நேர்ந்த ஸம்பவங்கள் எனக்குத் தெரிந்தால் உம்மைவிட அதிகமான கஷ்டங்களை அனுபவித்துள்ள ஆயிரம் உதாரணங்களை உமக்கு எடுத்துக்காட்டுவேன்.

சீதா:—நீங்கள் அவ்வுதாரணங்களில் ஒன்றுபோலும்?

ராஜசுந்தரம்:—ஏன் இருக்கக்கூடாது.

சீதா:—நான் விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்புவது அநுசிதமாகுமோ ?

ராஜசுந்தரம்:—ஒருகாலுமில்லை, நாடெங்கும் பரவியிருக்கும் ஸங்கதியை அது தெரியாமலிருக்கும் சிலரில் ஒருவராகிய உமக்கேன் கூறக்கூடாது ?

சீதா:—நான் கேழ்க்கத் தயாராக விருக்கிறேன்.

ராஜசுந்தரம்:—நான் கூறப்போவது அதிகமில்லை. எனது பிதா கொண்டிறந்தார். தாயார் மனோவியாகூலத்தினால் உயிர் துறந்தாள். அப்படியிருந்தும் நான் உயிருடனிருக்கிறேனல்லவா ?

சீதா.—கொலையுண்ட உமது பிதாவின் பெயரை என்னிடம் சொல்ல யாதேனும் ஆக்ஷேபனை யுண்டோ ?

ராஜசுந்தரம்:—ஆக்ஷேபனை என்ன இருக்கிறது ! ஒவ்வொரு சமாசாரப் பத்திரிகையிலும் கூறப்பட்டிருக்கும் அவர் பெயரை நான் உமக்குச் சொல்வதில் என்ன பாதகம்!

சிதா:—நான் கன்னிகாமடத்திலிருந்தமையினால் உலக ஸம்பவங்கள் ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆதலால் எனக்கு நீங்கள் யாருடைய குமாரர் என்று கூறினால் கேட்டுத்தெரிந்து கொள்வேன்.

ராஜசுந்தரம்:—துர்ப்பாக்கியனான நான் ஜமீன்தார் ஜானகிபதியின் குமாரன். எனபெயர் ராஜசுந்தரம்.

சீதா;—என்ன ! என்ன சொன்னீர் ! நீர் ஜானகிபதியின் புதல்வரா ! அடடா ! நான் யர்ருக்குப் பெருந்தீங்கிழைத்திருந்தேனோ அவரது மகன் என்னைத் தீயில் இறப்பதிலிருந்து காப்பது நேரிட்டால் அதைவிட வேறு என்ன தண்டனையைக் கடவுள் எனக்களிக்கமுடியும்! ஜானகிபதி! நீர் நன்கு என்மீது பழி தீர்த்துக்கொண்டீர் !

ராஜசுந்தரம்:—அம்மணி ! நீங்கள் யார் ? உங்களுக்கு என் பிதாவை நன்குதெரியும் போலிருக்கிறதே !

சீதா, பதில் சொல்வதேது ! மூர்ச்சைபோய்க் கீழே சாய்ந்தாள். ராஜசுந்தரம் சட்டென எழுந்து தாங்கியிராவிடில் அவள் மண்டை உடைந்து மாண்டிருப்பாள்.

ராஜசுந்தரம் போட்ட கூச்சலைக்கேட்டு வைத்தியசாலை வேலைக்காரர்கள் அங்கு ஓடி வந்தார்கள். ஸீதா கொண்டுபோய் ஒரு கட்டிலில் படுக்க் வைக்கப்பட்டாள்.

ஸங்கதி கேட்டதுமே, டாக்டர் தாமோதரம் ஓடோடியும் வந்து பார்த்துத் தலையை அசைத்து பிழைப்பதரிது! முன்னமே பலம் குன்றிப்போயிருந்த ஹிருதயம் சட்டென

வேலை செய்ய முடியாமல் ஓய்ந்து போயிருக்கிறது. எதையோ பார்த்தோ கேட்டோ திடுக்கிட்டிருக்கவேண்டும். என்ன நேர்ந்தது உங்களுக்குத் தெரியுமோ?

ராஜசுந்தரம்:—நான் அவளுடன் கூடவேதான் இருந்தேன். நான் பேசிக்கொண்டிருக்கையில் எனது பேச்சினால் ஏதோ முக்கிய சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்து மூர்ச்சித்ததாக நினைக்கிறேன்.

தாமோதரம்—அப்படித் தானிருக்க வேண்டும். முந்தியே தீப்பற்றிய வீட்டிலிருந்து தப்புமுன் அடைந்திருந்த பீதி அவளது ஹிருதயத்தை பலஹீனப்படுத்தி யிருந்தது; அத்துடன் இப்பொழுது நேர்ந்த ஏதோ பலமான மனக்கலவரம் அதை நன்கு வேலை செய்யச் சக்தியற்றதாக செய்துவிட்டதுபோல் காண்கிறது.

தனவந்தரி வைத்தியசாலையில் சீதா என்ற ஸ்திரீக்குச் செய்யக்கூடிய சிகிச்சைகளெல்லாம் செய்யப்பட்டன. ராஜசுந்தரம் முன்னுக்கு நின்று தாராளமாகத் தனது பணத்தை வாரி இறைத்துச் செலவுசெய்து அவளுக்குப் பிரக்ஞை உண்டாக்கப் பாடுபட்டான்.

இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன, ஆதியில் அதிக மெதுவாக மாத்திரம் அடித்துக்கொண்டிருந்த ஹிருதயம் கொஞ்சம் பலமாக அடிக்கத்தலைப்பட்டது டாக்டர் தாமோதரம் விளக்கு அணையுமுன் பிரகாசமாய் எரிந்து அணைவதுபோல் ஹிருதயம் கொஞ்சம் பலமாக வேலை செய்து சட்டென நின்றுவிடினும் விடுமெனப் பயந்தார்.

ராஜசுந்தரம்.—அவளுக்குத் திரும்பவும் பிரக்ஞை வருமோ வாராதோ?

தாமோதரம்.—ஹிருதயம் கொஞ்சம் பலமாக வேலை செய்யத்தொடங்கி இரத்த ஓட்டம் ஏற்பட்டால் நல்ல பிரக்ஞை வருவதும் உண்டு.

* * * *

அடுத்த நாட்காலையில் சீதாவுக்குத் தன் நினைவு வந்தது. பக்கத்திலிருந்த வேலைக்காரியைப் பார்த்து ராஜசுந்தரத்தை அழைத்துவரச் சொன்னாள். டாக்டர் தாமோ

தரம் முதலில் அவரை அனுப்ப ஆக்ஷேபித்தார். மறுபடியும் கலவரம் ஏற்பட்டு மூர்ச்சைபோனால் என்ன செய்வதென்று பயந்தார். ஆனால் சீதா ஒரே பிடிவாதமாய் அவரைப் பார்த்தே தீரவேண்டும் என்றாள். முதலில், அனுப்பினால் மறுபடியும் அவள் மூர்ச்சையாகலாமெனப் பயந்த தாமோதரம் இப்பொழுது அனுப்பாவிடில் அவளுக்கேற்படும் மனக்கலவரம் அவளை அபாயத்திற்குள்ளாக்குவது நிச்சயமென்ற தீர்மானத்திற்கு வந்தார். ஆதலால் ராஜசுந்தரமும் சீதாவிடம் அனுப்பப்பட்டார்.

சிதா, "அப்பா ராஜசுந்தரம்! [நான் உன்னை அப்பா ராஜசுந்தரம் என்று கூப்பிடப் பாத்தியம் உண்டு'] நான் பொல்லாதவள். உனக்கும் உன் தாய்தந்தையர்களுக்கும் பெருந் தீங்கிழைத்தவள் ஆதலால் நீ என் குற்றத்தைப் பொறுத்து என்னை மன்னிப்பது முடியாத காரியம். என்னை ஏன் காப்பாற்றினாய்?" என்று கூறிக் கண்ணீர் சொரிந்தாள்.

ராஜசுந்தரம்:—அம்மணி! செய்தபாவம் சொன்னால் தீரும் என்பார்கள். ஆதலால் நீங்கள் யார்? எவ்வாறு எனக்கும் என் தாய்தந்தையர்களுக்கும் தீங்கிழைத்தீர்கள்?

சிதா:—உன் தகப்பனார் உன்னிடம் எப்பொழுதாவது குமுதவல்லியென்றஒருத்தியைத்தான் மணந்துகொண்டிருந்ததாகச் சொல்லியிருநததுண்டோ?

ராஜசுந்தரம்:—இல்லை. ஆனால் அவர் கொலையுண்ட பிறகு அவ்விஷயம் எனக்கும் என் தாயாருக்கும் தெரிந்தது.

சீதா:—அப்படியா! நான்தான் அந்தக் குமுதவல்லி.

ராஜசுந்தரம்:—சீதா என்று கூப்பிடப்படுவதோ?

சீதா:—மற்றவர்களுக்குத் தெரியாமலிருக்க வைத்துக் கொண்ட பொய்ப்பெயர்.

ராஜசுந்தரம்.—நீங்கள் இறந்துபோனதாக வதந்தி எப்படி ஏற்பட்டது?

சீதா.—நான் அதைக் கட்டிவிட்டது மன்னியில் கௌ தமி கன்னிகாமடத்து மானேஜர் விசாலாக்ஷி அம்மாள் எழு. திய மாதிரி ஒரு கடிதமும் எழுதி உன் தகப்பனாருக்குப் போட்டுவிட்டேன்.

ராஜசுந்தரம்.—அப்படிச் செய்ததற்குக் காரணம்?

சீதா.—உங்கள் மீதெல்லாம் பழிவாங்கிக் கொள்ளவே

ராஜசுந்தரம்.—எப்படி?

சீதா·—நடுங்கி கொண்டு' நான் இறந்து போனதாக நினைத்து உன் தகப்பனார் வேறு கலியாணம் செய்து கொண்டு குழந்தைகுட்டிகளுடன் இன்பமாய் வாழ்கையில்'. நான் இறந்துபோகவில்லையென்று முன்னுக்குவந்து அவரது குடும்பத்தையும் இல்வாழ்க்கையும் கெடுத்தால் அது பழி வாங்கினதாக ஆகாதோ?

ராஜசுந்தரம்:—அப்பப்பா! என்ன துரோக சிந்தனை யுடன் கூடிய ஏற்பாடு!

சீதா:—இப்பொழுது உனக்கு என்மீது அடங்காக் கோபமும் துவேஷமும் ஏற்படுகிறதல்லவா? இந்த விஷயங் கள் முந்தியே தெரிந்திருந்தால் என் உயிரைக் காப்பாற்றி இருக்கமாட்டாய் அல்லவா?

ராஜசுந்தரம்.—அம்மணி! எல்லோருமே கன்னெஞ்சம் படைத்தவர்களாக இருக்கமாட்டார்கள். இன்று சகல சங் கதிகளையும் கேட்டபிறகு கூட, மறுபடியும் நீங்கள் அபாயத் திலிருக்கக்கண்டால் நான் என் உயிரைக் கொடுத்து உங்க ளைக் காப்பாற்றத் தயங்கமாட்டேன்.

சீதா:—அப்படியானால் நீயும் உன் தாயாரும்என் துரோ கத்தை மறந்து என்னை மன்னிப்பீர்களோ?

ராஜசுந்தரம்—என் தாயார் மனைவியாகூலத்தால் காலம்சென்றுள். அவள் உயிருடனிருந்தால் என்ன செய் வாளோ எனக்குத்தெரியாது. என்னைப்பற்றிய வரைக்கும் உங்களுக்கு மனக்கவலை வேண்டாம்.

சீதா.—நீ என்னை மன்னித்தால் அதுவே போதுமானது. நான் மனைவியாகுலமின்றி இனிச்சாவேன்.

ராஜசுந்தரம்.—நான் சொல்வதால் உங்களுக்கு மன நிம்மதி உண்டாகக் கூடுமானால் ஆயிரமதரம் மன்னித்ததாகக் கூறுகிறேன்,

சீதா.—ராஜசுந்தரம்! கண் இருட்டுகிறது. இம்முயற்சி என்னைப் பலஹீனப்படுத்திவிட்டது. சீக்கிரம் பிராணன் போய்விடும். என்னிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது ஏதாவதிருந்தால் கேட்டுத் தெரிந்துகொள்.

ராஜசுந்தரம்.—அம்மணி! தாங்கள் என் தகப்பனாருக்கு உங்களை வந்து சந்திக்கும்படி எப்பொழுதாவது கடிதம் எழுதி அனுப்பினதுண்டோ?

சீதா.—என்னகேள்வி! நான் நீ என்னைக்காப்பாற்றிய தினத்திற்கு முந்திக் கன்னிகாமடத்தை விட்டு வெளியில் அடி எடுத்து வைத்ததுமில்லை. நான் இறந்துபோனதாக விசாலாக்ஷி அம்மா கையெழுத்துப்போட்டு எழுதிய கடிதத்தைத் தவிர்த்து வேறு கடிதம் உன் தகப்பனாருக்காகிலும் வேறு எவருக்காகிலும் எழுதினதுமில்லை.

O O O O

கொஞ்சநேரம் சென்றது. சீதா களைத்துப் போய்க் கண்மூடிப் படுத்திருந்தாள். பிறகு சட்டென கண்களைத் திறந்து மிரளமிரளப்பார்த்தாள். அப்பா ராஜசுந்தரம்! நீ இங்கே இருக்கிறாயா? என்றாள்.

“அம்மா! அம்மா! இதோ இருக்கிறேன். ஏன் அப்படி விழித்துப் பார்க்கிறீர்கள்.

சீதா:—ஒரே இருட்டாக இருக்கிறது. கண்களைக் கொண்டுபோய் சொருகுகிறது, மாரை அடைக்கிறது! அப்பா ராஜசுந்திரம்! அப்பா ராஜ...............

ராஜசுந்திரம் கூச்சல் போட்டான். டாக்டர் தாமோதரம் முதலானோர்கள் ஓடிவந்து பார்க்க, சீதா பிரேதமாய்க் கிடந்தாள். அவள் கைகளிரண்டையும் பற்றிக்கொண்டு ராஜசுந்தரம் கதறியழுது கண்ணீர் சொரிந்தான்.

சீதா என்ற குமுதவல்லிக்கு அவளது சக்களத்தி

மகன் ராஜசுந்திரம் தன் சொந்தத் தாயாருக்குச் செய்ததை விட எவ்வளவோ மடங்கு அதிகமாக அபரக்கிரியை முதலியவைகளைச் செய்து முடித்தான்.

ராஜசுந்திரத்தின் தகப்பனாரைக் கொன்றது குமுதவல்லி அல்ல. அல்லது வேறுயாராக இருக்கலாம். விஷயம் வெளிப்படுவதைக் காணோம்.

---

## அத்தியாயம் 11
## மெய்க்காதல்

பிரம்ஹகபாலபுரி என்ற ஊர், தேஹ ஆரோக்கியத்திற்கு எடுத்தவூர். நாலாபக்கங்களிலும் அழகிய மலைகளால் சூழப்பட்டுக் குளமும் குட்டையும தோப்பும் துறவும் உள்ள இடமாகத் துலங்கும ஊர் அஃதெனில் பொருந்தும். அவ்விடத்தில் உள்ள ஜலம் உலோக சம்பந்தம் வாய்ந்ததென்றும், ஆதலால் அது அநேகம் வியாதிகளை சொஸ்தப்படுத்தக்கூடும் என்றும் ஜனங்கள் அபிப்பிராயப்படுவதுடன், வைத்தியர்களும் அனேகம் நோயாளிகளை அங்கு அனுப்புவதும் உண்டு. சுற்றிலுமுள்ள மலைகளில் பற்பல அரிய ஓஷதிகள் இருக்கும் காரணம் பற்றி அவைகளின்மீது வீசிவரும் காற்று உடம்பிற்கு நல்லதென்று கூறுவாருமுண்டு. ஸஞ்சீவிமலை என்றபெயருள்ள ஒரு மலைத்தொடரின் பாகத்தில் செத்தவர்களை உயிர்ப்பிக்கக்கூடிய மருந்துச் செடிகள் இருப்பதாகவும் நினைக்கிறார்கள்.

குமுதவல்லியை அடக்கம் செய்து உத்தரகிரியைகள் முதலியவைகளைச் செய்து முடித்து ஊருக்குத் திரும்பிய ராஜசுந்திரம் நோயினால் பீடிக்கப்பட்டுச் சில நாள் பாயும் படுக்கையுமாக இருந்தான். நோய் நீங்கிக் கொஞ்சம் குணப்பட்டதும் வைத்தியர் அவனைப் பிரம்ஹகபால புரிக்குப் போய்ச் சிலகாலம் வஸிக்கும்படிக் கூற, அவனும் புறப்பட்டு அவ்வூரை யடைந்து மலைச்சருவில் அமைக்

கப்பட்டிருந்த இரண்டு பங்களாக்களிலொன்றில் வசித்து வந்தான். கொஞ்ச தூரத்திலிருந்த மற்றபங்களா காலி யாக இருந்தது.

பிரதி தினமும் காலை மலைகளில் ராஜசுந்தரம் தேஹ ஆரோக்கியத்திற்காக மலைச்சரிவுகளில் பற்பல திசைகளிலும் அலைந்து திரிவதுண்டு. ஒருநாள் சாயந்திரம் கூடாரம் போல் கவிந்திருந்த ஒரு பெரிய ஆலமரத்தடியில் சற்று நேரம் உட்கார்ந்து; சிரம பரிகாரம் செய்து கொள்ளச் சென்றான். ஒரு ஸ்திரீ அங்கு ஒரு பாறையின்மேல் உட்கார்ந்திருந்ததைக் கிட்ட நெருங்கினதும் கவனித்து யாரென்றறிந்து திடுக்கிட்டான். அங்கிருந்த ஸ்திரீ தனக்கு முன்னமேயே தெரிந்திருந்த நாகமணியின் புதல்வி பங்கஜாக்ஷி.

முதல் முதல் தன்னை நோக்கிவந்தது யாரென்றுபங்க ஜாக்ஷி கவனிக்கவில்லை. ராஜசுந்திரம் பக்கத்தில் வந்ததும் அடையாளம் கண்டு கொண்ட அவளது முகம் வெட்கத் தால் சிவந்தது. ஆயினும் புன்சிரிப்புடன அவனைப்பார்த்து "என்ன! ஜானகிபதிப்பிள்ளை குமாரன் ராஜசுந்திரமா? இங்கு உங்களைப் பார்ப்போமென்று நானும் என் தகப்பனாரும் நினைக்கவே யில்லையே!"

ராஜசுந்திரம்—சிரித்துக் கொண்டு "இந்த உலகம் அவ்வளவு பெரிதல்ல என்பார்கள்! அஃதிருக்கட்டும். நீ கூறுவதிலிருந்து என் நண்பர் நாகமணியும் இங்கு வந்திருக்கிறதாக ஏற்படுகிறது. எப்பொழுது வந்தீர்கள்? என்ன விசேஷம்? எங்கு தங்கியிருப்பது?"

பங்கஜாக்ஷி:—இன்று காலைதான் வந்தோம். என் தகப்பனார் ஒரு நோயினால் வாதைப்படுகிறார். எவ்வளவோ வைத்தியம் பார்த்தாகிவிட்டது. கடைசியாக மிகப்பிரக் யாதிபெற்ற ஒருவர் இந்த பிரம்ஹகபாலபுரியில் சிலநாள் வசித்தால் நோய் தீரலாம் என்றார். ஆதலால் புறப்பட்டு வந்தோம். அதோமலைச்சரிவில் காவிச் சுண்ணம்பு பூசி

யதும் நீலச்சுண்ணும்பு பூசியதுமான இரண்டுபங்களாக்கள் காணபடுகின்றனவல்லவா? அவைகளில் தெற்குப்பக்கத்தி லிருக்கும் நீலச் சுண்ணும்பு பூசியுள்ள பங்களாவில் தான் இறங்கியிருக்கிறோம் உங்களைப்பற்றிய விஷயங்களோ?

ராஜசுந்தரம்,—எனக்கும் உடம்பு சரியாக இல்லை. என்னையும் வைத்தியர் இவ்விடம் அனுப்ப, வந்தேன். உங்கள் பங்களாவிற்கு அடுத்துள்ள பங்களாவில் இருந்து வருகிறேன்.

பங்கஜாக்ஷி—வந்து எவ்வளவு நாட்கள் ஆயிற்று?

ராஜசுந்தரம். ஒருவாரமாயிற்று. உனது தந்தை உன்னுடன் இங்கு ஏன் வரவில்லை?

பங்கஜாக்ஷி.—வேலைக்காரன் சாமான்களை உள்ளே ஒழுங்காகவைக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். என்னை முந்தி போகச்சொல்லி அரைமணி நேரத்தில் தானும் வருவதாகச் சொன்னார். வரும் நேரம்தான் அதோ வருகிறார்!

பங்கஜாக்ஷி சொன்னதும் வாஸ்தவமே. நாகமணி ஒரு ஊன்றுகோலுடன் அவர்களை நோக்கிவந்து கொண்டிருந் தார். கிட்டவந்ததும் பங்கஜாக்ஷி எதிர்கொண்டு ஓடி "அப்பா! நம்மைப்போலவே தேஹ ஆரோக்கியத்தி நிமித் தம் இங்கு வந்திருப்பது யார் தெரியுமோ?" என்றாள்.

நாகமணி:—குழந்தாய்! எனக்கெப்படித் தெரியும்? நான்தான் இதுவரைக்கும் வீட்டைவிட்டு வெளியில் அடி எடுத்துவைக்க முடியவில்லையே.

பங்கஜாக்ஷி.—இதோ நிற்பது யார் பாருங்கள். நாக மணிக்கு பார்வை குறைவு. கிட்ட வந்தால்தான் ஆஸாமி கள் தெரியும். ராஜசுந்தரத்தை யணுகி உற்றுப் பார்த்த தும் திடுக்கிட்டு, "என்ன? ஜானகிபதியின் புதல்வன் ராஜ சுந்தரமா" என்றார்.

ராஜசுந்தரம் சிரித்துக்கொண்டு, "அதே ஆசாமிதான் தங்கள் முன் நிற்பது! தங்கள் குமாரி சொல்லக்கேட்டு விஷயங்கள் தெரிந்துகொண்டேன்" என்றார்.

பிறகு அவர்கள் மூவரும் உட்கார்ந்து வெகு நேரம் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்து விடுதி சேர்ந்தார்கள். ராஜசுந்தரத்திற்குத் தன் தகப்பனார் கொலையுண்ட தினத்தில் கொல்லப்பட்டிருந்த ஸ்திரீயைப் பற்றிய விஷயங்களை நாகமணியைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவா அதிகமிருந்தபோதிலும் அவர் அதற்கிடங் கொடுக்கவில்லை.

நாட்கள் கழிந்துகொண்டே வந்தன. ராஜசுந்தரமும், நாகமணியும், பங்கஜாக்ஷியும் அடிக்கடி ஸந்தித்துப் பேசிப் பொழுதுபோக்க வழக்கப்பட்டுவிட்டார்கள்.

ஒரு நாள் நாகமணி தேக ஓய்வினால் வெளிக் கிளம்ப இயலாது உள்ளே ஒரு சிக்நாற்காயில் படுத்து நித்திரை போயிருந்தார். அப்பொழுது அங்கு வந்த ராஜசுந்தர மும் பங்கஜாக்ஷியும் பங்களாவுக்கு எதிராக இருந்த ஒரு ஆலமரத்தடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

பட்டம் பகல்போல் நிலா எங்கும் பரவியிருந்தது. இளந்தென்றல் இன்பமாய் வீசிக்கொண்டிருந்தது. பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்த ராஜசுந்தரம் ஏதோ நினைவுவர "அம்மணி! உங்கள் சொந்த ஊர் எது? உங்கள் தகப்பனார் யார்? அவருக்கு என்னவேலை? அவரது மனைவி யார்? அவள் எப்பொழுது எவ்வாறு இறந்தாள்? இவ் விஷயங்கள் சொல்ல முடியுமோ? ஆக்ஷேபனை யிருந்தால் வேண்டாம்" என்றான்.

பங்கஜாக்ஷி.—"அதியாச்சரியத்துடன், எங்கள் குடும்பத்தைப்பற்றிய விஷயங்கள் உங்களுக்கு எதற்கு?" என்றாள்.

ராஜசுந்தரம்:—காரணம் என்னவென்று என்றால்

சொல்ல முடியாது. எனக்கே ஏன் கேட்டேன் என்று ஏற்படவில்லை. உங்களைப் பற்றிய விவரங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் உதித்தது.

பங்கஜாக்ஷி:—எங்கள் குடும்ப விவரங்கள் எனக்கே தெரியாது. என் தகப்பனரைக் கேட்டால் ஸரியான பதில் கொடுக்கிறதில்லை. என் நான்காம் வயதில் என் தாயார் இறந்து போயினளாம். அது முதல் என் தகப்பனரே என்னைக் காப்பாற்றி வருகிறார்.

ராஜசுந்தரம்:—அவரது யோக க்ஷேமங்களைப் பற்றிக் கொஞ்சமேனும் தெரியாதோ?

பங்கஜாக்ஷி:—அவருக்கு எங்கேயோ ஏராளமான ஆஸ்தி இருந்ததை என் தாயார் இறந்ததும் விற்றுப் பணமாக்கிக்கொண்டு, பற்பல இடங்களில் வசித்து வந்து, கடைசியாக வஸந்தராஜபுரம் வந்து சேர்ந்ததாக அவர் ஒரு தரம் கூறக்கேட்டிருக்கிறேன்.

ராஜசுந்தரம்:—இன்னும் ஒரு கேள்வி. வஸந்தராஜ புரத்தில் ஒரு ஸ்திரீ கொலைசெய்யப்பட்டிருந்தாள். அவளை உன் தகப்பனர் அடையாளம் கண்டுபிடித்து அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார். அவ்விஷயங்கள் எல்லாம் உனக்கும் தெரியும். அவள் யார்? அவளுக்கும் உன் பிதாவுக்கும் யாது ஸம்பந்தம் தெரியுமோ?

பங்கஜாக்ஷி.—அவ் விஷயங்களெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

ராஜசுந்தரம்.—என் தகப்பனர் கொலையுண்ட தினமே அவளும் கொல்லப்பட்டிருந்தாள், துப்பறிவோர்கள் கவனித்தறிந்தவைகளை எனக்குச் சொன்னர்கள்.

பங்கஜாக்ஷி:—என் தகப்பனர் அடக்கம் செய்த ஸ்திரீ எங்களுக்கு எவ்விதத்திலும் பாத்தியப்பட்டவள் அல்ல. அனாதையாக இறந்தவர்களது பிரேத ஸமஸ்காரத்தால் பாபம் போகுமென்பது எனது தகப்பனரின் நம்பிக்கை.

ராஜசுந்தரம்.—அதெல்லா மிருக்கட்டும். நான் இப்பொழுது உன்னை ஒன்று கேழ்க்கிறேன். என் மீது கோபித்துக் கொள்ளாம லிருப்பதாகக் கூறினால் கேழ்க்கிறேன்.

பங்கஜாக்ஷி.—கேளுங்கள்!

ராஜசுந்தரம்.—எனக்கு உன்மீது அடக்க முடியாத காதல் ஏற்பட்டிருக்கிறது. நான் உன்னை மணந்துகொள்ள விரும்புகிறேன். நீ சொன்னாயாகில் இப்பொழுதே சென்று உன் தகப்பனார் நாகமணியைக் கேழ்ப்பேன்.

பங்கஜாக்ஷி.—முதல் முதல் ராஜசுந்தரத்தைப் பார்த்ததுமே அவளது மனம் அவன்பாற் சென்றிருந்தது. பிறகு அவனிடம் காதல் கொண்டிருந்த அவளும் ராஜசுந்தரத்தைப் போலவே பல தடவைகளிலும் அவனைப் பற்றி நினைத்துக் கனவுகள் கண்டிருந்தாள். இப்பொழுது அவள் நாணத்தால் குனிந்த தலையை நிமிர்த்தாமல் "உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள்" என்றதும், ராஜசுந்தரத்திற்கு வந்த ஸந்தோஷத்திற்கோ அளவில்லை. நாகமணி நித்திரையிலிருந் தெழுந்ததும், அவரை அணுகித் தனக்குப் பங்கஜாக்ஷியிடம் ஏற்பட்டிருந்த காதலை எடுத்துக்கூறித் தனக்கவளைக் கலியாணம் செய்து கொடுக்கும்படி கேட்டான். நாகமணி யாதொரு ஆக்ஷேபனையும் செய்யாமல் "பங்கஜாக்ஷிக்கு இஷ்டமிருந்தால் எனக்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை" என்றார். அவர் அப்படிச் சொன்னது ராஜசுந்திரத்திற்கு ஆச்சரியத்தை விளைவித்தது. அவ்வளவு சுளுவில் அவர் பங்கஜாக்ஷியைத் தனக்குக் கலியாணம் செய்து கொடுக்க ஒத்துக்கொள்வாரா என்று அவன் நினைக்கவே இல்லை.

பங்கஜாக்ஷி ராஜசுந்தரத்தைக் கலியாணம் செய்து கொள்ளத் தனக்கிஷ்டம் தான் எனக்கூற, நாகமணியின் அனுமதியின்மேல அக்காலத்திய நாகரீகப்படி யாதொரு

ஆர்ப்பாட்டமுமே இன்றிப் பிரம்ஹகபாலபுரியில் அவர்களி ருவரும் காந்தர்வ விவாகம் செய்துகொண்டார்கள்.

நாகமணி தன் மகளை ராஜசுந்தரம் மணக்கவிசைந்த தற்குக் காரணம் இனி விளங்கும்.

---

## அத்தியாயம் 12.

---

### ராஜசுந்தரமும் தாண்டவராயனும்.

பிரம்ஹகபாலபுரியில் இராஜசுந்தரமும் பங்கஜாக்ஷி யும் வாழ்ந்துவருமநாளில் ஒரு நாள் காலையில் அவர்களிரு வரும் வெளியே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில், ஸைக்கில் மீதேறிவந்த தந்தி சேவகன் அடிவாரத்தில் ஸைக்கிலை நிறுத்திவிட்டு அவர்களை நோக்கி வந்து தந் தியை அவனிடம் கொடுத்துவிட்டு மரியாதையாக ஒதுங்கி நின்றான். தந்தியைப் பிரித்து வாசித்ததும் ராஜசுந்தரம் தன்மனைவியைப் பார்த்துக் "கண்மணி பங்கஜம்! நான் உடனே புறப்பட்டு வஸந்தராஜபுரம் போய்வரவேண்டும். ஒருவாரத்தில் திரும்பிவிடுகிறேன்'' என்றான்.

புருஷனது அபிப்பிராயத்திற்கு மாறாக நடக்கப்பழகி யிராத அவ்வுத்தமியும், "உங்கள் இஷ்டம் போல் செய்யுங் கள். சந்திரோதயத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் சாதகப் பக்ஷிபோல உங்கள் வரவை எதிர்பார்த்திருப் பேன்" எனப்பதில் அளித்தாள். காத்திருந்த தந்திச் சேவகனிடம் தனக்கு வந்த தந்திக்குப்பதில் தந்தி எழு திக் கொடுத்தனுப்பிவிட்டு ராஜசுந்தரம் வஸந்தராஜபுரம் போய் வரத் தயாரானன்.

பங்கஜாக்ஷி தனது புருஷன் அவஸரமாகப் புறப்பட் டுப்போவது எதற்காகவென்று அவரே சொல்லட்டும் என் றிருந்தாள். ஆனால் அவன் அவளிடம் ஒன்றுமே அதைப் பற்றிச் சொல்லவில்லை. மொத்தமாகத்தனது வக்கீல் வரும்

படி தந்தியடித்திருப்பதாக மாத்திரம் சொல்லிவிட்டு மாமனாரிடமும் அனுமதி பெற்றுச் சென்றான்.

புருஷனிடமிருந்த பக்தியினால் பங்கஜாக்ஷி, திரும்பி வந்ததும் தன் கணவன் தன்னிடம் எல்லாவற்றையுங் கூறுவது நிச்சயமென நம்பியிருந்தாள். அவள் அப்படி நம்பி இருந்ததும் இயல்பே!

o o o o o o

வக்கீல் சிவசங்கரத்தின் மனமோஹன விலாஸம் என்ற கட்டிடத்திலிருந்த ஆபீசறையில் அவரும் தலையாரித் தாண்டவராயனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் ராஜசுந்தரமும் அங்கு வந்துசேர்ந்து ஒரு ஆஸனத்தமர்ந்தான். பரஸ்பர யோகக்ஷேமம் முதலியன விசாரித்தபிறகு, தனது நண்பர்களைப்பார்த்து "என்ன விசேஷம்? என்னை உடனே புறப்பட்டு வரும்படித் தந்தியடித்தது எதற்காக?"

தாண்டவராயன்.—சிவசங்கரம்! நீங்கள் சொல்லுகிறீர்களா அல்லது நான் சொல்லவா?

சிவசங்கரம்.—ஸமாசாரம் கொண்டு வந்தது நீங்களேயாதலால் உம்மிடமிருந்தே ராஜசுந்தரம் விஷயங்களைக் கேழ்ப்பது விசேஷமல்லவா!

தாண்டவராயன்.—இவ்வளவு சுற்றிப்பேசுவானேன்! வெட்டென "நீயே சொல்" என்று கூறி விட்டால் என்ன?

சிவசங்கரம்.—அப்படியே சொன்னதாக வைத்துக் கொண்டு சொல்லுமே.

ராஜசுந்தரம்.—நான் விஷயங்களைக் கேழ்க்க மிக்க ஆவலுள்ளதாக விருப்பதால் விஷயங்களைக் கூறுங்கள்.

தாண்டவராயன்.—எனது தொப்பதியும் வேலையில் நான் அடிக்கடி வஸந்தராஜபுரம் ஆஸ்பத்திரிகளுக்குப் போவது உண்டு. நேற்று அந்த நாச்சியார் கோவில் தெருக்

கோடியிலுள்ள வாராவதிக்கருகில் ஒரு கிழவியின் கால் மேல் குதிரைவண்டி ஒன்று ஓடி விட்டதாயும், அவளை அந்தக்கலியாணி ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சிகிச்சை செய்வதாயும் கூறக்கேட்டேன். அந்த ஆஸ்பத்திரிக்குப் போய் விசாரித்ததில் என்ன ஏற்பட்டது தெரியுமோ? வண்டியில் அகப்பட்டுக் காயப்பட்டவள் அங்கு கொண்டு வரப்பட்டது முதல், தான் இறந்துபோனால் என்ன செய்வதென்று பயந்தவளாய்த் தான் உயிர் துறக்கு முன் ஜமீன்தார் ஜானகீபதியின் குமாரன் ராஜசுந்தரத்தைப் பார்த்துச் சில விஷயங்களைக் கூறிவிட்டு இறக்கவேண்டுமென கூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறாளாம்,

*ராஜசுந்தரம்:*—அப்படியா! நீங்கள் யாராகிலும் அவளைக் கண்டு கேழ்க்கிறது தானே.

*தாண்டவராயன்:*—நான் சென்று கேட்டுப்பார்த்தேன் அவள் ஒரே பிடிவாதமாய்த் தான் கூறப்போவதை ஜானகீபதியின் குமாரனிடமேதான் சொல்ல முடியும் என்றாள்.

*ராஜசுந்தரம்:*—பிறகு நீங்கள் யாது செய்தீர்கள் ?

*தாண்டவராயன்*—உங்களுக்குத் தந்தி அடித்தேன்.

*ராஜசுந்தரம்:*—எனது பிதாவின் கொலையைப்பற்றிய துப்புகள் ஏதாவது அகப்படனவோ?

*தாண்டவராயன்:*—ஏதோ கொஞ்சம் அகப்பட்டது இன்னும் விசாரித்துக்கொண்டு மிருக்கிறேன்.

*ராஜசுந்தரம்:*—இந்தக்கலியாணி ஆஸ்பத்திரிக்கு நீங்கள் யாராகிலும் கூடவருகிறீர்களோ?

*தாண்டவராயன்:*—எதற்கு? நாங்கள் இங்கேயே உங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

*ராஜசுந்தரம்:*—ஆனால் அப்படியே செய்யுங்கள்.

---

# அத்தியாயம் 13

## ராஜசுந்தரமும் நாணிப்பாட்டியும்.

சென்ற அதிகாரத்தில் வண்டியில் அகப்பட்டதாகக் கூறப்பட்ட ஸ்திரீயின் பெயர் நாணிப்பாட்டி அவள் பரம ஏழை. பம்பாபதி மந்திரம் என்ற வீட்டில் அவள் ஊழியம் செய்து வயிறு வளர்த்து வந்தாள். மேற்கூறிய பம்பாபதி மந்திரத்தில் ஜானகீபதி கொலையுண்ட தினத்தில் இன்னொரு ஸ்திரீ கொலையுண்டிறந்தது. ராஜசுந்தரம் இப்பொழுது அவளை யணுகி "அம்மா! நான் தான் ஜானகீபதியின் குமாரன் ராஜசுந்தரம். நீங்கள் என்னிடம் ஏதோ சொல்லப் பிரியப்படுவதாகக் கேட்டு இங்கு வந்தேன்" என்றான்.

நாணிப்பாட்டி ஐயா! என் மீது கிருபைகொண்டு வந்ததற்கு அனந்தகோடி நமஸ்காரம். எனது கால் ஒடிந்து போயிற்று. நான் இனிப் பிழைக்கப்போவதில்லை. ஆதலால் எனது துஷ்கிருத்தியத்தினால் நான் அறிந்து அல்லும்பகலும் வாதைப்பட நேர்ந்திருக்கும் ரஹஸியத்தை உம்மிடம் சொன்னால் உயிருடனிருக்கையிலும் கொஞ்சம் என் மனோபாதை குறையும். சாகும்போதும் நிம்மதியாகச் சாவேன். செத்த பின்னும் என் ஆத்மா சாந்தியடையும்.

ராஜசுந்தரம்:—பாட்டி! நீங்கள் எது சொன்னாலும் அதைக்கேட்டுச் செய்யவேண்டியது எது உசிதமோ அதைச் செய்வேன். யாதொரு பயமும கவலையுமின்றிச் சொல்ல விரும்புவதை என்னிடம் சொல்லலாம்.

நாணிப்பாட்டி:—நாச்சியார் கோவில் தெருவில் பம்பாபதி மந்திரம் என்ற வீடு இருக்கிறதே தெரியுமோ?

ராஜசுந்தரம்:—தெரியும். அந்த வீட்டில் தானே என் தகப்பனார் கொலையுண்டிறந்ததினத்தில் ஒரு ஸ்திரீயும் கொலை செய்யப்பட்டிருந்தது.

நாணிப்பாட்டி:—அதே வீடுதான். அந்தக் கொலையைப் பற்றித்தான் நான் இப்பொழுது சொல்லப்போவது.

ராஜசுந்தரம்:—அவசரமில்லை. களைப்பு நேராதபடி ஸௌகரியம்போல் மெதுவாகச் சொல்லலாம்.

நாணிப்பாட்டி.—அந்த வீட்டில நான் வேலை செய்து கிடைக்கும் கூலியைக்கொண்டு வயிறு வளர்த்து வந்தேன். அவ்வீட்டில் ஒரு அறை காலி ஆயிற்று. அதை வாடகைக்கு விடப்படுமென்று வீட்டுக்காரன் ஒரு நோட்டீஸ் தொங்கவிட்டான். வெகு நாள் வரை யாருமே அதற்குக் குடி வரவில்லை. பிறகு ஒரு ஸ்திரீ ஒரு வண்டியில் அங்கு வந்திறங்கி அந்த அறையை மூன்று மாதம் வாடகைக்குப் பேசி, அட்வான்ஸாக மூன்று மாத வாடகையையும் கொடுத்து விட்டுக் குடியேறினாள். நான் அவளுக்கு ஜலம் கொண்டு வந்து கொடுத்தல், ஹோட்டலிலிருந்து சாப்பாடு வாங்கிக்கொண்டு வந்து போடுதல் முதலிய வேலை செய்து வந்தேன்.

ராஜசுந்தரம்.—அவள் பார்வைக்கு எப்படிப்பட்டவளாக இருந்தாள்?

நாணிப்பாட்டி.—அவளது பிரேதம் அடையாளம் கண்டு பிடிப்பதற்காக அடக்கம் செய்யாது காமதித்து வைக்கப்பட்டிருந்ததே யன்றோ!

ராஜசுந்தரம்.—ஆமாம்! நானும் போய்ப் பார்த்தேன். நான் கேழ்ப்பது அவளது தேகக்கூற்றைப் பற்றி அல்ல. கூட்டுவாழ்க்கையில் அவளது நிலைமை எத்தகையதாக இருந்திருக்கலாமென்றுதான் நான் அறிய விரும்புவது.

நாணிப்பாட்டி.—பணக்காரியாகவும், படித்தவளாகவும், நாகரீகம் வாய்ந்தவளாகவும் தான் காணப்பட்டாள்.

ராஜசுந்தரம்.—ஸரி! அதன்மேல்?

நாணிப்பாட்டி.—சென்ற கும்பமீ 29உ அவள் என்

னைத்தன் அறைக்குள் அழைத்து ரஹஸியமாக ஒரு கடிதத்தைக் கொடுத்து அதை ஜமீன்தார் ஜானகிபதியிடம் சேர்த்து விட்டு உடனே திரும்பிவந்து விடும்படிக் கூறினாள். சூரியன் அஸ்தமித்து எட்டுமணி சுமாருக்கு அவள் கொடுத்த கடிதத்துடன் ஜானகீபதியின் பங்களாவுக்குச் சென்று அவரது காரியஸ்தன் கருணாகரத்தினிடம் அக்கடிதத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பி ஓடோடியும் வீட்டிற்கு வந்து விட்டேன். அங்கு வீணைக்கச்சேரி பலமாய் நடந்து கொண்டிருந்தது.

ராஜசுந்தரம்.—கருணாகரன் உங்களை நன்கு கவனித்திராமலிருந்ததற்குக் காரணம்?

நாணிப்பாட்டி.—நான் வேண்டுமென்றே இருட்டில் நின்றுகொண்டு அவனிடம் கடிதத்தைக் கொடுத்ததும் கொடுக்காததுமாக ஓடி விட்டேன்.

ராஜசுந்தரம்.—அக்கடிதத்தில் எழுதியிருந்தது இன்னதென்று தெரியுமோ?

நாணிப்பாட்டி.—தெரியாது. ஆதலால் நான் ஜானகீபதிக்கும் என்னிடம் அவருக்குக் கடிதம் கொடுத்தனுப்பிய ஸ்திரீக்கும் என்ன சம்பந்தம், அவர்கள் சந்தித்து என்ன பேசுகிறார்கள் என்று அறியத் தீர்மானித்தேன்.

ராஜசுந்தரம்:—அவர்கள் ஸந்தித்துப் பேசினார்களோ?

நாணிப்பாட்டி:—ஆமாம் நான் கடிதம் கொடுத்துவிட்டுத்திரும்பிவந்து ஒரு நாழிகைக்கெல்லாம் ஒருவர் அந்தப் பம்பாபதி மந்திரம் என்ற வீட்டிற்கு வந்தார். அப்பொழுது எனக்கு அவர் யாரென்பது தெரியாது. பின்பித்தான் தெரிந்துகொண்டேன்.

ராஜசுந்தரம்.—வந்தவர் என்ன செய்தார்?

நாணிப்பாட்டி.—நேராக அந்தக் குமுதவல்லியிருந்த அறைக்குச் சென்றார்.

ராஜசுந்தரம்.—அந்த ஸ்திரீயின் பெயர் குமுதவல்லி என்றது உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

நாணிப்பாட்டி.—என்னிடம் கடிதம் கொடுத்தனுப்பின ஸ்திரீயை வந்தவர் குமுதவல்லி என்று கூப்பிட்டுக் கொண்டு அவளிருந்த அறைக்குட் சென்றதால் அவள் பெயர் குமுதவல்லியாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்தேன்.

ராஜசுந்தரம்.—அவர் கூப்பிட்டதற்கு முந்தி அவள் பெயர் இன்னதென்று தெரியாததற்குக் காரணமோ?

நாணிப்பாட்டி.—எல்லோரும் அவளைப்புதுக்குடி அம்மாள் என்று கூப்பிட வழக்கப்பட்டிருந்தோம்.

ராஜசுந்தரம்.—குமுதவல்லி என்று கூப்பிட்டுக் கொண்டு அவளிருந்த உள்ளுக்குள் சென்றபின் நடந்ததோ ?

நாணிப்பாட்டி.—நான் அங்கிருந்து போய் விட்டது போல் பாசாங்கு பண்ணி, அவர்கள் கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு பேச ஆரம்பித்ததும் கதவின் சந்தின் வழியாக ஒட்டுக்கேட்டேன்.

ராஜசுந்தரம்.—கேட்ட ஸங்கதிகளோ?

நாணிப்பாட்டி.—சந்திரவதனை என்றும், பொய்கை யெழுத்துப் போட்டனுப்பிய கடிதமென்றும், ஸம்பாஷணையின் சில பாகங்கள் என் காதில் விழுந்தது. அவர்கள் அதிக மெதுவாகப் பேசிக்கொண்டார்கள். மொத்தத்தில் ஏற்பட்டதெல்லாம் அந்த ஸ்திரீ அவரை எதையோ செய்யச்சொல்ல, அவர் மாட்டவே மாட்டேன் என்று கூறி விட்டு, மிகவும் கலவரத்துடன் வெளியே வருவதையறிந்து அங்கிருந்து மெதுவாக நழுவிவிட்டேன். அவர் வெளியே சென்று கொஞ்சதூரம் போயிருக்கலாம். நான் ஒளித்திருந்த இடத்திலிருந்து வெளியே வரப்போகும் சமயம்

யாரோ ஒருவர் சப்தம் செய்யாமல் அடிமேல் அடி எடுத்து வைத்து வருவதைப்பார்த்து அசையாமல் உட்கார்ந்திருந்தேன். அவரும் உள்ளேசென்று கதவைத்தாளிட்டுக் கொண்டு அவளுடன் ஏதோபேசினர். நான் ஒட்டுக்கேழ்க்கத் தீர்மானித்தேன். அவர் அவளது பெண்ணின் நன்மையைக் கோரியாவது துர்நடத்தையைவிட்டுத் திரும்பித் தன்னுடன் வந்து விடும்படிக் கெஞ்சினர். அவள் ஒரே பிடியாய் மாட்டேன் என்றாள். பிறகு கொஞ்சநேரம் அந்த அறைக்குள் நிசப்தமாக இருந்தது, பிறகு அந்த மனுஷன் மெதுவாகக் கதவைத்திறந்து கொண்டு வெளியே வரும் ஸமயம் நான் ஒளிந்துகொண்டேன்.

ராஜசுந்தரம்.—திரும்பி ஜானகிபதியே ஏன் வந்திருக்கப்படாது?

நாணிப்பாட்டி.—அந்த ஸந்தேகமே வேண்டாம், நான் அவரை அன்று கவனித்ததிலிருந்து இன்றைக்கும் அவரை ஆயிரம் பேருக்குள் அடையாளம் கண்டு பிடிப்பேன். அதெல்லாம எதற்கு! அவரே ஜானகிபதியைக் கொன்றது.

இப்பொழுது ராஜசுந்தரம் பிரமித்துப் போய்க் கொஞ்சநேரம் பிரக்ஞையற்றவன் போலிருந்தான். பிறகு தைரியத்தைக் கைவிடாமல் நாணிப்பாட்டியை விஷயங்கள் முழுவதையும் கூறி முடிக்கச் சொன்னன். அவளும் களைத்துப்போனதால் கொஞ்சம் நீர் பருகிச்சற்றுச் சிரம பரிகாரம் செய்துகொண்டு சொல்லத் தொடங்கினள்.

நாணிப்பாட்டி.—இரண்டாந்தரம் வந்தவர் யாரென்றறியவேண்டுமென்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. ஆதலால் அவருக்குத் தெரியாமல் அவர் பின்னலேயே சென்றேன். ஒரு கள்ளவழியின் மூலம் ஜானகிபதியின் வீட்டிற்குட் சென்றார். நானும் சென்றேன். அப்பப்பா! இப்பொழுதும் எனது உடல் நடுங்குகிறது! ஜானகிபதி ஒரு நாற்காலியில் கையில் தலையைச்சாத்திக்கொண்டு உட்கார்ந்திருந்தார். வந்தவர் ரத்தம் தோய்ந்திருந்த தனது

கையில் கொண்டு வந்திருந்தஒரு கத்திபோன்ற கட்டாரியால் அவரைக்கொன்றுவிட்டார். திகிலடைந்த நான் என்னையும் அப்பாவி கொன்றுவிட்டால் என்ன செய்வதெனப் பயந்து அங்கிருந்து சென்றவழியே திரும்பி விட்டேன். வீட்டில் வந்ததும், அப்பாவி வந்துபோன அறைக்குட் சென்று பார்க்க அதில் குடிவந்திருந்த ஸ்திரீயும் கொல்லப்பட்டிருந்தாள். மெதுவாக வெளியே வந்து ஒன்றுமே தெரியாதவள்போல் நான் வழக்கமாய்ப் படுத்துறங்கும் திண்ணை உள்ளில் போய்ப் படுத்துக்கொண்டேன்.

ராஜசுந்தரம்.—நீங்கள் போலீஸார் விசாரணை செய்தபொழுது இதையெல்லாம் ஏன் சொல்லவில்லை?

நாணிப்பாட்டி.—எனக்கு என்ன நேரிடுமோ என்ற பயத்தால் தான் நான் இதுவரைக்கும் வாயைத்திறக்கவில்லை. உம்மிடம் சொல்லிவிட்டுச் சாகவேண்டுமென்று இதுவரைக்கும் பிராணனைப்பிடித்துக் கொண்டிருந்தேன். பிராணனைப் பிடித்துக் கொண்டு இதுவரைக்கும் பேசினது; இதோ மார்பை அடைக்கிறது கண்கள் சொருகிறது. செத்த பின் என்னைப் போலீஸார் என்ன செய்ய முடியும்?

ராஜசுந்தரம் அங்கிருந்தகன்ற தினத்திற்கு மறுநாள் நாணிப்பாட்டி சிவலோகம் சேர்ந்தாள்.

---

## அத்தியாயம் 14.

## நாகமணி யார்?

வக்கீல் சிவசங்கரத்தின் ஆபீசுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில் ராஜசுந்தரத்தின் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிற்று. தனது மனைவி பங்கஜாக்ஷி கூறியதிலிருந்து அவளிடம் அவளது தகப்பனார் தனது விருத்தாந்தங்களைச் சரிவரக் கூறவில்லையென்று ஸந்தேகம் கொண்டிருந்தான். இப்பொழுதோ அவன் வேண்டு

மென்றே அவளிடம் பொய்சொல்லி விஷயங்களை மறைத்திருந்தான் என்பது அவனுக்கு ஊர்ஜிதப் பட்டது.

நாகமணி ஏன் தனது மகளிடம் பொய்சொல்லவேண்டும்? தவிர கொலை செய்யப்பட்ட ஸ்திரீயை அடக்கம் செய்ய அவன் ஏன் அவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்? தான் தனது மனைவியை அடக்கம செய்தது போல் துக்கித்துத் தன் மகளையும் தாயாரை அடக்கம் செய்ததுபோல் துக்கிக்குமாறு அவன் ஏன் கூறியிருக்க வேண்டும்? கொலையுண்ட ஸ்திரீ அவனது மனைவியாக இருக்கலாமோ? பங்கஜத்தின் தாயாராக விருக்குமோ?

கொலையுண்டவள் தனது மனைவியாக இருக்கின் நாகமணிக்கு ஏன் அவளை அடையாளம தெரியவில்லை? தெரிந்திருந்து தான் தெரியாததுபோல் நடித்தானோ?

நாணிப்பாட்டி ஒட்டுகேட்டதிலிருந்து சந்திரவதனு என்றும், பொய்க்கையெழுத்து என்றும், எனது தந்தையும் அந்த ஸ்திரீயும பேசிக்கொண்ட ஸம்பாஷணையின் பாகங்கள். எனது தகப்பனருக்குக் குமுதவல்லி என்று கையெழுத்துச் செய்த கடிதம் வீணைக் கச்சேரி நடந்த நாள் சாயந்திரம் கொடுக்கப்பட்டது. குமுதவல்லியோ என்னிடம் தான் அப்படி யாதொரு கடிதமும் எழுதினதில்லை என்றாள். ஆதலால் கொலையுண்ட ஸ்திரீயின் பெயர் சந்திரவதனு என்றதாக இருக்க, அவள் குமுதவல்லி என்று கையெழுத்துப் போட்டுக்கடிதம் என் தகப்பனருக்கு எழுதியனுப்பி அவரைத் தன்னிடம் வரும்படிச் செய்திருக்க வேண்டும். சந்திரவதனு என் தந்தையை ஏதோ செய்யச் சொல்ல அவர் அதைச் செய்ய மறுத்தது நாணிப்பாட்டி ஒட்டுக் கேட்டதிலிருந்து தெரிகிறது. அவள் என்ன செய்யச்சொல்லிக் கேட்டதை என் தந்தை மறுத்திருக்கக் கூடும். ஓஹோ! இப்படி யிருக்கலாமோ! பேஷ்! கிட்டண்ணுவுக்கு இரண்டு குமாரத்திகள் மூத்தவள் சந்திரவதனு, இரண்டாவது குமாரத்தி குமுதவல்லி. எனது

தந்தையை மணந்து கொண்டவள் மூத்த சந்திரவதனு என்றவள் நாகமணியைக் கலியாணம் செய்து கொண்டிருக்கவேண்டும். பிறகு அவனை வெறுத்துத் தான் ஆரம்பத்தில் காதலித்த எனது பிதாவைக் கபடமாய் வரவழைத்துச் செய்யத்தகாத காரியத்தைச் செய்யும்படி வற்புறுத்தியிருக்கவேண்டும் நற்குணமே வடிவெடுத்ததெனக் கூறத்தக்க சுபாவம் பொருந்திய என் பிதா அவளைக் கண்டித்திருக்கவேண்டும்.

என் பிதாவையும் இந்தச் சந்திரவதனு என்றவளையும் கொன்றது யாராகவிருக்கலாம்? நாகமணியாகத்தானிருக்க வேண்டும். ஏனெனில் நாணிப்பாட்டி ஒட்டுக்கேட்டதிலிருந்து "உனது பெண்ணின் நன்மையைக் கோரியாவது உனது துர்நடத்தையை விட்டு என்னுடன் வந்துவிடு" என்ற பேச்சின் பாகம் ஏற்படுகிறது. அவள் மறுத்ததும் ஏற்படுகிறது. அப்படியிருக்க அவன் கோபாவேசங் கொண்டு அவளை அங்கிருந்த கத்தியை எடுத்துக் குத்திக் கொன்றிருக்கவும் கூடுமேயன்றோ!

நாகமணி நிரபராதியான என் தகப்பனாரை ஏன் கொன்றிருக்கவேண்டும்! ஸரி! ஸந்தேஹத்தினால் தான்! என் தகப்பனார் தன் மனைவியின் துர்நடத்தைக்கு உடந்தையாயிருந்ததாக நினைத்து அவரைக் கொன்றிருக்கவேண்டும்.

நல்லகாலம்! என் கண்மணி பங்கஜாக்ஷிக்கு இவ்விஷயங்கள் ஒன்றுமே தெரியாது. இனிமேலும் ஒன்றுமே அவள் காதில் விழாதபடி பார்த்துக்கொள்வேன்.

நாகமணி! என்ன வேலை செய்துவிட்டாய் நீயும்!

ராஜசுந்தரம் ஏறிவந்த வண்டி வக்கீல் சிவசங்கரத்தின் ஆபீஸிருந்த கட்டிடத்தில் எதிரில் வந்து நின்றதும் அவன் இறங்கி உள்ளே சென்றான். அவன் வரவை வக்கீலும் தாண்டவராயனும் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

இருவரும் ஒரே மூச்சாக "என்ன தெரிந்தது" என்றூர்கள்.

ராஜசுந்தரம், தான் கேழ்விப்பட்டதையும் யூஹித்ததிந்ததையும் கூறித் தாண்டவராயன் கண்டறிந்த விஷயங்களைக் கூறும்படிக் கேட்டான்.

தாண்டவராயன்.—ஹூம்! விஷயங்கள் ஸ்வாஸ்யமாகத்தான் ஏற்படுகின்றன. இந்த நாகமணியின் பெயர் நாகமணி அன்று.

"அவன் பெயர் நாகமணி அல்லவா! அப்படியானல் அவன் யார்?" என்ருர்கள் வக்கீலும் ராஜசுந்தரமும்,

தாண்டவராயன்.—நமது நண்பர் ராஜசுந்தரம் யூகித்ததும் ஸரியே எனக் கொள்ளவேண்டும். வஸந்தராஜபுரத்தில் நேர்ந்த இரு கொலைக்கும் காரண பூதமானவர் தாரகாபுரி தனபாலனே!

தாரகாபுரி தனபாலனு? அது யார்?

தாண்டவராயன்.—நமது ஆசாமி நாகமணி தான் இந்தத் தாரகாபுரித் தனபாலன்.

ராஜசுந்தரம்.—நீங்கள் அவ்வாறு கூறுவதற்குக் காரணம்?

தாண்டவராயன்.—நீங்கள் ஜானகிபதியின் கொலையைப்பற்றிய வேலையை எனக்கிட்டதும் நான் தேவீபுரம் சென்றேன். ஜானகிபதியின் முதல் விவாகம் ஏற்பட்டது அவ்வூரில் ஒருவனுக்கு நேரும் ஸகல தீங்குகளும் மண், பெண், பொன் இம்மூன்றில் ஏதாவது ஒன்றிற்குச் சம்பந்தப்பட்டே இருக்கவேண்டுமென்பது எனது கொள்கை. மண், பொன் சம்பந்தமாய் ஜானகிபதிக்குக் கெடுதி நேரிடக் காரணமில்லை. ஆதலால் பெண்ணே அவர் கேடுற்றதற்குக் காரணமாக ஏற்படவேண்டுமென்று என் மனதில் பட்டது. தேவீபுரம் சென்று விசாரித்ததில் கிட்டண்ணுவின் இரு குமாரிகளின் சம்பந்தமான விஷயங்கள், ஏற்பட்டன. இரண்டாவது குமாரி குமுதவல்லி ஜானகிபதியை மணந்துகொண்டது, முதல்குமாரி சந்திரவதனு, ஜானகிபதியின் கலியாணமான இரண்டு மாதத்திற்குப் பிறகு

தாரகாபுரி தனபாலனை மணந்து கொண்டதும் குமுத வல்லி கௌதமி கன்னிகாமடம் புகுந்த விஷயந்தான் நமக்குத் தெரியுமே?

தனபாலனும், சந்திரவதனாவும் ஒரு பெண் பிறந்து நாலு வயதாகும் வரைக்கும் தாரகாபுரியிலேயே வசித்து வந்தார்களாம். பிறகு சந்திரவதனா புருஷனுக்கு அடங்காமல் தௌஷ்டியத்தனம் செய்து ஒருநாள் யாருக்குமே தெரியாது வீட்டைவிட்டுப் புறப்பட்டு ஓடிவிட்டனளாம். மனைவி அவ்வாறு ஓடிவிட்டதால் அவமானமும் மனோவியாகூலமும் ஏற்பட்ட தனபாலன் தனது ஆஸ்திகளையெல்லாம் வந்தவிலைக்கு விற்று எடுத்துக்கொண்டு, தனது குழந்தையுடன் அவ்வூரை விட்டகன்றனனும். தன் மனைவியைத் துரத்திச் சென்றான் தனபாலன் என்றது சிலர் அபிப்பிராயம். பேரை மாற்றி வைத்துக்கொண்டு எங்கேயாகிலும் காலத்தைக் கழிக்க எண்ணிச் சென்றான் என்றது சிலரது அபிப்பிராயம். அது மாத்திரமல்ல நாகமணியும் அவனது குமாரத்தியும், தனபாலனும் அவனது மகளுமாக இருக்கவும் காரணமுண்டு! அதற்கும் கொஞ்சம் வழி ஏற்பட்டிருக்கிறது. தேவீபுரத்தில் தனபாலன் தன் குழந்தைக்குப் பங்கஜாக்ஷி என்ற பெயரைத் தான் இட்டிருந்தனனும். தன் பெயரை மாத்திரம் மாற்றிவைத்துக்கொண்டு குழந்தையின் பெயரைப் பங்கஜாக்ஷி என்றே மாற்றாமல் விட்டிருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. நான் தேவீபுரத்திலிருந்து தாரகாபுரிக்குச் சென்றேன். அங்கு தெய்வாதீனமாக ஒரு புகைப்படம் பிடிப்பவனுடன் எனக்குச் சிநேகம் ஏற்பட்டது. ஒருநாள் நான் பொழுது போக்கப் புகைப்படங்கள் சொருகி வைக்கப்பட்டிருந்த ஒரு "ஆல்பம்" என்ற புத்தகத்தைத் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதிலிருந்த ஒரு படம் என் கவனத்தைக் கவர்ந்தது. சுமார் நான்கு வயது இருக்கக்கூடிய ஒரு குழந்தையுடன் ஒருவன் உட்கார்ந்திருக்க அப்படம் பிடிக்கப்பட்டிருந்தது. உடனே அது நமக்கு அவசியமாகுமென்று நினைத்து அதை விலைக்கு வாங்கி வந்துவிட்டேன்.

# அத்தியாயம். 15.

---

## ஸந்தேகம் அறல்.

வக்கீல் சிவசங்கரத்தினிடமும், தலையாரித்தாண்டவ ராயனிடமும் அனுமதி பெற்றுக்கொண்டு ராஜசுந்தரம் தன் வீடுவந்து சேர்ந்தான். சமயற்காரன் இலைபோட்டுப் பறிமாற உண்டு படுக்கச்சென்றான். அவனுக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை. பொழுது விடிந்ததும் பல் துலக்கு தல், முகம் கழுவுதல் முதலிய செய்கைகளாலும், குடித்த ஒரு சேர் காப்பியின் மஹிமையினாலும் அவனது முகத்தில் கொஞ்சம் களைவந்த தெனலாம்.

தன் தந்தையைக் கொன்றவனைக் கொன்று பழிதீர்த்துக்கொள்ள மிக்க ஆத்திரம் கொண்டிருந்தான். ஆனால் அவனது தந்தையைக் கொன்றிருந்தனோ அவனது சொந்த மாமனார். தனது உயிருக்குயிரான மனைவியின் தகப்பனார். யாது செய்வான்? தேனில் விழுந்த ஈயைப்போலத் தயங்கித் தத்தளித்தான்.

தெய்வாதீனம்! குலம் கோத்திரம் நன்கு விசாரியாமலும், யாரென்றதே தெரியாமலும், தான் மணந்து கொண்ட பெண்மணி, தன் தகப்பனாரது ஷட்டகனது பெண்ணே! தவிரவும் தனது தாயாரும் தனது மனைவியின் தாயாரும் சொந்த அக்காள் தங்கைகளும் அல்ல. ஆதலால் அக்காலத்திய நாகரீகப்படித்தான் கலியாணம் செய்து கொண்டது லோகவிருத்தமான காரியமாகவும் ஏற்படவில்லை. ஆயினும் தனது மனைவி தனது தகப்பனாரைக் கொன்றவனது புதல்வி.

கொட்டிக் கொட்டி அளந்தாலும் குறுணி பதக்காகுமோ! ராஜசுந்தரம் என்னதான் யோஜித்து யோஜித்து மூளையைக் கலக்கிக்கொண்ட போதிலும் நடந்துபோன ஸம்பவங்கள் நடந்துபோன ஸம்பவங்களே.

'தந்தி' என்று யாரோ சொன்னது ராஜசுந்தரத்தின் காதில் விருந்தது. அப்படிவிழுந்த சற்று நேரத்திற்கெல்லாம் அவனது வேலைக்காரர்களுள் ஒருவன் அவனிடம் ஒரு தந்தியைக் கொண்டுவந்து கொடுத்தான். ராஜசுந்தரமும் அதைப்பிரித்து வாசிக்க அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:-

அப்பாவின் தேகஸ்திதி அதிக அபாயமானதாக ஏற்பட்டு விட்டது. உடனே புறப்பட்டு வரவும்.

பங்கஜாக்ஷி"

o o o o

நாகமணி என்ற தாரகாபுரி ஜமீன் தனபாலனது தேஹஸ்திதி மிகவும் அபாயகரமானதாகத் தானிருந்தது, பாரிசவாயுவினுல் அடிபட்டுக் கைகால்களை அவரால் அசைக்க முடியவில்லை. வைத்தியர்கள் ஏழுநாள் கெடு இட்டிருந்தார்கள். இப்பொழுது ஆறுநாள் ஆகிவிட்டது. இருப்பது ஒரே நாள். இதுவரைக்கும் ராஜசுந்தரம் தான் தெரிந்துகொண்ட விஷயங்களைப் பற்றி அவரிடம் பேசத்துணியவேயில்லை. தெய்வச் செயலாய் நாகமணிக்குப் பிரக்ஞை இருந்துடன சாதாரணமாய்ப் பாரிசவாயுவிற் கியற்கையாக விருக்கும் குணமாகிய பேசமுடியாமல் நாக்கை இழுத்து விட்டிருப்பது அவரிடம் ஏற்பட்டிருக்கவில்லை.

பங்கஜாக்ஷியை வேணுமென்றே ராஜசுந்தரம் வீட்டை விட்டு வெளியே போகத் தந்திரம் செய்திருந்தான். வேலைக்காரர்களை அனுப்பமுடியாத ஒரு விஷயத்தையும் வேலையையும் கற்பித்து அவர்களை அனுப்பி யிருந்ததால் அவர்கள் திரும்பிவர ஒருமணி நேரத்திற்குமேல் பிடிக்குமென்றது அவனுக்கு நன்கு தெரியும். ஆதலால் நோயாளி படுத்துக்கொண்டிருந்த அறைக்குட் சென்று அங்கிருந்த தாதியை வெளியே போகச் சொல்லிவிட்டுக் கதவை நன்ருக உட்பக்கம் தாளிட்டுவிட்டான். தான் செய்ததையெல்லாம் மிக்க ஆச்சரியத்துடனும், பயத்துடனும் கவனித்து வந்த தன் மாமனுரை அணுகி ஒரு நாற்காலியை

இழுத்துப் போட்டுக்கொண்டு அருகில் அவருக்கெதிராக உட்கார்ந்து "மாமா நாகமணி" என்றான்.

நாகமணி.—என்ன ராஜசுந்தரம்?

ராஜசுந்தரம்.—உடம்பு எப்படி இருக்கிறது?

நாகமணி.—ரொம்பபலஹீனம்தான். இன்று பிராணன் போய்விடுமென்றுதான் நினைக்கிறேன்.

ராஜசுந்தரம்.—நான் தங்களை இரண்டொரு கேழ்வி கள் கேழ்க்கவேண்டும். பதில் சொல்லமுடியுமோ?

நாகமணி.—சொல்கிறேன் கேழ்க்கலாம்.

ராஜசுந்தரம்.—தங்களுக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் என்ன? நாகமணியா?

திடுக்கிட்ட நாகமணி, "ராஜசுந்தரம்! நீங்கள் விசா ரித்து என்ன கண்டறிந்தீர்கள்" என்றார்.

ராஜசுந்தரம்.—வெகு ஸங்கதிகள் தெரியவந்தன. சாகுந்தறுவாயிலிருக்கும் நீங்கள் உண்மையை உரைப்பீர் கள் என்றறிந்தே தான் நான் தங்களைக் கேழ்ப்பதும் இப் பொழுது.

நாகமணி:—எல்லாம் பங்கஜாக்ஷிக்கும் தெரியுமோ?

ராஜசுந்தரம்:—அந்தப் பயம் வேண்டாம். உங்களுக்கு பெற்றோர்களைப்பற்றிய விவரங்கள் தெரிந்து சாகும்வரைக் கும் மனவாதைப்படாது அவளைத் தடுத்துக் காப்பேன் நிச்சயம்.

நாகமணி.—ராஜசுந்தரம்! நீர் கூறியது என் வயிற்றில் பால் வார்த்தது போல் ஆயிற்று. இனி நான் கவலை இன் றிச் சாவேன். கேழ்க்க வேண்டியதை யெல்லாம் கேழ்க்க லாம். பதில் சொல்லத் தயார்.

ராஜசுந்தரம்.—நீங்கள் தாரகாபுரி ஜமீன் தனபாலன் என்றவர் அல்லவா?

நாகமணி.—ஆமாம். ஆமாம்.

ராஜசுந்தரம்.—எனது தந்தை ஜானகிபதியின் ஷட்ட கர்?

நாகமணி.—உண்மையே.

ராஜசுந்தரம்.—கிட்டண்ணாவின் மூத்தபெண் சந்திரவதனா என்றவளை மணந்துகொண்டீர்?

நாகமணி.—ஸந்தேகமே இல்லை.

ராஜசுந்தரம்.—எனது மனைவி பங்கஜாக்ஷி உமக்கு அந்தச் சந்திரவதனா என்றவளிடம் பிறந்தவள்.

நாகமணி—கேழ்ப்பானேன்.

ராஜசுந்தரம்—நாச்சியார் கோவில் தெருவில் பம்பாபதி மந்திரம் என்ற வீட்டில் கொலை செய்யப்பட்டிருந்த ஸ்திரீ உமது மனைவி சந்திரவதனா அல்லவா?

நாகமணி—உமக்குத்தான் எல்லாம் தெரிந்திருக்கிறதே. எரிகிற புண்ணில் எண்ணையைக் காய்ச்சி ஊற்றுவது போல் கேழ்விகள் கேட்டு ஏன் என்னைப் புண்படுத்தவேண்டும்?

ராஜசுந்தரம்.—உமது மனதைப் புண்படுத்த வேண்டுமென்பது என்கருத்து அன்று. நான் கேட்டறிந்தவைகள் எல்லாம் உண்மைதானா என்று நான் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளவேண்டியது அத்தியாவசியம்.

நாகமணி.—உமதிஷ்டம்போல் செய்யலாம்.

ராஜசுந்தரம்.—அந்தப்பிரேதம் உமது மனைவியினது பிரேதமென்று தெரிந்திருந்ததை நீர் ஏன் வெளிப்படுத்தவில்லை.

நாகமணி.—என்ன பிரயோஜனம்? தவிர பங்கஜாக்ஷியின் நன்மையைக்கோரி நான் செய்ததே உசிதமாகும்.

ராஜசுந்தரம்.—வாஸ்தவமே. அதிருக்கட்டும். எனது தகப்பனாரைப்பற்றி உமக்கென்ன தெரியும்?

நாகமணி.—அவர் தேவிபுரத்தி லிருந்தபொழுது எனக்கவரைத் தெரியும். தவிரவும் சிலம்பச் சண்டையில் கிட்டண்ணா கொல்லப்பட்டபொழுது நான் அருகில் தான் இருந்தேன்.

ராஜசுந்தரம்.—நீங்கள் வஸந்தராஜபுரத்தில் வந்து தங்கியதற்குக் காரணம் என்ன?

நாகமணி.—எனது மனைவியைத் தூரத்திக்கொண்டு வந்தேன். அவள் அவ்வூரில் தங்கியிருந்ததால் நானும் தங்கினேன். அவ்வளவே!

ராஜசுந்தரம்.—நீங்கள் உமது மனைவியை அவள் சென்ற விடமெல்லாம் துரத்திக்கொண்டு வந்ததின் நோக்கமோ?

நாகமணி அடக்கமுடியாத துக்கத்துடன் "எனது அருமைக் குழந்தையின் க்ஷேமத்தைக் கருதி அவளது துர் நடத்தையை யெல்லாம் மன்னித்து அவளை ஸ்வீகரிக்க எண்ணங்கொண்டு தான் நான் அவ்வாறு அவளை அவள் சென்றவிடமெல்லாம் பின் தொடர்ந்து வந்தது"

ராஜசுந்தரம்.-அப்படியானால் நீர் அவளைத் தொடர்ந்து வந்தது பழிவாங்கும் நோக்கத்துடன் அல்ல?

நாகமணி திடுக்கிட்டு "நீங்கள் அவ்வாறு கேழ்ப்பதற்குக் காரணமோ?" என்றார்.

ராஜசுந்தரம்.—காரணம் போகப்போக ஏற்படும்.

நாகமணி.—கடவுளுக்குப் பொதுவாகச் சொல்கிறேன். நான் அவளைப்பின் தொடர்ந்துவந்தது நயத்தாலும் பயத்தாலும் அவளைத் திருப்பி நல்வழிக்குக் கொண்டு வந்து வைத்து ஆதரிக்கவேண்டும் என்ற எண்ணத்துடனேயே ஒழிய வேறில்லை.

ராஜசுந்தரம்.—எனது பிதாவின்மீது உங்களுக்குத் துவேஷம் ஏற்பட்டிருக்கக் காரணம் உண்டோ?

நாகமணி.—அப்படிக்கொன்றுமே இல்லை.

ராஜசுந்தரம்.—அப்படியானால் நீர் ஏன் அவரைக் கொன்றீர்?

ராஜசுந்தரம் கேட்டதற்குப் பதில் சொல்வதற்குப்பதிலாக நாகமணி நடுங்கிப்போய் மூச்சையாயினன்.

தான் அப்படிச் சட்டென அவர் மீது குற்றஞ்சாட்டிக் கேட்டதற்கு ராஜசுந்தரம் அநுதாபப்பட்டான்.

வெகுநேரம் வரைக்கும் நாகமணி கண்களைத் திறக்கவே இல்லை. எங்கு பங்கஜாக்ஷி திரும்பிவந்து விடுவாளோ என்று ராஜசுந்தரம் நடுங்கினன். அவள் வருமுன் நாகமணியிட மிருந்து விஷயங்களைத் தெரிந்துகொண்டு விடவேண்டு மென்றது அவன் எண்ணம்.

பிரக்ஞைவந்ததும் நாகமணி, "ராஜசுந்தரம்! இங்கிருக்கிறாயோ போய்விட்டாயோ?" என்றான்.

ராஜசுந்தரம்:—எங்கும்போகவில்லை. இதோ இருக்கிறேன்.

நாகமணி.—கிட்டநெருங்கி உட்காருங்கள்! உரத்துப் பேசச் சக்தி இல்லை. வஸந்தராஜபுரத்து இருகொலைகளையும் பற்றிய ஸங்கதிகளும் உமக்குத் தெரிந்துவிட்டனவோ?

ராஜசுந்தரம்.—அனேகமாய்த் தெரிந்துவிட்டதுபோல் தான் நான் தெரிந்துகொண்டது நீங்கள் சொல்வதிலிருந்துதான் ஊர்ஜிதப்படவேண்டும்.

நாகமணி.—கொலை எப்படியும் வெளிப்பட்டு விடும் என்கிறார்களே அது உண்மையே. ராஜசுந்தரம்! நான் ஒரு மஹாபாபி. கொலைபாதகன். எனது பாபச் செயல்களைக் கேட்டு நீர் என்னை மன்னிப்பீரோ?

ராஜசுந்தரம்.—உமது புதல்வி எனது மனைவியே அல்லவோ! அவளுக்காக உம்மை மன்னிப்பேன்.

நாகமணி.—உமது பிதாவைக்கொன்ற என்னை நிச்சயமாய் மன்னிப்பீரா?

ராஜசுந்தரம்.—மன்னித்தாகிவிட்டது. அதன்மேல்?

நாகமணி.—அப்படியானால் யாதொரு பயமும் ஸங்கோசமுமே இன்றி நடந்த சம்பவங்களை எடுத்துக்கூறுவேன் என் மனைவி இந்த வஸந்தராஜபுரம் வந்துசேர்ந்த மறுநாளே நானும் இங்குமங்கும் துப்பு விசாரித்துக்கொண்டு வந்து சேர்ந்தேன். அவள் வந்து நாச்சியார் கோவில் தெருவில் பம்பாபதி யந்திரம் என்ற வீட்டில் குடிபுகுந்தாள்.

எனக்கோ சாப்பிடுவதையும் இங்குமங்கும் சுற்றித்திரிவதையும் விட்டு வேறு வேலையில்லை. எனக்கு மாத்திரம் கடவுள் செயலால் நற்குண நற்செய்கைகள் பொருந்தியுள்ள பங்கஜாக்ஷி பிறவாதிருந்தால் அந்தப்பாவி சந்திரவதனை எக்கேடு கெட்டு எருக்குமுளைத்துப் போகட்டுமென்று விட்டுவிட்டு யாத்திரையோ அல்லது தூரதேசமோ சென்று எனது வாணாளைப் போக்கிக்கொண்டிருப்பேன். அவள்,

கால் கட்டாக ஏற்பட்டிருந்ததாலும், நாலுபேரும் ஒரு சீர் கெட்டவளது பெண் என்று பங்கஜாக்ஷியைச் சுட்டிக் காட்டி அவமதிப்பார்களே என்ற பயத்தினாலும். நான் கூடியவரைக்கும் முயன்று அப்பாதகியை வழிக்குக்கொண்டுவர அவளிருந்த விடுதிகளைச் சுற்றித்திரிய வழக்கப் பட்டிருந்தேன். ஒருநாள் அந்தப் பம்பாபதி மந்திரத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்த நாணிப்பாட்டி ஒரு கடிதமும் கையுமாக வெளிப்பட்டாள். அவளைப் பின் தொடர்ந்து செல்லவேண்டுமென்ற எண்ணம் என்னைப் பிடித்துக்கொண்டது. அவள் கொண்டு சென்ற கடிதம் என் மனைவி சந்திரவதனையினால் எழுதி அனுப்பப்பட்டிருக்க வேண்டுமென்று நான் நம்பினேன். ஆதலால் அது யாரிடம் போய்ச் சேருகின்றதென்று அறிய ஆவல் கொண்டேன். எனக்கு ஜானகீபதியினது காரியஸ்தன் கருணாகரத்தை நன்கு தெரியும். ஆதலால் நாணிப்பாட்டி கொண்டு சென்ற கடிதம் அவளிடம் கொடுக்கப் பட்டதால் அது ஜானகீபதிக்கென்றது ஏற்பட்டது. நாணிப் பாட்டி சென்ற பின்னர் அங்கு ஓரிடத்தில் ஒளிந்து பார்த்துக் கொண்டிருந்தேன். ஜானகீபதி ஒரு கள்ள வழியின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து அதிக வேகமாகப் போனதைப் பார்த்து அவரைப்பின் தொடரத் தீர்மானித்தேன். கொஞ்சதூரம் சென்றதும் அவசரமாகச் சென்ற அவரது கையிலிருந்து ஏதோ கீழே விழுந்ததைப் பார்த்தேன். அவர் விழுந்ததைக் கவனிக்காமல் போனதால் நான் அதை எடுத்துப் பார்க்க, கள்ளவழிக் கதவின் சாவிகளே என அறிந்து ஜானகீபதியைப் பின் தொடர்ந்து சென்று அவர் பம்பாதி மந்திரத்தில் எனது மனைவி சந்திரவதனையைப் பார்த்துவிட்டு வெளியே வருமட்டும் அங் கோரிடத்தில ஒளிந்து கொண்டிருந்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் அவர் வெளியே வந்ததும் வந்த வழியாகவே தனது வீட்டை நோக்கிச் செல்ல, நானும் பம்பாதி மந்திரத்தில் எனது மனைவி இருந்த அறைக்குட் சென்றதும் அவள் திடுக்கிட்டாள். பிறகு குண்டு தைரியத்துடன்

என்னைப் பின் தொடர்ந்து வந்து ஹிம்ஸிப்பதேன்?" என்றாள், நான் அவளைக்கெஞ்சி என்னுடன் வந்து குடும் பத்தின் மானத்தைக் காப்பாற்றும்படிக் கேட்டேன். நாலு பேரும் அவளது குழந்தையை இகழ்ந்து பேச அவளது நடத்தை இடங்கொடுக்கும் என்றதை எடுத்துரைத்தேன். என்ன சொல்லியும் அவளது மனம் திரும்புவதாகக் காணோம். பிறகு ஹீனஸ்வரத்துடன் "எங்கேயாவது தூர தேசத்தில போய் உன் இஷ்டம்போல் இரு; இங்கிருந்து எங்களது மானத்தைக் கெடுக்காதே" என்றேன். அதற் கவள் என்னையும் எனது அருமைப் புதல்வியையும் தான் துவேஷிப்பதாகவும், அந்த துவேஷத்தைக் காட்டப்பஹி ரங்கமாகத் துன்மார்க்க நெறியில் ஒழுகித் தான் எங்களைத் தலையை வெளியில் காட்டமுடியாமல் செய்யப் போவதாக வும சொன்னாள். எனக்கும் அடக்கமுடியாத கோபமும் துக்கமும் வந்து விட்டது. "நீ செய்யப்போகும் வேலையில் உனக்கு உன்சோர புருஷர் ஜானகிபதி உதவிபுரியப் போகி றானோ?" என்று கோபத்தால் கேட்டேன். அதற்கவள் சிரித்துக்கொண்டு „ஆமாம்" என்றாள். அவள் சொன்னது எனது கோபாக்னியைக் கிளப்பி விட்டது. இப்பாதகியைக் கொன்றால் என்ன என்று நினைத்ததும் அங்கு மேஜையின் மீதிருந்த கத்தியை எடுத்து ஒரே குத்தில் அவளைக் கொன் றேன். பிறகு அதேகத்தியும் கையுமாகச் சென்று தன தறையில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த ஜானகிபதியையும் கழுத்தையறுத்துக் கொன்றேன்.

*    *    *    *

ராஜசுந்தரம் தான் நாகமணியுடன் பேசும்பொழுது வீட்டில் இருக்கப்படாதென்று ஸாமர்த்தியமாய் வெளியே போகும்படிச் செய்திருந்த பங்கஜாக்ஷியும் சற்று நேரத்திற் கெல்லாம் அங்கு வந்து சேர்ந்தாள். தகப்பனார் கண்மூடிப் படுத்திருக்கக் கண்டாள். தனது கணவனைக்கட்டி முத்த மிட்டு விட்டு "இதோ வந்து விட்டேன்" என்று கூறி வெளியே சென்றாள்.

நாகமணி அப்பொழுது கண் விழித்துக்கொண்டு ராஜசுந்தரம்! பங்கஜாக்ஷி வந்தாளோ?" என்று கேட்டார்.

"இப்பொழுதுதான் வந்தவள் நீங்கள் தூங்குவதாக நினைத்து வெளியிற் சென்றாள். இதோ வந்து விடுவாள் என்றான் ராஜசுந்தரம்.

நாகமணி.—ஜாக்கிரதை! குழந்தைக்கு ஒன்றுமே தெரியப்படாது! அஜாக்கிரதையினால் ஸங்கதிகள் வெளிப்பட்டு அவளது வாழ்நாள் வீணாகச் செய்யப்படப் போகிறது! மற்றவர்கள் ஒன்றையும் வெளிவிட மாட்டார்களே?

ராஜசுந்தரம்.—அதைப்பற்றி உங்களுக்கு யாதொரு விசாரமும் வேண்டாம்.

பங்கஜாக்ஷி உள்ளே வந்தாள். அப்பா என்றாள். யாதொரு பதிலையும் காணோம். நாகமணி பிரேதமாகக்கிடந்தார்.

தாயை விட்டுப்பிரிந்த கன்றைப்போலக் கதறி அழுத பங்கசாக்ஷியைப் பார்த்து ராஜசுந்தரம் என்ன பிதிர் வாஞ்சையுடன் கூடிய உத்தமி என்மனைவி" என்று தனக்குட் சொல்லிக்கொண்டு அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

நாகமணிக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளெல்லாம் சரிவர நடந்தேறின.

எத்தகைய துக்கந்தான் காலக்கிரமத்தில் ஆறிப்போவதில்லை. தகப்பனை இழந்த பங்கஜாக்ஷியின் துக்கமும் காலக்கிரமத்தில் ஆறிவிட்டது. சாகும் வரைக்கும் அவளுக்கு அவளது பெற்றோர்களது தீச்செயல்களும் குணகுணங்களும் தெரியவே தெரியாது. ராஜசுந்தரமும் விஷயங்கள் அவளுக்கு எட்டாமலிருக்கவேண்டியமுன் ஜாக்கிரதையை எடுத்துக்கொண்டிருந்ததால் அவ்வுத்தமி தனது தாய் தந்தையர்கள் கல்மஷ ரஹிதமான ஸத்குணம் வாய்ந்தவர்கள் என்ற நம்பிக்கையுடனே இருந்து வாழ்ந்து வந்தாள்.

---

முற்றிற்று.

---

மனோரஞ்சினி அச்சுக்கூடம், சௌகார்பேட்டை, சென்னை.